# அரையாண்டு
# அரசிறை நிலைமை அறிக்கை - 2017

2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரசிறை

முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டது.

மங்கள சமரவீர பா. உ.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

2017 யூன் 30 ஆந் திகதி

2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ பொறுப்புச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ்

கௌரவ நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரினால் வெளியிடப்பட்ட

அரையாண்டு அரசிறை நிலைமை அறிக்கை

2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் நியதிகளின் படி நிதி அமைச்சரானவர் வருடத்தின் யூன் மாதத்தின் இறுதித் தினத்தில் அரசிறை நிலைமை அறிக்கையினை பொதுமக்களுக்கு சமர்ப்பிக்கவும் அதனைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கும் கேட்கப்பட்டுள்ளார்.

இந்த அறிக்கையின் நோக்கம் அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையையும் அரசாங்கத்தின் அரசிறை உபாயத்தினையும் பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதாகும்.

அறிக்கையின் உள்ளடக்கமானது 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் போது அரசாங்கத்தின் வருமானம் செலவினம், காசுப்பாய்ச்சல் செயற்பாடுகள் மற்றும் பெறுகைகளின் செயலாற்றுகையினைக் கொண்டுள்ளது. அத்துடன், பேரண்டப் பொருளாதார செயலாற்றுகை, விலை அபிவிருத்தி வெளிநாட்டு நிதி உதவி, அரசாங்கப் படுகடன்,கொடுப்பனவு மீதி வெளிநாட்டு ஒதுக்கங்கள் என்பவற்றுடன் தொடர்பான 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கான இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதோடு அரசுடமை தொழில் முயற்சிகளின் செயலாற்றுகையினையும் விபரிக்கின்றது.

# உள்ளடக்கம்


| | | பக்க இல. |
|---|---|---|
| அத்தியாயம் 1 பொருளாதாரம் | | |
| | 1.1 பொருளாதார வளர்ச்சி | 1 |
| | 1.2 பணவீக்கம் | 5 |
| | 1.3 நாணயமற்றும் கடன் | 6 |
| | 1.4 பங்குச் சந்தை | 7 |
| | 1.5 வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள் | 8 |
| அத்தியாயம் 2 உலகப் பொருளாதாரபோக்கு | | |
| | 2.1 மேன்நோக்கு | 13 |
| | 2.2 பணவீக்கம் | 15 |
| | 2.3 வட்டி விகிதங்கள் | 16 |
| | 2.4 நாணயமாற்று விகிதங்கள் | 16 |
| | 2.5 அரசிறைப் பற்றாக்குறைகள் | 16 |
| | 2.6 அரசாங்கப் படுகடன் | 17 |
| | 2.7 சர்வதேச வர்த்தகம் | 17 |
| | 2.8 நுகர்வுப் பொருள்கள் விலைகள் | 18 |
| அத்தியாயம் 3 அரசிறை அபிவிருத்திகள் | | |
| | 3.1 மேன்நோக்கு | 21 |
| | 3.2 அரசாங்க வருமானம் | 24 |
| | 3.3 அரசாங்க செலவினம் | 34 |
| | 3.4 திறைசேரி செயற்பாடுகள் | 70 |
| அத்தியாயம் 4 அரசுடமைத் தொழில் முயற்சிகளின் செயலாற்றுகை | | |
| | 4.1 மேன்நோக்கு | 73 |
| | 4.2 பிரதானதொழில் முயற்சிகளின் சுருக்கப் பார்வை | 73 |
| | 4.3 பிரதானதொழில் முயற்சிகளின் மறுசீரமைப்பு முன்னெடுப்பு | 77 |
| அத்தியாயம் 5 வெளிநாட்டு நிதியளிப்பு | | |
| | 5.1 வெளிநாட்டு நிதியளிப்பு அர்ப்பணிப்புகள் | 83 |
| | 5.2 வெளிநாட்டு நிதியளிப்பு செலவிடலும் பயன்பாடும் | 86 |
| | 5.3 நிதியளிக்கப்பட்டு செலவிடப்படாத மீதி | 88 |
| | 5.4 வெளிநாட்டுக் கடன் நிலுவையும் மீள் கொடுப்பனவுகளும் | 89 |

## முக்கிய பொருளாதார குறிகாட்டிகள்

| குறிகாட்டி | காலம் | அலகு | பெறுமதி | |
|---|---|---|---|---|
| | | | 2016 | 2017 |
| மெய்த்துறை | | | | |
| பொருளாதாரவளர்ச்சி | முதலாம் காலாண்டு | % | 5.5 | 3.8 |
| விவசாயம் | முதலாம் காலாண்டு | % | 1.9 | (3.2) |
| கைத்தொழில் | முதலாம் காலாண்டு | % | 8.3 | 6.3 |
| சேவைகள் | முதலாம் காலாண்டு | % | 4.9 | 3.5 |
| பணவீக்கம் | மே இறுதியில் | % | 4.8 | 6.0 |
| பணவீக்கம் (சராசரி) | மே இறுதியில் | % | 2.7 | 5.4 |
| வேலையின்மை வீதம் | வருடாந்தம் | % | த.இ. | த.இ |
| தொழிற்படைப் பங்கேற்புவீதம் | வருடாந்தம் | % | த.இ | த.இ. |
| அரசிறைத் துறை | | | | |
| வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை | சன–ஏப் | ரூபா. மில் | -233,444 | -233,171 |
| மொத்த வருமானம் | சன–ஏப் | ரூபா. மில் | 472,689 | 589,019 |
| வரி வருமானம் | சன–ஏப் | ரூபா. மில் | 441,211 | 554,294 |
| வரியல்லா வருமானம் | சன–ஏப் | ரூபா. மில் | 31,478 | 34,725 |
| மீண்டெழும் செலவினம் | சன–ஏப் | ரூபா. மில் | 559,697 | 626,049 |
| அரசாங்க முதலீடு | சன–ஏப் | ரூபா. மில் | 151,978 | 201,012 |
| அரசாங்க படுகடன் | திசெம் இறுதியில் | ரூபா. மில் | 9,387.3 | த.இ. |
| வெளிநாட்டுத் துறை | | | | |
| ஏற்றுமதிகள் | சன–ஏப் | ஐ.அ.டொ.மில் | 3,450 | 3,569 |
| அதில், விவசாய ஏற்றுமதிகள் | சன–ஏப் | ஐ.அ.டொ.மில் | 722 | 852 |
| கைத்தொழில் ஏற்றுமதிகள் | சன–ஏப் | ஐ.அ.டொ.மில் | 2,714 | 2,701 |
| புடவைமற்றும் ஆடைகள் | சன–ஏப் | ஐ.அ.டொ.மில் | 1,710 | 1,626 |
| ஏனையவை | சன–ஏப் | ஐ.அ.டொ.மில் | 1,004 | 1,075 |
| இறக்குமதிகள் | சன–ஏப் | ஐ.அ.டொ.மில் | 6,055 | 6,883 |
| நுகர்வுப் பொருட்கள் | சன–ஏப் | ஐ.அ.டொ.மில் | 1,426 | 1,516 |
| இடைநிலைப் பொருட்கள் | சன–ஏப் | ஐ.அ.டொ.மில் | 3,019 | 3,692 |
| அதில், பெற்றோலிய உற்பத்திகள் | சன–ஏப் | ஐ.அ.டொ.மில் | 687 | 1,208 |
| முதலீட்டுப் பொருட்கள் | சன–ஏப் | ஐ.அ.டொ.மில் | 1,608 | 1,615 |
| வர்த்தக மீதி | சன–ஏப் | ஐ.அ.டொ.மில் | -2,606 | -3,314 |
| உல்லாசப் பிரயாணிகளின் வருகை | சன–மே | எண்ணிக்கை | 846,229 | 887,093 |
| சுற்றுலாத்துறை சம்பாத்தியம் | சன–மே | ஐ.அ.டொ.மில் | 1,451.8 | 1,521.9 |
| தொழிலாளர்கள் பண அனுப்புகை | சன–ஏப் | ஐ.அ.டொ.மில் | 2,371 | 2,222 |
| முதலீட்டுப் பங்குகள் (தேறிய) | சன–மார் | ஐ.அ.டொ.மில் | 567 | த.இ |
| மொத்த சென்மதி நிலுவை | சன–மார் | ஐ.அ.டொ.மில் | (720) | (176) |
| மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கங்கள் | ஏப்ரல் இறுதியில் | ஐ.அ.டொ.மில் | 6,221 | 5,048 |
| நாணயமாற்று விகிதம் (இறுதிமாதம்) | மே இறுதியில் | ஐ.அ.டொ. /ரூபா. | 145.75 | 152.71 |
| நாணயமாற்று விகிதம் (மாதாந்தசராசரி) | சன–மே | ஐ.அ.டொ. /ரூபா. | 145.65 | 152.33 |
| நாணயத்துறை அபிவிருத்தி | | | | |
| நிலையான வைப்பு வசதி விகிதம் | யூன் இறுதி | % | 6.50 | 7.25 |
| நிலையான கடன் வசதி விகிதம் | யூன் இறுதி | % | 8.00 | 8.75 |
| நியதிச்சட்ட ஒதுக்க தேவைப்பாடு | யூன் இறுதியில் | % | 7.50 | 7.50 |
| அடிப்படைகடன் விகிதமிடப்பட்ட வர்த்தக வங்கி சராசரி | யூன் இறுதியில் | % | 10.23 | 11.88 |
| கடன் விகிதமிடப்பட்ட வர்த்தக வங்கிச் சராசரி | ஏப்ரல் இறுதியில் | % | 11.66 | 13.52 |
| இலங்கையின் வங்கிக் கிடை வழங்கல் விகிதம் (01மாதம்) | யூன் இறுதியில் | % | 9.50 | 10.52 |
| திறைசேரி உண்டியல் விளைவு விகிதம் (91 நாட்கள்) | யூன் இறுதியில் | % | 8.86 | 9.60 |
| திறைசேரி உண்டியல் விளைவு விகிதம் (364 நாட்கள்) | யூன் இறுதியில் | % | 10.55 | 10.47 |
| நாணய வழங்கல் வளர்ச்சி ($M_{2b}$) | ஏப்ர2017/ஏப்ர2016 | % | 18.2 | 20.1 |
| தனியார்துறை கடன் வளர்ச்சி | ஏப்ர2017/ஏப்ர2016 | % | 28.1 | 20.0 |

**இலங்கை: தெரிவுசெய்யப்பட்ட சுட்டிகள்**

| குறிகாட்டி | காலம் | அலகு | பெறுமதி |
|---|---|---|---|
| **மின்சாரம்** | | | |
| மின் விநியோகமட்டம் | 2016 | % | 99.3 |
| **நீர்** | | | |
| பாதுகாப்பான குடிநீரைப் பெறுவதற்கான அடைவு | 2016 | சனத்தொகை% | 89.7 |
| குழாய் நீரைப் பெறுவதற்கான அடைவு | 2016 | சனத்தொகை% | 47.7 |
| **வீதிகள்** | | | |
| வீதி அடர்த்தி | 2016 | கி.மீ$^{2}$ | 2.0 |
| வீதிகளின் மொத்த நீளம் | 2016 | கி.மீ | 118,059 |
| **தொடர்பாடல்** | | | |
| | 2016 | 100 பேருக்கு | 135.7 |
| இணையதள வலைப்பின்னலுக்கான அடைவு | 2016 | 100பேருக்கு | 23.2 |
| **கல்வி** | | | |
| பொதுக் கல்வி | | | |
| ஆரம்ப பாடசாலைகளில் இணையும் வீதம் | 2016 | % | 95.9 |
| மாணவர்/ஆசிரியர் விகிதம் (அரசாங்க பாடசாலைகள்) | 2016 | எண்ணிக்கை | 18 |
| எழுத்தறிவுவீதம் (சராசரி) | 2015 | % | 93.2 |
| கணணி அறிவுவீதம் (முதல் 06 மாதங்கள்) | 2016 | % | 27.5 |
| பல்கலைக்கழகக் கல்வி | | | |
| மாணவர்/ஆசிரியர் விகிதம் | 2016 | எண்ணிக்கை | 17.5 |
| வயது குறிப்பீடு செய்யப்பட்டு இணையும் விகிதம் (வயது 19-23 வருடங்கள்) (அ) | 2016 | % | 6.9 |
| **சுகாதாரம்** | | | |
| வைத்தியசாலைகள் (மேற்கத்தேய மருத்துவம்) (ஆ) | 2016 | எண்ணிக்கை | 598 |
| கட்டில்களின் எண்ணிக்கை (ஆ) | 2016 | எண்ணிக்கை | 76,829 |
| வைத்தியசாலைக் கட்டில்கள் | 2016 | 1000 பேருக்கு | 3.6 |
| வைத்தியர் /நோயாளிகள் சராசரி விகிதம் | 2016 | எண்ணிக்கை | 1,036 |
| **சனத்தொகை** | | | |
| சனத்தொகை அடர்த்தி | 2016 | சதுரகி. மீக்காணஆட்கள் | 338 |
| சனத்தொகை வளர்ச்சி | 2016 | % | 1.1 |
| ஆயுள் எதிர்பார்க்கை | 2015 | வருடங்கள் | 75.0 |
| சிசுமரண வீதம் | 2013 | 1000 பிறப்புகளுக்கு | 8.2 |
| தாய் மரண வீதம் | 2013 | 1000 பிறப்புகளுக்கு | 26.8 |
| பருமட்டான பிறப்பு வீதம் | 2016 | 1000 நபர்களுக்கு | 15.6 |
| பருமட்டான இறப்பு வீதம் | 2016 | 1000 நபர்களுக்கு | 6.2 |
| தங்கிவாழ்வோா் வீதம் | 2016 | % | 49.4 |

| குறிகாட்டி | காலம் | அலகு | பெறுமதி |
|---|---|---|---|
| **வறுமை** | | | |
| வறுமை ஆள் கணக்கெடுப்பு சுட்டெண் | 2012/2013 | % | 6.7 |
| குடும்பவருமானத்தின் கிணிக்குணகம் | 2012/2013 | குணகம் | 0.48 |
| வறுமை இடைவெளி | 2012/2013 | % | 1.2 |
| நாளாந்தம் உட்கொள்ளும் சராசரி கலோரிப் பெறுமானம் | 2012/2013 | கலோரிகள் | 2,111 |
| **சர்வதேசதரப்படுத்தல்** | | | **தரம்** |
| மனிதஅபிவிருத்திச்சுட்டெண் | 2015 | 188 நாடுகளுடன் தரப்படுத்தலில் | 73 |
| வியாபாரம் புரிவோர்சுட்டெண் | 2017 | 190 நாடுகளுடன் தரப்படுத்தலில் | 110 |
| உலகளாவிய போட்டித்தன்மை சுட்டெண் | 2016/17 | 138 நாடுகளுடன் தரப்படுத்தலில் | 71 |
| பொருளாதார சுதந்திரச் சுட்டெண் | 2017 | 180 நாடுகளுடன் தரப்படுத்தலில் | 112 |
| உலகளாவிய சமாதானச் சுட்டெண் | 2017 | 163 நாடுகளுடன் தரப்படுத்தலில் | 80 |
| இலத்திரனியல்-ஆட்சி முறை அபிவிருத்திச் சுட்டெண் | 2015 | 193 நாடுகளுடன் தரப்படுத்தலில் | 79 |

**(அ) உள்வாரியாக இணைத்துக்கொள்ளப்படும் மாணவர்களை மாத்திரம் உள்ளடக்குகிறது.**
**(ஆ) அரசாங்க**

# அத்தியாயம் 1

# பொருளாதாரம்

## 1.1 பொருளாதார வளர்ச்சி

2016 ஆம் ஆண்டு முதல் காலாண்டு பொருளாதார வளர்ச்சி விகிதம் 5.1 சதவீதத்துடன் ஒப்பிடும் பொழுது இலங்கையின் பொருளாதாரம் 3.8 சதவீதத்தால் 2017 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், உள்ளக மற்றும் வெளியக சவால்களின் மத்தியில் வளர்ச்சியை அடைந்துள்ளது. கட்டுமாணம், சுரங்கமறுத்தல் மற்றும் அகழாய்வு, நிதிச் சேவைகள்,காப்புறுதித்துறை, தைத்த ஆடைகள் மற்றும் துணிகள்,ஆழ்கடல் மீன்பிடி மற்றும் நன்னீர் மீன்பிடி போன்ற துறைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி, இக்காலாண்டு பொருளாதார வளர்ச்சியில் அதிகளவு செல்வாக்கை செலுத்தியுள்ளது. உற்பத்தி வீழ்ச்சியை கடந்த வருடம் இதே காலாண்டு பகுதியில் கண்டிருந்த துறைகளான உலோகம் சாரா கனியவள உற்பத்திகள், நீர் வழங்கல், சுகாதார சேவைகள் போன்ற துறைகள் இவ்வருட காலத்தில் மீள் வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இதேநேரம் தொழில் துறையும், சேவைத் துறையும் முறையே 3, 3.5 சதவீத உற்பத்தி அதிகரிப்பைப் நாட்டின் விவசாயத்துறையின் பெறுமதி சேர் உற்பத்திகளில் பாரியளவு பாதகத்தன்மையை ஏற்படுத்தியிருந்தது.

விவசாயம், தொழில்துறை, சேவைத்துறை மற்றும் மானியங்கள் புறவடங்கலான வரிகள் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் முறையே 7.2% 32.2% 55.9% மற்றும் 4.7% ஐப் பங்களிப்புச் செய்துள்ளன. விவசாயத்துறையின் பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்தி நடவடிக்கைகள் 2016 ஆம் ஆணடில் ஏற்பட்ட 0.2 சதவிகித வீழ்ச்சியுடன் ஒப்பிடும்பொழுது, 2017 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டிலும் 3.2 சதவிகித வீழ்ச்சியைக் கண்டுள்ளன. தொடர்ச்சியாக ஏற்பட்டு வந்த பாதகமான காலநிலையினால் பெறுமதி கூட்டப்பட்ட அரிசி உற்பத்தி, தாணிய உற்பத்திகள், தெங்கு உற்பத்திகள், தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்திகள், கரும்புச் செய்கை மற்றும் மரக்கறிகள், பழ உற்பத்திகளில் ஏற்பட்ட வீழ்ச்சிகள் விவசாயத் துறையின் உற்பத்தியில்

**வரைபு 1.1: மொத்த உள்நாட்டு உற்பத்தி காலாண்டு வளர்ச்சி**




பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மற்றைய துறைகளில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியைக் கண்டிருந்த போதிலும், விவசாய துறையில் ஏற்பட்ட உற்பத்தி வீழ்ச்சி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியில் பாதகத்தன்மை ஏற்படக் காரணமாக இருந்துள்ளது. நாட்டில், குறிப்பாக குறிப்பிடத்தக்க பிரதேசங்களில் ஏற்பட்ட வறட்சி மற்றும் ஈரவலயப் பிரதேசங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, மண் சரிவு அபாயங்களினால் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு பிரதானமான காரணிகளாகும். இருந்த போதிலும், நன்னீர் மீன்பிடி,ஆழ்கடல் மீன்பிடி, வனங்கள் அபிவிருத்தி, சிறு தானியப் பயிர்கள், வாசனைத் திரவியங்கள் மற்றும் புகையிலைச் செய்கைகள், பழ உற்பத்திகள், விவசாயத்துறையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்துள்ளன. 2016/17 காலத்திற்குரிய பெரும்போத நெற்செய்கை 51.1 சதவிகிதத்தால் வீழ்ச்சியடைந்து அதன் உற்பத்தி 1.4 மெட்ரிக்

தொன்னாக குறைவடைந்துள்ளது. 2015/16 ஆம் ஆண்டு பெரும்போக செய்கை காலத்தினுல் ஏற்பட்ட கடும் வரட்சி காரணமாகக் கடந்த வருடம் இதே காலப்பகுதியில் 2.9 மில்லியன் மெட்ரிக் தொன் நெல் உற்பத்தியே பதிவு செய்யப்பட்டிருந்தது. இதே நேரம் கொளப்பி, குரக்கன் நிலக்கடலை போன்ற தானிய உற்பத்திகள் 15.1 சத விகிதத்தினால் 2017 ஆம் முதலாம் காலாண்டில் வீழ்ச்சியைக் கண்டுள்ளது. கடந்த ஆண்டு இதே காலப்பகுதியினுள் இவ்வுற்பத்திகள் 5.6 சதவிகித வளர்ச்சியைக் கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. கேள்வி மற்றும் நிரம்பல் காரணிகளின் தாக்கத்தினால் தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்திகள் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளன. தேயிலை உற்பத்தி 6.1 சத விகிதத்தினால் 66.2 மில்லியன் கிலோகிராம் ஆக 2017 இன் முதல் காலாண்டில் இதே காலப் பகுதியின் 2016 ஆம் ஆண்டு உற்பத்தியளவான 70.4 மில்லியன் கிலோ கிராம் உடன் ஒப்பிடும்பொழுது வீழ்ச்சியைக் கண்டுள்ளது. இலங்கை தேயிலையை இறக்குமதி செய்யும் பிரதேசங்களில் ஏற்பட்டிருந்த நிச்சயதன்மையற்ற அரசியல் நிலைமைகள், குறைந்தளவிலான தேயிலைக்கான விலைகள் மற்றும் தேயிலை உற்பத்திப் பிரதேசங்களில் ஏற்பட்டிருந்த கடும் வறட்சியான காலநிலை போன்றன இதற்கான முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன. தேயிலை வழங்கல்கள் குறைவடைந்ததால் கொழும்பு தேயிலைக்கான ஏல விற்பனைச் சந்தையில் அதன் விலை 50.0 சதவிகிதத்தால் ஒரு கிலோ கிராமிற்கு ரூபா 643.79 ஆக அதிகரித்துக் காணப்பட்டது. இதே காலப்பகுதியின் 2016 ஆம் ஆண்டின் இதேயிலையின் கேள்வியை சராசரியாக ஒரு கிலோவிற்கு ரூபா 426.67 ஆகக் காணப்பட்டது. இதேபோல், இறப்பரின் உற்பத்தியும் 17.2 சத விகிதத்தினால், 23.3 மில்லியன் கிலோகிராம் ஆகக் குறைவடைந்தது. இது 2016 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 28.2 மில்லியன் கிலோகிராமாகக் காணப்பட்டது. இறப்பரின் சேகரிப்பிற்கான காலங்கள் குறைவடைந்தமையும் மற்றும் சர்வதேசச் சந்தையில் இறப்பரிற்கான குறைந்த விலையும் கொழும்பு இறப்பர் ஏல விற்பனையின் மந்த நிலைக்குக் காரணிகளாகும். புகையூட்டப்பட்ட இறப்பர் தாள் (RSS1) 50.0 சராசரி விலை ஒரு கிலோவிற்கு ரூபா 250 ஆக 2017 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் பதிவாக்கியுள்ளது. இது 10.3 சதவீகிதமாக 2016 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்பொழுது குறைவடைந்துள்ளது. தெங்கு உற்பத்தி 6.5 சத விகிதத்தினால் 683.6 மில்லியன் தேங்காய்களாகக் குறைவடைந்துள்ளது. தெங்கு பயிரிடப்படும் பிரதேசங்களில் ஏற்பட்ட பாதகமான காலநிலையே இக்குறைவிற்கான காரணமாகும். மரக்கறி உற்பத்தி மற்றும் கரும்பு உற்பத்திகளும் முறையே 3.2 சதவீகிதத்தினாலும், 11 சதவிகிதத்தினாலும் இதே காலப்பகுதியில் உற்பத்திக் குறைவைக் கண்டுள்ளன.

மீன்பிடித்துறை 2017 இன் முதல் காலாண்டில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியைப் பெற்றுள்ளது. பெறுமதி சேர்க்கப்பட்ட நன்னீர் மீனுற்பத்திகள் மற்றும் ஆழ்கடல் மீன்பிடி முறையே 5.8 சதவீகிதமாக மற்றும் 21.5 சதவிகிதமாக கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியினுள் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடும்பொழுது பெரும் வளர்ச்சியைக் கொண்டுள்ளன. நன்னீர் நிலைகளில் புதிதாகச் சேர்க்கப்பட்ட மீன் குஞ்சுகளின் அதிகரிப்பும் மற்றும் ஐரோப்பிய சங்கத்தினால் இலங்கைக் கடல் மீன்கள் மீதிருந்த இறக்குமதித் தடையும் நீக்கப்பட்டதனால் ஏற்பட்ட அதிகரித்த இலங்கை மீன்களுக்கான கேள்வியும் இந்நிலை ஏற்பட ஏதுவாகியிருந்தது. கால்நடை மற்றும் கோழி உற்பத்திகளை அதிகரிப்பதான அரசாங்கத்தின் கொள்கை மற்றும் அதன் செயற்பாடுகளின் விளைவாக பெறுமதி சேர்க்கப்பட்ட கால்நடை உற்பத்திகள் 6.9 சதவிகிதத்தினால் அதிகரித்துள்ளன.

**வரைபு 1.2 : நடைமுறை விலைகளில் உ.உற்பத்தியில் துறைரீதியான வகுதி - முதலாம் காலாண்டு - 2017**



தொழில்துறையின் விரிவாக்கம் இவ்வருட முதல் காலாண்டில், 2016 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடும் பொழுது, 6.3 சதவிகிதத்தினால் அதிகரித்துள்ளது. 2016 ஆம் ஆண்டில் இதன் வளர்ச்சி இதே காலப்பகுதியில் 9.1 சதவிகித அதிகரிப்பைக் கொண்டிருந்தது. சுரங்க மற்றும் அகழ்வு ஆய்வு, கட்டுமானங்கள், தைத்த ஆடைகள் மற்றும் துணிகள் உற்பத்திகள், காகிதாதரிகள் உற்பத்திகள், உலோக இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புப் போன்ற உப துறைகளில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியை இக்காலாண்டு கண்டுள்ளது. கட்டுமாணத்துறை 2016 ஆம் ஆண்டில் முதல் காலாண்டில் ஏற்பட்ட வளர்ச்சி 16.3 சதவிகிதத்துடன் ஒப்பிடும்பொழுது 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 16.1 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. இதனால் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட சீமேந்து மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட சீமேந்தின் அளவுகள், இக்காலாண்டில் 6.4 சதவிகிதமாக, 2 மில்லியன் மெட்ரிக் தொன்னாக அதிகரித்துள்ளது. 2016 ஆம் ஆண்டில் 0.9 சதவிகித வீழ்ச்சியைக் கொண்டிருந்த சுரங்கம் மற்றும் அகழ்வாய்வுத்துறை இவ்வருடக் காலாண்டில் 17.9 சதவிகித வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இது கனியவள ஏற்றுமதியை இக்காலப் பகுதியில் 4.2 சதவிகிதமாக வளர்ச்சியை அடையச் செய்ததுடன் 11.9 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதி கொண்ட வருமானத்தை ஈட்டித்தந்துமுள்ளது. தொழில் ஏற்றுமதியினால் பெறப்படும் வருமானத்தில் பெருமளவை பெற்றுத்தரும் தைத்த ஆடைகள் கைத்தொழிற்துறை, இவ்வருட முதல் காலாண்டில் 0.6 சதவிகித வளர்ச்சியையே பெற்றுள்ளது. இருந்தபோதிலும் அதன் ஏற்றுமதி வருமானம் 2016 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் பெற்ற ஏற்றுமதி வருமானமான 1,369.3 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருடன் ஒப்பிடும் பொழுது 6.8 சதவிகிதத்தினால் வீழ்ச்சியைக் கண்டு, 1,275.8 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரையே 2017 இல் பெற்றுள்ளது. தைத்த ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், உணவுகளும் குடிபானங்களும் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் போன்ற துறைகளினால் பெறப்படும் ஏற்றுமதி வருமானம் குறைவடைந்த காரணத்தினால், மொத்த ஏற்றுமதிகள் 2.7 சதவிகிதத்தினால் குறைவடைந்து, 2,106.6 ஐக்கிய அமெரிக்க டொலரையே வருமானமாக 2017 ஆம் ஆண்டின் முதற் காலாண்டில் பெற்றுள்ளது. மின்னியல், எரிவாயு, நீராவி, காற்று சீராக்கிகளின் உற்பத்திகள் இவ்வருடத்தின் மீளாய்வு காலப்பகுதியில் நூற்றுக்கு 0.3 சதவிகிதமாக குறைவடைந்துள்ளது. 2016 ஆம் ஆண்டின் முதற் காலாண்டில் உற்பத்தி செய்யப்பட்ட 3440 GWH மின்காரத்துடன் ஒப்பிடும்பொழுது, 2017 இன் இக்காலப் பகுதியில் மின்சார உற்பத்தி 3463 GWHஆகும். இது இது 0.3 சதவிகித வளர்ச்சியைக் கொண்டுள்ளது. நீர்மின் உற்பத்தி இக்காலப்பகுதியில் 66.9 சதவிகிதமாக, குறைவடைந்து 347 GWH உற்பத்தியை பதிவு செய்துள்ளது. நீரியல் ஏந்து பிரதேசங்களில் ஏற்பட்ட வறட்சியே இந்நிலைமைக்குப் பிரதான காரணியாகும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 55.9 சதவிகிதத்தை கொண்டுள்ள சேவைத்துறை இவ்வருட முதலாம் காலாண்டில் 3.7 சதவிகித வளர்ச்சியைக் கொண்டிருந்த 2016 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்பொழுது 3.5 சதவிகித வளர்ச்சியை எட்டியுள்ளது. ஒளிபரப்பு துறைசார் சேவைகள், பொது நிருவாகம், போன்ற சேவைகள் தவிர்ந்த மறறைய சேவைகள் இக்காலாண்டுப் பகுதியில் வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன. நிதியியல் சேவைகள், காப்புறுதி சேவைகள், மொத்த மற்றும் சில்லறை வியாபாரங்கள், போக்குவரத்துச் சேவைகள், உணவு மற்றும் குடிவகைகள், தபால் சேவைகள் போன்ற உப சேவைத்துறை இவ்வளர்ச்சியில் முக்கிய பங்களிப்பசை செய்துள்ளன. இக்காலகட்டத்தினுள் அங்கீகாரம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் விசேட வங்கிகளின் வரிகளிற்கு முந்திய இலாபம் அதிகரித்ததன் காரணமாக, நிதியியல் நடவடிக்கைகள் 14.9 சதவிகிதத்தினால் வளர்ச்சியை அடைந்துள்ளன. இவ்வளர்ச்சி, 15.1 சதவிகிதமாக 2016 ஆம் ஆண்டில் இக்காலப்பகுதியில் பதிவாகியிருந்தது. இதேநேரம், காப்புறுதி சேவைகள் துறை 9.7 சதவிகித அதிகரிப்பை காட்டியுள்ளன. external sector இன் முன்னேற்றம் மற்றும் உள்நாட்டு வியாபார நடவடிக்கைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாக 3.2 சதவிகித வளர்ச்சியைக் கொண்டிருந்த 2016 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுடன் ஒப்பிடும் பொழுது இவ்வருடம் இதே காலப்பகுதியில் 4.5 சதவிகித வளர்ச்சியை இவ்வுபதுறை பெற்றுள்ளது. தேயிலை மற்றும் இறப்பர் போன்ற விவசாய உற்பத்தகளின் அதிகரித்த ஏற்றுமதி வருவாய் மற்றும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் ஏற்றுமதி அதிகரிப்பில் பெற்ற வருமானங்கள் காரணமாக இவ்வாண்டு மொத்த ஏற்றுமதி வருமானம் ரூபா.2,774.3 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராக, 1.3 சதவிகித அதிகரிப்பை 2016 ஆம் ஆண்டில் இதே காலாண்டில் பெறப்பட்ட ரூபா. 2,739.2 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரைவிடக் கூடுதலாகப் பெற்றுள்ளது. இறக்குமதிச் செலவினங்கள் ரூபா. 5,278.9 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராக, 14.9 சதவிகித அதிகரிப்பை இவ்வாண்டு 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியல் பெற்ற

இறக்குமதிச் செலவினமான 4,594.5 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரை விடக் கூடுதலாகப் பெற்றுள்ளது. போக்குவரத்துச் சேவை 3.1 சதவிகிதத்தினால் வளர்ச்சி அடைந்துள்ளது. வாகனங்களின் பதிவுகள் இக்காலப் பகுதிடயினுள் 6.4 சதவிகிதமாக அதிகரித்திருந்தது. தொலைத் தொடர்பு சேவைத்துறை இக்காலகட்டத்தினுள் சேவைத்துறை 12 சதவிகித அதிகரிப்பைக் கொண்டிருந்த 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது 3.4 சதவிகிதம் அதிகரித்துள்ளது. அதேபான்று தபால் மற்றும் விரைவுத் தபால் சேவைத்துறை தங்குமிடங்கள், வசதிகள், உணவு மற்றும் குடிபான சேவைத்துறை,ஆதனத் துறை போன்றன முறையே 2.7 சதவிகிதம், 3.7 சதவிகிதம் மற்றும் 1.0 சதவிகித வளர்ச்சி அடைந்துள்ளன.

**அட்டவணை 1.1 : மொ.உ.உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கம் (2010 நிலையான விலைகளில்) முதலாம் காலாண்டு 2016 - 2017**

ரூபா மில்லியன்

| | துறை | 2016 | 2017 (தற்கா) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|
| | **விவசாயம், காடாக்கம் மற்றும் மீன்பிடி** | **161,662** | **156,419** | **-3.2** |
| 1 | தானியங்களின் வளர்ச்சி (அரிசி நீங்கலாக) | 4,104 | 3,483 | -15.1 |
| 2 | அரிசியின் வளர்ச்சி | 10,646 | 4,993 | -53.1 |
| 3 | காய்கறிகளின் வளர்ச்சி | 13,851 | 13,406 | -3.2 |
| 4 | கரும்பு, புகையிலை, நீண்ட காலமல்லாத பயிர்கள் | 534 | 475 | -11.0 |
| 5 | பழவகைகளின் வளர்ச்சி | 14,260 | 14,539 | 2.0 |
| 6 | எண்ணெய்ப்பசை கொண்ட பழ வகைகளின் வளர்ச்சி (தேங்காய், செவ்விளநீர், கமுகு) | 18,884 | 16,966 | -10.2 |
| 7 | தேயிலையின் வளர்ச்சி (பச்சை இலைகள்) | 15,411 | 14,534 | -5.7 |
| 8 | ஏனைய குடிபானப் பயிர்கள் (கோப்பி, கொக்கோ போன்றவை) | 338 | 341 | 0.9 |
| 9 | வாசனைத திரவியங்கள், நறுமணப் பயிர்கள், மருந்த மற்றும் மருந்தாக்கல் பயிர்களின் வளர்ச்சி | 17,081 | 18,115 | 6.1 |
| 10 | இறப்பரின் வளர்ச்சி | 8,214 | 6,800 | -17.2 |
| 11 | ஏனைய நீண்டகாலப் பயிர்களின் வளர்ச்சி | 4,042 | 4,481 | 10.9 |
| 12 | கால்நடை உற்பத்தி | 12,625 | 13,498 | 6.9 |
| 13 | தாவர இனவிருத்தி மற்றும் விவசாயத்துக்கான துணை நடவடிக்கைகள் | 2,399 | 2,556 | 6.5 |
| 14 | காடாக்கலும் குத்திகளும் | 10,682 | 11,679 | 9.3 |
| 15 | ஆழ்கடல் மீன்பிடி, ஆழ்கடல் மீன் வளர்ப்பு | 26,625 | 28,162 | 5.8 |
| 16 | நன்னீர் மீன்பிடி மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பு | 1,967 | 2,390 | 21.5 |
| | **கைத்தொழில்** | **655,053** | **696,380** | **6.3** |
| 17 | அகழ்வு, சுரங்க மறுத்தல் | 51,584 | 60,794 | 17.9 |
| 18 | உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள் | 152,460 | 151,954 | -0.3 |
| 19 | பிடவை, ஆடைகள் மற்றும் தோற்பொருட்கள் | 97,119 | 97,736 | 0.6 |
| 20 | மரம், மரப்பொருள், தக்கை உற்பத்திகள் தளபாடம் நீங்கலாக | 9,023 | 8,833 | -2.1 |
| 21 | காகித உற்பத்திகள், அச்சு மற்றும் ஊடக உற்பத்திகளின் மீள் உற்பத்தி | 9,831 | 10,557 | 7.4 |
| 22 | சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் தார் வகை உற்பத்திகள் | 13,569 | 11,463 | -15.5 |
| 23 | இரசாயனப் பொருட்கள் மற்றும் அடிப்படை மருந்தாக்கல் பொருட்கள் உற்பத்தி | 19,355 | 19,337 | -0.1 |
| 24 | இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் உற்பத்திகள் | 11,608 | 11,579 | -0.2 |
| 25 | ஏனைய உலோக கனிப்பொருட்கள் அல்லாத உற்பத்திகள் | 16,573 | 19,801 | 19.5 |
| 26 | அடிப்படை உலோகங்கள், பொருத்தப்பட்ட உலோகப் பொருட்கள் | 10,975 | 11,578 | 5.5 |

ரூபா மில்லியன்

| | துறை | 2016 | 2017 (தற்கா) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|
| 27 | இயந்திரங்கள், சாதனங்கள் | 11,485 | 13,579 | 18.2 |
| 28 | தளபாடம் | 29,242 | 30,357 | 3.8 |
| 29 | ஏனைய இயந்திர சாதன தயாரிப்பு, பொருத்துதல், பழுதுபார்த்தல் | 21,120 | 18,973 | -10.2 |
| 30 | மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் | 22,501 | 22,441 | -0.3 |
| 31 | நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் | 2,816 | 3,424 | 21.6 |
| 32 | கழிவுப் பொருட்கள், கழிவு, சுத்திகரித்தல் மற்றும் அகற்றல் செயற்பாடுகள் | 5,996 | 6,793 | 13.3 |
| 33 | நிர்மாணம் | 169,794 | 197,182 | 16.1 |
| | **சேவைகள்** | **1,167,216** | **1,207,523** | **3.5** |
| 34 | மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் | 233,533 | 244,006 | 4.5 |
| 35 | பண்டசாலை உள்ளடங்கலாக பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து | 208,190 | 214,586 | 3.1 |
| 36 | தபால் மற்றும் விரைவுத் தபால் செயற்பாடுகள் | 1,056 | 1,084 | 2.7 |
| 37 | தங்குமிடம், உணவு மற்றும் குடிபானச் செயற்பாடுகள் | 34,377 | 35,658 | 3.7 |
| 38 | ஒலிபரப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஒலி, ஒளி தயாரிப்புகள் | 703 | 637 | -9.4 |
| 39 | தொலைத்தொடர்பு | 9,281 | 9,593 | 3.4 |
| 40 | தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்ட மதியுரையும் மற்றும் தொடர்புபட்ட செயற்பாடுகளும் | 3,133 | 3,223 | 2.9 |
| 41 | நிதிச்சேவை செயற்பாடுகள், துணை நிதிச்சேவை | 110,424 | 126,836 | 14.9 |
| 42 | காப்புறுதி, மீள் காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியளிப்பு | 15,152 | 16,628 | 9.7 |
| 43 | வதிவிட உரித்து உள்ளடங்கலாக ஆதன விற்பனை | 127,798 | 129,137 | 1.0 |
| 44 | உயர் தொழில் சேவைகள் | 37,606 | 37,153 | -1.2 |
| 45 | பொது நிருவாகம் பாதுகாப்பு கட்டாய சமூகப் பாதுகாப்பு | 101,235 | 96,321 | -4.9 |
| 46 | கல்வி | 41,239 | 41,617 | 0.9 |
| 47 | மனித தேகாரோக்கிய செயற்பாடுகள் | 29,449 | 32,728 | 11.1 |
| 48 | ஏயை தனிப்பட்ட சேவை செயற்பாடுகள் | 214,040 | 218,315 | 2.0 |
| | **அடிப்படை விலைகளில் மொத்த பெறுமதி சேர்க்கை** | **1,983,930** | **2,060,322** | **3.9** |
| | **(+) குறைந்த மானியங்கள் பொருட்கள் மீதான வரிகள்** | **98,614** | **101,448** | **2.9** |
| | **நிலையான விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **2,082,544** | **2,161,770** | **3.8** |

***மூலம் : தொகை மதிப்பீடு புள்ளிவிபரவியல் திணைக்களம்***

## 1.2 பணவீக்கம்

தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (NCPI) (2013=100)7.1 சதவிகிதமாக, 2017 ஏப்ரல் இருந்த 8.4 சதவிகித பெறுமதியுடன் ஒப்பிடும்போது குறைவடைந்துள்ளது. அடிப்படை வருடத்தை கருத்தில் கொள்ளுமிடத்தில், 2017 மே மாதத்திற்கான பண வீக்கம், 2016 மே மாதத்திற்கான பணவீக்கமானது 5.3 சதவிகிதத்தை விட அதிகரித்துள்ளது. பணவீக்கமானது ஜனவரி 2017 இல் 6.5 சதவிகிதமாக இருந்து ஏப்ரல் 2017 இல் பாதகமான காலநிலை, குறிப்பிட்ட சில வரிகளில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக இறக்குமதிப் பொருட்களில் ஏற்பட்ட விலை மாற்றங்களினால், 8.4 சதவிகிதமாக அதிகரித்திருந்தது. பொருளாதாரத்தின் அடிப்படை பணவீக்கத்தை சுட்டும் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (NCPI)பணவீக்கம் மே 2016 இல் இதேகாலப்பகுதியல் 7.2 சதவிகிதமாக இருந்து. மே 2017 இல் 4.7 சதவிகிதமாகக் குறைவடைந்துள்ளது. எப்படியிருப்பினும்,தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (NCPI) பணவீக்கம் வருடாந்தம் சராசரியாக மே 2016 இல் 5.0 சதவீதமான இருந்தது. மே 2017 இல் 6.4 சதவிகிதமாக அதிகரித்துள்ளது.

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (CCPI) (2013=100)இன் பணவீக்கம்அடிப்படையில் மே 2017 இல் 4.8 சதவீத அதிகரிப்பை கொண்டிருந்த

மே 2016 விட 6.0 சதவீததம வருட-வருட அடிப்படையில் அதிகரித்துள்ளது. இவ் அதிகரிப்பிற்கு உணவிற்கான செலவுகளினாலும் மற்றும் உணவு தவிர்ந்த பொருட்களுக்கான செலவுகளினால் ஏற்பட்ட பணவீக்கம் முறையே 2.70 சதவிகிதம், மற்றும் 3.27 சதவிகிதம் ஏற்பட்ட அதிகரிப்புகளினால் பங்களிப்பை செய்துள்ளது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (CCPI) வருடாந்த பணவீக்க அதிகரிப்பு மே 2017 இல் 5.4 சதவிகித அதிகரிப்பைக் கொண்டுள்ளது. இது மே, 2016 இல் 2.7 சதவிகித அதிகரிப்பாக இருந்தது. இருந்த போதிலும் உணவுக்கான செலவுகள், சக்தி தேவைகள் மற்றும் போக்குவரத்துச் செலவுகளை கணிப்பிடும் முக்கிய பணவீக்கமானது (Core Inflation) வருடாவருடம் ஒப்பீட்டு அடிப்படையில் மே, 2017 இல் 5.2 சதவிகிதமாக குறைவடைந்துள்ளது. இது மே 2016 இல் 5.6 சதவிகிதமாக காணப்பட்டது. தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (NCPI) முறையின் மூலம் கணிக்கப்பட்ட முக்கிய பணவீக்கமானது (Core Inflation) பணவீக்கம் மே 2017 இல் 5.5 சதவிகிதமாக மே 2016 இல் இருந்த பணவீக்கமான 5.0 சதவீதத்துடன் ஒப்பிடும் பொழுது அதிகரிப்பைக் கண்டுள்ளது.

**அட்டவணை1.2: பணவீக்க அசைவுகள் (%)**

| ஆண்டு | மாதம் | கொ.நு.வி.சு.எ (2013 = 100) | | | | தே.நு.வி.சு ( 2013=100) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தலைக்குரிய பணவீக்கம் | | முக்கிய பணவீக்கம்* | | தலைக்குரிய பணவீக்கம் | | முக்கிய பணவீக்கம்* | |
| | | புள்ளிக்கு புள்ளி | வருடாந்த சராசரி | புள்ளிக்கு புள்ளி | வருடாந்த சராசரி | புள்ளிக்கு புள்ளி | வருடாந்த சராசரி | புள்ளிக்கு புள்ளி | வருடாந்த சராசரி |
| 2016 | சனவரி | 1.7 | 2.1 | 3.6 | 4.9 | -0.7 | 2.9 | 3.0 | 4.3 |
| | பெப்ரவரி | 2.9 | 2.1 | 4.4 | 5.0 | 1.7 | 2.6 | 4.6 | 4.4 |
| | மார்ச் | 2.6 | 2.2 | 3.7 | 5.0 | 2.2 | 2.4 | 5.0 | 4.5 |
| | ஏப்ரல் | 3.4 | 2.4 | 3.5 | 4.9 | 4.3 | 2.6 | 5.9 | 4.7 |
| | மே | 4.8 | 2.7 | 5.6 | 5.0 | 5.3 | 2.7 | 7.2 | 5.0 |
| | யூன் | 5.5 | 3.0 | 5.4 | 5.1 | 6.4 | 3.1 | 7.5 | 5.3 |
| | யூலை | 5.8 | 3.4 | 5.0 | 5.1 | 5.8 | 3.4 | 6.8 | 5.5 |
| | ஓகத்து | 4.4 | 3.7 | 3.8 | 4.9 | 4.5 | 3.6 | 6.0 | 5.6 |
| | செத்தெம்பர் | 4.2 | 3.9 | 3.7 | 4.8 | 4.7 | 3.8 | 5.7 | 5.7 |
| | ஒக்தோபர் | 4.1 | 4.0 | 3.8 | 4.6 | 5 | 4.0 | 5.7 | 5.7 |
| | நவம்பர் | 4.0 | 4.0 | 4.8 | 4.5 | 4.1 | 4.0 | 6.8 | 5.8 |
| | திசெம்பர் | 4.5 | 4.0 | 5.8 | 4.4 | 4.2 | 4.0 | 6.7 | 5.9 |
| 2017 | சனவரி | 5.5 | 4.3 | 7.0 | 4.7 | 6.5 | 4.6 | 7.1 | 6.2 |
| | பெப்ரவரி | 6.8 | 4.6 | 7.1 | 5.0 | 8.2 | 5.1 | 7.1 | 6.4 |
| | மார்ச் | 7.3 | 5.0 | 7.3 | 5.3 | 8.6 | 5.6 | 7.0 | 6.6 |
| | ஏப்ரல் | 6.9 | 5.3 | 6.8 | 5.5 | 8.4 | 6.0 | 5.9 | 6.6 |
| | மே | 6.0 | 5.4 | 5.2 | 5.5 | 7.1 | 6.1 | 4.7 | n.a. |

*மூலம்: தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

** உணவு, சக்தி, மற்றும் போக்குவரத்து, நீங்கலாக*

### 1.3 நாணயம் மற்றும் கடன்கள்

2017 இன் முதல் நான்கு மாதங்களிலும் ஒதுக்கு பணம்,விரிந்தபணம் ($M_{2b}$) தனியார்துறை கடன்கள் என்பன அதிகரித்த போக்கைக் கொண்டிருந்தன. இலங்கை மத்திய வங்கியினால் நியம வைப்பு ஏற்பாட்டு வட்டி விகிதத்தையும் (SDFR) மற்றம் நியம கடன்களுக்கான ஏற்பாட்டு வட்டி வீதத்தையும் (CBSL)அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரித்து அதனை முறையே 7.25 சதவிகிதம் மற்றும் 8.75 சதவிகிதம் ஆக மார்ச்சு 2017 இல் ஏற்படுத்தி அதன் நாணயக் கொள்கையினைவலுப்படுத்தியது. இதன் விளைவாக நிதி நிறுவனங்களின் வைப்பு விகிதம் மற்றும் கடன் விகிதங்கள் மீது குறிப்பிடத்தக்களவு தாக்கம் ஏற்படுத்தப்பட்டது.

ஒதுக்கப்பட்ட பணம் 16 சதவிகித வளர்ச்சியை மே, 2017 இல் வருட-வருட ஒப்பீட்டளவின்படி அடைந்துள்ளது. இதேநேரம் விரிந்த பணம் ($M_{2b}$)இதே காலத்தில் 20.1 சதவிகித வளர்ச்சியை கண்டுள்ளது. இவ்வளர்ச்சி 18.2 சதவிகிதமாக 2016 ஆம் ஆண்டில் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. தனியார் துறைக்கானதும், அரசிற்குமான வழங்கப்பட்ட பெருமளவு கடன்களே இதற்கானகாரணங்களாகும். ஏப்ரல், 2017 இல் தனியார் துறைக்கான கடன்கள் 20 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. கைத்தொழிற்துறையும் சேவைத்துறையுமே பெருமளவிலான கடன்களைப் பெற்றுள்ளது. இருந்தபோதும் தனிநபர் கடன்களும் முற்பணக் கொடுப்பனவுகளும் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது.

**அட்டவணை 1.3 : நாணயம் மற்றும் தனியார்த் துறைக்கடன்**

ரூபா. பில்

| Item | 2016 | | | | 2017 | | | | 2017 ஏப்ரல்/ 2016 ஏப்ரல் வளர்ச்சி (%) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சனவ | பெப் | மார்ச் | ஏப்ர | சனவ | பெப் | மார்ச் | ஏப்ர | |
| ஒதுக்க நாணயம் | 718.6 | 739.3 | 791.6 | 763.1 | 828.5 | 847.6 | 892.2 | 885.6 | **16.1** |
| விரிந்த நாணயம்($M_{2b}$) | 4,638.3 | 4,703.8 | 4,731.6 | 4,772.1 | 5,460.4 | 5,552.0 | 5,677.4 | 5,731.0 | **20.1** |
| தனியார் துறை கடன் | 3,493.1 | 3,546.8 | 3,634.6 | 3,662.0 | 4,222.3 | 4,293.2 | 4,375.2 | 4394.0 | **20.0** |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

## 1.4 பங்கு வர்த்தகம்

வெளிநாட்டு நிதிமூலங்களை அதிகரித்ததனோடு பங்கு வர்த்தகம் தொடர்ச்சியாக 2017 இன் கடந்த ஐந்து மாதங்களில் தனது வளர்ச்சியை மீள் புதுப்பித்துக் கொண்டது. அனைத்து பங்கு விலைச் சுட்டெண் (ASPI) மே மாத இறுதியில் 6,610 புள்ளிகள் வரை 1.4 சதவிகித வளர்ச்சியை பதிவு செய்து கொண்டது. இதேபோல் S&P SL 20 தனது வளர்ச்சியை 10.2 சதவிகிதமாக 3,786 புள்ளிகளைப் பதிவு செய்தது. இதன் மே 2016 இன் வளர்ச்சியானது 3,436 புள்ளிகளாகும். நாளாந்த சராசரி வருமானம் 2017 மே மாத இறுதியில், சென்ற வருடத்தில் இதே காலப்பகுதியில் பெறப்பட்ட வருமானமான ரூபா 794 மில்லியனைவிட 13.5 சதவிகிதத்தினால் அதிகரித்து ரூபா. 901 மில்லியனாக வளர்ச்சியடைந்தது. மேலும் 2016 ஆம் ஆண்டின் ரூபா 2.8 மில்லியன் வர்த்தக முதலீட்டுடன் ஒப்பிடும்போது இவ்வருட மே மாத இறுதியில் வர்த்தக முதலீடு 2.9 மில்லியனாக 48 சதவிகித அதிகரிப்பைக் கொண்டுள்ளது. மொத்த வெளிநாட்டுக் கொள்வனவுகள் 81 சதவிகிதம்,ரூபா 50 மில்லியன்கள் அதிகரிப்பை 2017 மே மாத இறுதியில் பெற்றுக்கொண்ட அதேநேரம் மொத்த வெளிநாட்டு விற்பனைகள் 6 சதவிகிதத்தால் குறைவடைந்து ரூபா 32 மில்லியன்களாக இருந்தது. இதனால் 1.9 மில்லியன் நிகர கொள்வனவாக 2017 மே மாத இறுதியில் பெறப்பட்டது.

**அட்டவணை 1.4 : மூலதனச் சந்தை அசைவுகள்**

| குறிகாட்கள் | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | மே இறுதியில் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 2016 | 2017 |
| அனைத்துப் பங்குகள் விலைச்சுட்டெண்(1985=100) | 6,074 | 5,643 | 5,913 | 7,299 | 6,895 | 6,228 | 6,516 | 6,610 |
| மிலங்கா விலைச் சுட்டெண் / S&P SL 20 சுட்டெண்* | 5,229 | 3,085 | 3,264 | 4,089 | 3,626 | 3,496 | 3,436 | 3,786 |
| சந்தை மூலதனவாக்கம் (ரூபா. பில்) | 2,214 | 2,168 | 2,460 | 3,105 | 2,938 | 2,745 | 2,777 | 2,909 |
| விற்பனைகள் நிரற்படுடத்தப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை | 272 | 287 | 289 | 294 | 294 | 295 | 294 | 296 |
| வருடாந்த புரள்வு (ரூபா. பில்) | 546 | 214 | 200 | 341 | 253 | 177 | 76 | 89 |
| வெளிநாட்டு விற்பனைகள் (ரூபா.மில்) | 68,854 | 33,954 | 60,873 | 83,554 | 89,790 | 74,270 | 33,649 | 31,615 |
| வெளிநாட்டு கொள்வனவுகள் (ரூபா.மில்) | 49,875 | 72,614 | 83,657 | 104,771 | 84,418 | 74,608 | 27,855 | 50,411 |
| தேறிய கொள்வனவுகள் | -18,979 | 38,660 | 22,784 | 21,217 | -5,372 | 338 | -5,794 | 18,796 |

**மூலம்: கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையம், இலங்கை மத்திய வங்கி**

* **2012 யூன் மாதம் பயன்வலுப்பெறும் வகையில் மிலங்கா விலைச் சுட்டியானது S&P SL 20 குறிகாட்டியினால் மாற்றியமைக்கப்பட்டது**

** **முடப்பட்ட இறுதி நிதிகள் நீங்கலாக**

## 1.5 வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகள்

சுற்றுலாத்துறை மூலம் பெறப்பட்ட வருமானம் அதிகரித்த நிலையிலும், வெளிநாட்டில் இருந்து ஊழி யசம்பாத்தியம் குறைவடைந்தும், வர்த்தகப் பற்றாக்குறை அதிகரித்த போக்கையும் 2017இன் முதல் நான்கு மாதங்களில் வெளிநாட்டுத்துறை மந்தகதியில் அபிவிருத்தியைச் சந்தித்துள்ளது. 2016 இன் முதல் நான்கு மாதங்களில் பெறப்பட்ட வர்த்தக பற்றாக்குறையான, ரூபா 3,314.3 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருடன் ஒப்பிடும் பொழுது 2017 இன் இதே காலப்பகுதியின் வர்த்தகப் பற்றாக்குளை 27.2 சதவிகிதத்தால் அதிகரித்து,ரூபா 3,313.8 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராக இருந்தது. இறக்குமதிச் செலவினங்களின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பும், ஏற்றுமதி மூலமான வருமானங்களின் மிதமான அதிகரிப்பும் இந்நிலைமையை தோற்றுவிக்கக் காரணங்களாகும். ஏற்றுமதி மூலமான வருமானம் ரூபா 3,569 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராக, 3.5 சதவிகித அதிகரிப்பையும், இறக்குமதிச் செலவினங்கள் ரூபா 883.3 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராக, 13.7 சதவிகித அதிகரிப்பையும் இக்காலப்பகுதியில் கொண்டிருந்தன. மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்ட அரசியல் ஸ்திரத்தன்மையும், அதனோடு இணைந்த பொருளாதார நெருக்கடிகளும், 2016 இன் முதல் மூன்று மாதங்களில் பெறப்பட்ட வெளிநாட்டு ஊழிய சம்பாத்தியமான ரூபா 1,793.4 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருடன்

ஒப்பிடும் பொழுது, 2017 இல் அதே காலகட்டத்தில் பெறப்பட்ட வெளிநாட்டு ஊழிய சம்பாத்தியம் நூற்றுக்கு 3.3 சதவிகிதத்தினால் வீழ்ச்சியடைந்து ரூபா 1,733.7 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராக, குறைவடைந்துள்ளது. இருந்து போதிலும், 2016 இன் முதல் மூன்று மாதங்களில் பெற்றுக்கொண்ட ரூபா 1,003.3 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் வருமானத்தை ஒப்பிடும் பொழுது, சுற்றுலாத்துறையின் 2017 இன் இதே காலப்பகுதிக்கான வருமானம் 3.4 சதவிகிதத்தினால் அதிகரித்து ரூபா 1,037.9 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரை அடைந்தது. 2017ஆம் ஆண்டு மார்ச்சு மாத இறுதிவரைக்குமான தேறிய உத்தியோகபூர்வ ஒதுக்குகள் 3.1 மாத இறக்குமதிகளுக்கு சமமான 5.1 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராகக் காணப்பட்டதுடன் மொத்த ஒதுக்குகள் 4.2 மாதங்களுக்கு போதுமான 7.1 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராகக் காணப்பட்டது.

**அட்டவணை 1.5 : வெளிநாட்டு வர்த்தகம் ( சனவரி - ஏப்ரல் - 2017)**

ஐ.அ.டொ. மில்.

| வகை | 2016 | 2017 தற்கா. | மாற்றம் % |
|---|---|---|---|
| **ஏற்றுமதிகள்** | **3,449.6** | **3,569.0** | **3.5** |
| விவசாய் உற்பத்திகள் | 721.8 | 851.7 | 18.0 |
| தேயிலை | 406.3 | 458.2 | 12.8 |
| ஆரம்ப நிலை உற்பத்திகள்(இறப்பர், தெங்கு உற்பத்திகள்) | 127.4 | 134.7 | 5.7 |
| ஏனைய விவசாய உற்பத்திகள் | 188.1 | 258.8 | 37.6 |
| கைத்தொழில் உற்பத்திகள் | 2,713.5 | 2,701.5 | -0.4 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 1,709.8 | 1,626.3 | -4.9 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 92.3 | 120.1 | 30.1 |
| ஏனைய கைத்தொழில் உற்பத்திகள் | 911.5 | 955.1 | 4.8 |
| கனிப்பொருட்கள் | 9.2 | 10.0 | 8.2 |
| ஏனையவை | 5.1 | 5.9 | 15.7 |
| **இறக்குமதிகள்** | **6,055.4** | **6,882.8** | **13.7** |
| நுகர்வுப் பொருட்கள் | 1,425.5 | 1,515.6 | 6.3 |
| உணவு மற்றும் குடிபானங்கள் | 516.9 | 629.2 | 21.7 |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 908.6 | 886.5 | -2.4 |
| இடைநிலைப் பொருட்கள் | 3,019.3 | 3,691.7 | 22.3 |
| பெற்றோலியம் | 686.5 | 1,207.7 | 75.9 |
| உரம் | 54.1 | 22.6 | -58.2 |
| பிடவைகள் மற்றும் ஆடைகள் | 896.8 | 860.6 | -4.0 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 1,381.9 | 1,600.7 | 15.8 |
| முதலீட்டுப் பொருட்கள் | 1,607.8 | 1,614.6 | 0.4 |
| இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 925.2 | 871.9 | -5.8 |
| போக்குவரத்து உபகரணங்கள் | 195.1 | 215.1 | 10.3 |
| கட்டட மூலப் பொருட்கள் | 485.3 | 524.1 | 8.0 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 2.2 | 3.4 | 53.8 |
| ஏனையவை | 2.8 | 60.9 | 2059.2 |
| **வர்த்தக மீதி** | **(2,605.8)** | **(3,313.8)** | **27.2** |

**மூலம்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி**

### 1.5.1 ஏற்றுமதிகள்

இலங்கைப் பொருட்களுக்கான வெளிநாட்டுச் சந்தைகளில் ஏற்பட்ட விலை வீழ்ச்சிகளாலும், அந்நாடுகளின் மிதமான பொருளாதார மீட்சிகளாலும் 2016 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களிலும் பெற்ற ஏற்றுமதி வருமானங்கள் ரூபா 3,449.6 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருடன் ஒப்பிடும் பொழுது 2017 இன் அதே காலப்பகுதியில் ஏற்றுமதி வருமானமானது நூற்றுக்கு 3.5 சதவிகிதத்தால் மிதமான வளர்ச்சி அதிகரிப்பை ரூபா 3,569.0 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராகப் பதிவு செய்துள்ளது. இதற்காக தேயிலை, இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் வாசணைத் திரவியங்களின் அததிகரித்த ஏற்றுமதி பெருமளவில் பங்களிப்பைச் செய்துள்ளன. சர்வதேசச் சந்தையில் தேயிலைக்கான அதிகரித்த விலை காரணமாக, 2016 இல் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானத்தைவிட, 2017 இன் முதல் நான்கு மாத காலங்களின் தேயிலையின் ஏற்றுமதியின் அளவு குறைவடைந்த போதிலும், நூற்றுக்கு 12.8 சதவிகித அதிகரித்த வருமானத்தை ரூபா 458.2 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரை தேயிலை ஏற்றுமதி வியாபாரம் பெற்றுக் கொடுத்துள்ளது. 2016 இல் முதல் மூன்று மாதங்களிலும் பெற்றுக்கொண்ட இயந்திரங்களினதும், உபகரணங்களினதும் ஏற்றுமதி வருமானமான ரூபா 73.9 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரைவிட, 2017 இல் அதே காலப்பகுதிக்கான ஏற்றுமதி வருமானம் நூ ற்றுக்கு 372.8 சதவிகிதத்தால் அதிகரித்து ரூபா 101.8 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரை பெற்றுக் கொடுத்திருந்தது. கராம்பு, கறுவா, கடுகு போன்ற வாசனைத் திரவியங்களின் அதிகரித்த ஏற்றுமதிகளின் காரணமாக 2017 இன் முதல் மூன்று மாதங்களிலும் 2016 இல் இதே காலப்பகுதியில் பெற்றுக் கொண்ட ஏற்றுமதி வருமானமான ரூபா 60.9 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரைவிட நூற்றுக்கு 41.1 சதவிகிதத்தால் அதிகரித்த வருமானமான ரூபா 86.0 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரை பெற்றுக் கொடுத்துள்ளன. 2016 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களிலும் பெற்றுக்கொண்ட தெங்குப் பொருட்களின் ஏற்றுமதி வருமானங்களான ரூபா 87.8 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருடன் ஒப்பிடும் பொழுது 2017 இன் இதே காலப்பகுதியினுள் அதன் ஏற்றுமதி வருமானம் நூற்றுக்கு 3.6 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 91.0 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரை பெற்றுத்தந்துள்ளது. 2016 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களிலும் பெற்ற ஏற்றுமதி வருமானங்கள் ரூபா 92.3 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருடன் ஒப்பிடும் பொழுது 2017 இன் இதே காலப்பகுதி பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதி வருமானமானது நூற்றுக்கு 30.1 சதவிகிதத்தால் அதிகரித்து ரூபா 120.1 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராக வருமானத்தைக் ஈட்டியுள்ளது. ஐரோப்பிய சங்கத்திற்கும், ஐக்கிய அமெரிக்காவிற்குமான தைத்த ஆடைகள் ஏற்றுமதி குறிப்பிடத்தக்களவு குறைவடைந்ததனால், 2016 இன் முதல் நான்கு மாதங்களிலும் பெற்றுக்கொண்ட ஏற்றுமதி வருமானத்துடன் ஒப்பிடும் பொழுது 2017 இன் இதே காலப்பகுதியில் நூற்றுக்கு 4.9 சதவிகிதமாக வீழ்ச்சியடைந்து ரூபா 1,626.3 மில்லியனை ஏற்றுமதி வருமானமாக ஈட்டிக்கொண்டது. இதே போன்று இறப்பர் உற்பத்திகள், உணவு மற்றும் குடிவகைகள் உற்பத்திகள், புகையிலை உற்பத்தி மற்றும் போக்குவரத்துச் சாதனங்களின் ஏற்றுமதி வருமானங்கள், 2017 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில், 2016 இன் ஏற்றுமதி வருமானங்களுடன் ஒப்பிடும் பொழுது வீழ்ச்சியை முறையே நூற்றுக்கு 1.8 சதவிகிதம், 17.5 சதவிகிதம் மற்றும் 17.3 சதவிகிதங்களினால் அடைந்துள்ளன. 2017 இன் முதல் மூன்று மாதங்களிலும் மேற்கொள்ளப்பட்ட மொத்த ஏற்றுமதிகளில் அண்ணளவாக நூற்றுக்கு 51 சதவிகிதத்தை ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, ஜேர்மனி மற்றும் இத்தாலி போன்ற நாடுகளுக்கே அனுப்பப்பட்டுள்ளன.

### 1.5.2 .இறக்குமதிகள்

அரிசி உள்ளடங்கலாக அரைத்த உணவுகள், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் உட்பட எரிபொருட்கள், நிலக்கரி, தங்கம், தாணியங்கள் போன்ற இறக்குமதிகளின் செலவுகள் அதிகரித்தமையின் காரணமாக 2016 இன் முதல் நான்கு மாதங்களிலும் இவற்றிற்காகச் செலவழித்த தொகை ரூபா 6,055 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருடன் ஒப்பிடும் பொழுது 2017 இன் இதே காலப்பகுதியில் இவற்றிற்கான செலவுகள் நூற்றுக்கு 13.7 சதவிகிதமாக அதிகரித்து ரூபா 6,883.3 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராக உயர்வடைந்துள்ளது. அனல் மின் நிலையங்களுக்கான எரிபொருள் தேவை அதிகரித்ததன் காரணமாக 2017 இன் முதல் மூன்று மாதங்களிற்குமான எரிபொருட்களுக்கான இறக்குமதிச் செலவுகள், நூற்றுக்கு 81.6 சதவிகிதத்தினால் அதிகரித்து,ரூபா 882.1 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராகக் காணப்பட்டது. இதேபோன்று வைரங்கள், ஆபரணங்களிற்கான பெறுமதி கூடிய கற்கள் மற்றும் தங்கம் உள்ளிட்ட உலோக வகைகள் போன்றவற்றிற்கான இறக்குமதிச் செலவுகள் 2017 இன் முதல் மூன்று மாதங்களிலும், 2016 இன் இதே காலப்பகுதியின் இறக்குமதிச் செலவீனங்களுடன ஒப்பிடும் பொழுது நூற்றுக்கு 116.5 சதவிகிதத்தால் அதிகரித்து ரூபா

175.1 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது. உள்நாட்டுச் சந்தைகளில் அரிசிக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு அரிசி உள்ளிட்ட அரைத்த உணவுகள், தாணியங்கள் போன்றவற்றிற்கான இறக்குமதிச் செலவுகள் 2017 இன் முதல் மூன்று மாதங்களிலும் ரூபா 103.4 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராகக் காணப்பட்டது. இது 2016 இன் இதே காலப்பகுதிக்கான இறக்குமதிச் செலவுகளைவிட 1,972.4 சதவிகிதம் (20 மடங்குகள்)அதிகமாக 2017 இன் இதே காலப்பகுதிக்கான இறக்குமதிச் செலவுகள் உள்ளன.

வாகனங்களுக்கான இறக்குமதிச் செலவுகள் 2017 இன் முதல் மூன்று மாதங்களில் ரூபா 191.9 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராகக் காணப்பட்டது. இது 2016 இன் இதே காலப் பகுதியின் செலவான ரூபா 231.6 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருடன் ஒப்பிடும் பொழுது நூற்றுக்கு 17.2 சதவிகிதமாகக் குறை வடைந்துள்ளது. தைத்த ஆடைகள் மற்றும் அதற்கான பண்டங்களுக்கான இறக்குமதி 2017 இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் ரூபா 860 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராக 2016 இன் இக்காலப்பகுதிக்கான இறக்குமதிச் செலவீனம் ரூபா 896.8 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருடன் ஒப்பிடும் பொழுது நூற்றுக்கு 4.0 சத விகிதத்தினால் குறைவடைந்துள்ளது. தொலைத் தொடர்புத் தொழில் துறைக்கு பாவிக்கப்படும் இயந்திரங்களும் மற்றும் உபகரணங்களும் இது போன்றவற்றிற்கான இறக்குமதிகள் 2017 இல் குறைவடைந்ததனால் இயந்திரங்களுக்கும் உபகரணங்களுக்குமான செலவினங்கள் இவ்வருட காலத்தில் 5.8 சதவீதத்தினால் குறைவடைந்து 871.9 மில்லியன் ஐ.அ.டொலராக காணப்பட்டது. இந்தியா, சீனா, ஐக்கிய அரபு இராச்சியம், சிங்கப்பூர், மற்றும் யப்பான் போன்ற நாடுகளில் இருந்தே அண்ணலவாக மொத்த இறக்குமதி யில் 59 சதவீதத்தை 2017 இன் முதல் மூன்று மாதங்களில் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

# அத்தியாயம் 02

## உலகப் பொருளாதாரப் போக்கு

### 1.1 மேன்நோக்கு

2017ஆம் ஆண்டின் உலகப் பொருளாதார வெளிப்பாடானது அபிவிருத்தியடைந்த மற்றும் வளர்ந்து வருகின்ற சந்தைப் பொருளாதாரங்களில் காணப்படுகின்ற விசேட பொருளாதார ஆக்கக் கூறுகளின் வளர்ச்சியுடன் சாதகமான நிலையொன்றை எடுத்துக்காட்டியுள்ளது. 2016 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 3.1 சதவீதமாகக் காணப்பட்ட உலகப் பொருளாதார வளர்ச்சி 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே நூற்றுக்கு 3.5 சதவீதமாகவும் மற்றும் நூற்றுக்கு 3.6 சதவீதமாகவும் வளர்ச்சியடையும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. இதற்காக முதலீடு, வர்த்தகம் மற்றும் உற்பத்திக் கைத்தொழில் என்பன சுமூக நிலையை அடைந்தமை ஓரளவு காரணமாக அமைந்துள்ளன. 2016 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 1.7 சதவீதமாகக் காணப்பட்ட அபிவிருத்தியடைந்த பொருளாதார வளர்ச்சியானது 2017 ஆம் ஆண்டில் சுமார் நூற்றுக்கு 2.0 சதவீத நடுத்தர மட்டத்தில் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்ற அதே வேளையில், இதற்காக பிரதானமாக வியாபார நம்பிக்கை, ஊழியச்சந்தை வலுவடைந்தமை ஆகியவற்றைத் தொடர்ந்து நுகர்வு அதிகரித்தமை காரணமாகக் கொண்டு ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் செயலாற்றுகை அதிகரித்தமை என்பன காரணமாக அமைந்துள்ளன. இதனிடையே, ஐரோப்பிய பிராந்தியம் சுமூக நிலையை அடைவதில் நடுத்தர மட்டத்தில் காணப்படுகின்ற அதேவேளையில் அது 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே நூற்றுக்கு 1.7 சதவீதமாகவும் மற்றும் நூற்றுக்கு 1.6 சதவீதமாகவும் வளர்ச்சியடையும் என எதிர்வு கூறப்பட்டுள்ள அதேவேளையில் இதற்காக 2016 ஜூன் மாதத்தில் ஐக்கிய இராச்சியம் ஐரோப்பிய சங்கத்திலிருந்து விலகுவது சம்பந்தமாக நடாத்தப்பட்ட மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பின் பிரதிபலனாக உலகளாவிய நிதிச் சந்தைகளில் காணப்பட்ட தளம்பல்கள் அதிகரித்தமை காரணமாக அமைந்துள்ளன. ஐரோப்பிய பிராந்தியத்திலுள்ள சில நாடுகளில் காணப்படுகின்ற செயல்படா கடனின் அளவு அதிகரித்தமையின் காரணமாக அந்தப் பிராந்தியங்கள் அபாயத்திற்கு உட்பட்டுள்ளன. எவ்வாறாயினும் உலகளாவிய வர்த்தகம் வலுவடைந்ததைத் தொடர்ந்து முதலீடுகள் படிப்படியாக சுமூக நிலையை அடைந்ததன் காரணமாக ஐரோப்பியப் பிராந்தியத்தின் உற்பத்தி நடவடிக்கைகளும் ஏற்றுமதி வர்த்தகமும் வளர்ச்சியடைந்துள்ளன. 2016 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 1.0 சதவீதமாகக் காணப்பட்ட ஜப்பானின் பொருளாதார வளர்ச்சி 2017 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 1.2 சதவீதம் வரை நடுத்தர மட்டத்தில் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளையில் இதற்காக நுகர்வு வரியை அதிகரிப்பதனை தாமதித்ததனைத் தொடர்ந்து ஜப்பானின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கத்துடன் 2016 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் காரணமாக அமைந்துள்ளது.

வளர்ந்துவரும் பொருளாதாரங்கள் மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்களின், பொருளாதார ரீதியான நடவடிக்கைகள் சிறந்த மட்டத்தில் காணப்படும். உலகளாவிய கேள்விகள் படிப்படியாக சுமூக நிலையை அடைந்தமையை தவிர 2016 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 4.1 சதவீதமாகக் காணப்பட்ட பொருளாதார வளர்ச்சி 2017 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 4.5 சதவீதம் வரை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. விசேடமாக வர்த்தகப் பொருட்களை இறக்குமதி செய்கின்ற நாடுகளாகிய கிழக்கு ஆசிய பசுபிக் பிராந்திய மற்றும் தென்னாசிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சி உயர் மட்டத்தில் காணப்படுகின்ற அதே வேளையில் இதற்கான உள்நாட்டுக் கேள்வி வலுவடைந்தமை, உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான முதலீடு அதிகரித்தமை நேரடி வெளிநாட்டு முதலீடுகளை அடிப்படையாகக் கொண்டு அதிகூடிய போட்டித் தன்மையொன்று காணப்படுகின்ற உற்பத்திக் கைத்தொழில் மற்றும் சேவைகள் போன்ற துறைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் மற்றும் அதிகரித்துச் செல்கின்ற உலகளாவிய கேள்வி என்பன காரணமாக அமைந்துள்ளன. உலக வங்கியின் மூலம் வெளியிடப்பட்ட "Global Economic Perspectives" இல் காட்டப்பட்டுள்ள வாறு சர்வதேசப் பிராந்திய வர்த்தகம் மற்றும் முதலீடுகளின் பாய்ச்சல் அதிகரிக்கின்றமை, வளர்ந்து வருகின்ற சந்தைகள் மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற ஆசிய நாடுகளுக்கு சாதகமாக அமைந்துள்ள அதேவேளையில் அதில் தொடர்ந்தும் சீனாவில் ஒரே வழங்கல் ஒரே பாதை "One Belt One Road" என்ற ஆரம்பத்துடன் வலுவடையும்.

இதேவேளை ஆர்ஜன்டீனா, பிரேஸில் மற்றும் ரஷ்யா போன்ற சந்தைப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் பொருளாதாரங்கள் 2017 ஆம்

ஆண்டில் நூற்றுக்கு 1.8 சதவீதத்தினாலும் 2018-2019 ஆகிய காலப்பகுதியில் சராசரியாக நூற்றுக்கு 2.8 சதவீதத்தினாலும் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளையில், இதற்காக வியாபார நம்பிக்கை மற்றும் வர்த்தகப் பொருட்களின் விலைகள் அதிகரித்தமை காரணமாக அமைந்துள்ளன. சீனாவில் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான பொருளாதார இலக்குகளில் கடன்களின் வளர்ச்சியை அடைந்துகொள்வதற்கு கொள்கை ரீதியான மறுசீரமைப்புகளும் கடன் வளர்ச்சியும் காரணமாக அமைந்துள்ளன. இந்தியப் பொருளாதாரத்தின் மேன்நோக்கு இலங்கைக்கு முக்கியமானதாக அமைந்துள்ளன. நடுத்தரகால எதிர்வுகூறல்களுக்கு அமைவாக இந்தியா உலகில் துரிதமாக வளர்ச்சியடைகின்ற பொருளாதாரமாகக் காணப்படுகின்ற அதேவேளையில் இதற்காக நிதி மற்றும் நிதித்துறைகளில் மேற்கொள்ளப்பட்ட கொள்கை ரீதியான மறுசீரமைப்புக்களுடன் ஊழல் மற்றும் மோசடியைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக அமைந்துள்ளன. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்காக முறையே நூற்றுக்கு 7.2 சதவீதமாகவும் நூற்றுக்கு 7.7 இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும் அண்மைக்காலத்தில் புழக்கத்தில் காணப்பட்ட நாணயத் தாள்களை மீளப் பெறுவதற்குத் தீர்மானிக்கப்பட்டமை, இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் பாதகமான தாக்கம் செலுத்தியுள்ள அதேவேளையில் அது நுகர்வுகளுக்கான பொருளாதாரங்களில் எதிர்மறையாக தாக்கம் செலுத்தியுள்ளன. இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் மற்றும் வியட்னாம் போன்ற நாடுகள் சிறந்த மட்டத்தில் காணப்படுகின்ற அதேவேளையில் மலேசியா மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளின் பொருளாதார நடவடிக்கைகள் நடுத்தர மட்டத்தில் காணப்படும்.

2016 ஆம் ஆண்டில் காணப்பட்ட பொருளாதாரத்தின் மந்தமான நிலையின் பின்னர் 2017 ஆம் ஆண்டில் குறைந்த வருமானம் பெறும் நாடுகள் நூற்றுக்கு 4.7 சதவீத பொருளாதார வளர்ச்சியை அடைந்துகொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளையில், இதற்காக சந்தைப் பொருட்களின் விலைகள் அதிகரித்தமை மற்றும் பேரண்டப் பொருளாதாரங்களின் சமநிலையற்ற தன்மையைத் தவிர்ப்பதற்காக எடுக்கப்பட்ட உலகளாவிய சந்தை மற்றும் கொள்கை ரீதியான நடவடிக்கைகள் காரணமாக அமைந்துள்ளன. உலோகங்களின் விலைகள் அதிகரித்தமை கொங்கோ அரசாங்கம், கினியா மற்றும் நய்ஜர் போன்ற உலோகத்தை ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கு நன்மைகள் கிடைத்துள்ளன. வளப் பற்றாக்குறையுள்ள குறைந்த வருமானம் பெறும் பெரும்பாலான நாடுகளில் (எதியோப்பியா, இந்தோனேசியா, மலேசியா, ருவண்டா, செனகல் மற்றும் தன்சானியா) சேவைத்துறை விரிவடைந்தமை, உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்காக முதலீடு மற்றும் விவசாயக் கைத்தொழில் நடவடிக்கைகள் அதிகரித்தமை அவற்றின் பொருளாதார வளர்ச்சி துரிதமடைவதற்கு துணை புரிந்துள்ளன. எவ்வாறாயினும் பாதுகாப்பு சம்பந்தமான அச்சுறுத்தல் தீவிரடைந்தமை, புவி அரசியல் ஸ்திரமற்ற நிலை, நாடுகளுக்கிடையிலான போராட்ட நிலைகள் தோன்றியமை மற்றும் சீரற்ற காலநிலைகள் போன்ற பொருளாதார ரீதியல்லாத விடயங்கள் குறைந்த வருமானம் பெறும் நாடுகளில் பொருளாதார வளர்ச்சியில் கடுமையான தாக்கங்களைச் செலுத்துகின்றன.

**அட்டவணை 2.1 : உலகப் பொருளாதாரம் ஒரு பார்வை - 2016**

| நாடு | மொ.உ.உ வளர்ச்சி (வருடாந்த வளர்ச்சி மாற்றங்கள் | பணவீக்கம் (சதவீதம்) | வேலையின்மை சதவீதம் | அரசிறை பற்றாக்குறை (மொ.உ.உ சதவீதமாக) | மொத்த பற்றாக்குறை (மொ.உ.உ சதவீதமாக) |
|---|---|---|---|---|---|
| ஆர்ஜெந்தீனா | -2.3 | … | 8.5 | -5.8 | 51.3 |
| அவுஸ்திரேலியா | 2.5 | 1.3 | 5.7 | -2.7 | 41.1 |
| பிரேசில் | -3.6 | 8.7 | 11.3 | -9.0 | 78.3 |
| கனடா | 1.4 | 1.4 | 7.0 | -1.9 | 92.3 |
| சிலி | 1.6 | 3.8 | 6.5 | -2.9 | 21.2 |
| சீனா | 6.7 | 2.0 | 4.0 | -3.7 | 46.2 |
| பிரான்ஸ் | 1.2 | 0.3 | 10.0 | -3.3 | 96.6 |
| ஜேர்மனி | 1.8 | 0.4 | 4.2 | 0.8 | 67.6 |
| கிரேக்கம் | 0.0 | 0.0 | 23.8 | 0.0 | 181.3 |
| இந்தியா | 6.8 | 4.9 | … | -6.6 | 69.5 |
| இந்தோனேசியா | 5.0 | 3.5 | 5.6 | -2.5 | 27.9 |

| நாடு | மொ.உ.உ வளர்ச்சி (வருடாந்த வளர்ச்சி மாற்றங்கள் | பணவீக்கம் (சதவீதம்) | வேலையின்மை சதவீதம் | அரசிறை பற்றாக்குறை (மொ.உ.உ சதவீதமாக) | மொத்த பற்றாக்குறை (மொ.உ.உ சதவீதமாக) |
|---|---|---|---|---|---|
| இத்தாலி | 0.9 | -0.1 | 11.7 | -2.4 | 132.6 |
| யப்பான் | 1.0 | -0.1 | 3.1 | -4.2 | 239.2 |
| கொரியா | 2.8 | 1.0 | 3.7 | 0.3 | 38.6 |
| மலேசியா | 4.2 | 2.1 | 3.5 | -3.0 | 56.3 |
| மெக்சிகோ | 2.3 | 2.8 | 4.3 | -2.9 | 58.1 |
| ரஷ்யா | -0.2 | 7.0 | 5.5 | -3.7 | 17.0 |
| சிங்கப்பூர் | 2.0 | -0.5 | 2.1 | 3.3 | 112.0 |
| தென்னாபிரிக்கா | 0.3 | 6.3 | 26.7 | -3.5 | 50.5 |
| ஸ்பெய்ன் | 3.2 | -0.2 | 19.6 | -4.6 | 99.3 |
| இலங்கை | 4.4 | 4.0 | 4.4 | -5.4 | 79.3 |
| தாய்லாந்து | 3.2 | 0.2 | 0.8 | 0.5 | 42.2 |
| ஐக்கிய இராச்சியம் | 1.8 | 0.6 | 4.9 | -3.1 | 89.2 |
| ஐக்கிய அமெரிக்கா | 1.6 | 1.3 | 4.9 | -4.4 | 107.4 |
| வியட்நாம் | 6.2 | 2.7 | 2.4 | -6.6 | 62.4 |

மூலம்: உலகப் பொருளாதார பார்வை,, ச.நா.நி ஏப்ரல் 2017, அரசிறை கண்காணிப்பு ச.நா.நி ஏப்ரல் 2017 ஆண்டறிக்கை 2016 இலங்கை மத்திய வங்கி

... தகவல் இல்லை

### 2.2 பண வீக்கம்

அபிவிருத்தியடைந்த, வளர்ந்து வருகின்ற சந்தைகள் மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்களின் நுகர்வுப் பொருட்களின் விலைகள் அதிகரித்தமையின் காரணமாக 2017 ஆம் ஆண்டின் உலகளாவிய தலைக்குரிய பணவீக்கம் அதிகரிக்குமென எதிர்பார்க்கப் படுகின்றது. 2017 ஆம் ஆண்டின் நோர்வே தவிர்ந்த சகல பொருளாதாரங்களிலும் பணவீக்கம் 2016 ஆம் ஆண்டிலும் பார்க்க அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டு அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களின் நுகர்வுப் பொருள் விலையின் பணவீக்கம் 2016 ஆம் ஆண்டில் காணப்பட்ட நூற்றுக்கு 0.8 சதவீதத்திலிருந்து நூற்றுக்கு 2.0 சதவீதம் வரை அதிகரிக்குமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. எரி சக்தியின் விலை அதிகரித்தமையின் காரணமாக ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் வருடாந்த பணவீக்கம் 2016 ஆம் ஆண்டில் காணப்பட்ட நூற்றுக்கு 1.3 சதவீத பெறுமதியுடன் ஒப்பிடும்போது 2017 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 2.7 சதவீதம் வரை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. எரிசக்தி மற்றும் உணவுகளின் விலைகளில் அடிப்படை வருடத்தில் தாக்கம் செலுத்தியதன் காரணமாக ஐரோப்பிய பொருளாதாரங்களின் பணவீக்கம் 2016 ஆம் ஆண்டில் காணப்பட்ட நூற்றுக்கு 0.2 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 2017 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 1.7 சதவீதம் வரை அதிகரிக்கும். 2016 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 0.6 சதவீதமாகக் காணப்பட்ட ஐக்கிய இராச்சியத்தின் பணவீக்கம் 2017 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 2.5 சதவீதம் வரை அதிகரித்துள்ள அதேவேளையில் ஸ்ரேலிங் பவுன் தேய்மானம் அடைந்தமை மற்றும் எரிசக்தி விலை அதிகரித்தமை ஆகியவற்றின் காரணமாக நுகர்வுச் செலவுகள் குறைவடைந்தமை இதற்குக் காரணமாக அமைந்துள்ளன. எரிசக்தி விலை அதிகரித்தமை, ஜப்பான் யென்னின் பெறுமதி தேய்மானம் அடைந்தமை மற்றும் 2017 ஆம் ஆண்டில் சம்பளங்கள் சிறிதளவு அதிகரித்தமை ஆகியவற்றின் காரணமாக ஜப்பானின் பனவீக்கம் நூற்றுக்கு 1.0 சதவீத சராசரிப் பெறுமதியைப் பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரதானமாக நுகர்வுப் பொருட்களின் விலை அதிகரித்ததன் காரணமாக வளர்ந்து வருகின்ற சந்தைகள் மற்றும் அபிவிருத்தியடைந்து

வருகின்ற பொருளாதாரங்களில் (ஆர்ஜன்டீனா மற்றும் வெனிசுவேலா தவிர்ந்த) பணவீக்கம் 2016 ஆண்டில் காணப்பட்ட நூற்றுக்கு 4.4 சதவீதப் பெறுமதியிலிருந்து 2017 ஆம் ஆண்டு நூற்றுக்கு 4.7 சதவீதம் வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உற்பத்தி விலைகள் அதிகரித்தமை மற்றும் ஆதன வர்த்தக முதலீடுகள் சுமூக நிலையை அடைந்தமை ஆகியவற்றின் காரணமாக சீனாவின் பணவீக்கம் 2016 ஆம் ஆண்டில் காணப்பட்ட நூற்றுக்கு 2.0 சதவீதப் பெறுமதியிலிருந்து 2017 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 2.4 சதவீதம்வரை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தியாவின் பணவீக்கம் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே நூற்றுக்கு 4.8 சதவீதமாகவும் நூற்றுக்கு 5.1 சதவீதமாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும் நாணய அலகு தேய்மானம் அடைவதைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் விலை அதிகரிப்பதனை நிர்வகித்தமை ஆகியவற்றின் காரணமாக பிரேசில் மற்றும் ரஷ்யா ஆகியவற்றின் பணவீக்கம் மேலும் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### 1.3 வட்டி வீதங்கள்

2017 மற்றும் 2018 ஆண்டுகளில் மாதாந்த ஐக்கிய அமெரிக்க டொலர் வைப்பின் அடிப்படையில் லண்டன் வங்கியிடை வட்டி வீதம் (LIBOR) முறையே நூற்றுக்கு 1.7 மற்றும் நூற்றுக்கு 2.8 சதவீத சராசரிப் பெறுமதியில் காணப்படுமென 2017 ஆம் ஆண்டுக்கான "உலகப் பொருளாதார நோக்கு" (WEO) அறிக்கையின் மூலம் எதிர்வு கூறப்பட்டுள்ளது. அதேவேளையில் மூன்று மாத யூரோ வைப்பு வீதம் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே நூற்றுக்கு -0.3 மற்றும் நூற்றுக்கு - 0.2 சதவீத சராசரிப் பெறுமதியில் காணப்படும். அது மாதாந்த ஜப்பான் யென் வைப்பின் மீதான வட்டிவீதம் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்காக நூற்றுக்கு 0.0 சதவீதமாக இருக்கும்.

### 2.4 செலாவணி வீதம்

நுகர்வுப் பொருட்களின் விலைகள் வலுவடைந்ததைத் தொடர்ந்து 2017 ஆம் ஆண்டில் அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்கள், வளர்ந்துவரும் சந்தைகள் மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்கள் ஆகியவற்றின் செலாவணி வீதம் வலுவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஐக்கிய அமெரிக்க குடியரசின் தேர்தலின் பின்னர் சமஷ்டி ஒதுக்க முறை FED விகிதாசாரம் அதிகரித்ததைத் தொடர்ந்து ஐக்கிய அமெரிக்க டொலர் மிகைப் பெறுமதியைப் பெற ஆரம்பித்தது. செலாவணி வீதத்தின் வேறுபாடுகள் விரிவடைந்ததைத் தொடர்ந்து 2016 ஆகஸ்ட் மாதத்திற்கும் 2017 மார்ச்சு மாத இறுதி அரைப்பகுதிக்கும் இடையிலான காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்க டொலர் வலுவடைந்த அதேவேளையில் யூரோ மற்றும் விசேடமாக ஜப்பான் யென்னின் பெறுமதி பலவீனமடைந்துள்ளது. விசேடமாக துருக்கியின் லீரா மற்றும் மெக்ஸிகோவின் பெஸ்ஸோ உட்பட வளர்ந்து வரும் சந்தைகள் சிலவற்றின் நாணய அலகுகள் கடந்த சில மாதங்களில் குறிப்பிடத்தக்களவில் குறைவடைந்துள்ளன. வளர்ந்து வருகின்ற சந்தைகளில் நாணய அலகுகள் டொலருடன் ஒப்பிடும்போது கடுமையாக தேய்மானம் அடைகின்றமை வளர்ந்துவரும் சந்தைகளில் நிதியல்லாத நிறுவனங்களில் டொலரை அடிப்படையாகக் கொண்ட கடன் அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்துள்ளன. எவ்வாறாயினும் மசகு எண்ணெயின் படிப்படியாக சுமூக நிலையை அடைந்ததைத் தொடர்ந்து ரஷ்யா உள்ளிட்ட நுகர்வுப் பொருட்களின் ஏற்றுமதியாளர்களின் நாணய அலகுகள் மிகைப் பெறுமதியைப் பெற்றுள்ளன.

### 2.5 அரசிறைப் பற்றாக்குறை

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக உலகளாவிய அரசிறை மீதியின் சராசரிப் பெறுமதி 2016 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 3.6 சதவீதத்தை பதிவுசெய்துள்ள அதேவேளையில் அது 2017 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 3.4 சதவீதம் வரை நூற்றுக்கு 0.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. அது 2018 ஆம் ஆண்டில் மேலும் வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்கள், வளர்ந்து வரும் சந்தைகள் மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்களின் பொருளாதார நடவடிக்கைகள் வளர்ச்சியடைந்தமையும் வர்த்தகப் பொருட்களின் விலைகள் படிப்படியாக சுமூக நிலையை அடைந்தமையும் உலகளாவிய வர்த்தகம் சுமூக நிலையை அடைந்தமையும் இதற்கு பிரதான காரணமாக அமைந்துள்ளன. அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அரசிறைப் பற்றாக்குறையின் சராசரிப் பெறுமதி 2017 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 2.7 சதவீதம்வரை ஓரளவு வீழ்ச்சியடைந்துள்ள அதேவேளையில் அது 2018 ஆம் ஆண்டிலும் அதே மட்டத்தில் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும் பெற்றோலியம் மற்றும் உலோகங்களின்

விலைகள் அதிகரித்ததன் காரணமாக அரசிறைப் பற்றாக்குறையை குறைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையின் காரணமாக வளர்ந்து வருகின்ற சந்தைகள் மற்றும் நடுத்தர வருமானம் பெறும் பொருளாதாரங்களின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமான அரசிறைப் பற்றாக்குறை 2016 ஆம் ஆண்டில் காணப்பட்ட நூற்றுக்கு 4.8 சதவீத பெறுமதியிலிருந்து 2017 ஆம் ஆண்டின் நூற்றுக்கு 4.4 சதவீதம் வரை சிறிதளவு வீழ்ச்சியடைந்துள்ளது.

அதேபோன்று நிதி நிலைமை படிப்படியாக இறுக்கமடையுமென எதிர்பார்த்ததன் காரணமாக குறைந்த வருமானத்தைக்கொண்ட அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்களின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அரசிறைப் பற்றாக்குறையின் சராசரிப் பெறுமதி நூற்றுக்கு 4.4 சதவீதப் பெறுமதியில் தொடர்ந்தும் காணப்பட்டது.

### 2.6 பொதுப் படுகடன்

2016 ஆம் ஆண்டில் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சதவீதமக நூற்றுக்கு 83.6 சதவீதமாகக் காணப்பட்ட உலகளாவிய பொதுப்படுகடனின் அளவு 2017 ஆம் ஆண்டின் நூற்றுக்கு 83.1 சதவீதம்வரை வீழ்ச்சியடைந்துள்ளது. அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களின் 2016 ஆம ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நூற்றுக்கு 107.6 சதவீதமாகக் காணப்பட்ட மொத்த பொதுபடுகடன் அளவு 2017 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 107.1 சதவீதம்வரை ஓரளவு வீழ்ச்சியடைந்துள்ள அதேவேளையில் அது நடுத்தர காலத்தில் நிலையாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும் வளர்ந்து வருகின்ற சந்தைகள் மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்களில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக பொதுபடுகடன் அளவு 2017 ஆம் ஆண்டிலும் 2018 ஆம் ஆண்டிலும் முறையே நூற்றுக்கு 48.6 சதவீதமாகவும் நூற்றுக்கு 49.8 சதவீதமாகவும் இருக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. (மந்த கதியிலான வளர்ச்சி, அதிகூடிய மிகைச் செலவுகள் மற்றும் செலாவணி வீதம் தேய்மானமடைகின்றமை ஆகியவற்றின் காரணமாக நிதி நிலைமை பலவீனமடைவதன் மூலம்) வளர்ந்து வரும் சந்தைகள் மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்களின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக பொதுபடுகடன் அதிகரித்துள்ளது.

அதேவேளையில் வரி வருமானம் குறைவடைந்தமை, அரசாங்க முதலீடு மற்றும் மீண்டுவரும் செலவினம் அதிகரித்தமை, அதிகூடிய வட்டிச் செலவுகள் ஆகியவற்றின் காரணமாக நிதிப் பற்றாக்குறை விரிவடைந்தபடியினால் குறைந்த வருமானங்களைக் கொண்ட அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளின் மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக பொதுபடுகடனின் அளவு 2016 ஆம் ஆண்டில் காணப்பட்ட நூற்றுக்கு 40.4 சதவீதப் பெறுமதியிலிருந்து 2017 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 41.9 சதவீதம்வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### 2.7 சர்வதேச வர்த்தகம்

சர்வதேச வர்த்தகம் 2016 ஆண்டின் 2 ஆம் அரையாண்டில் இருந்து கட்டுப்படுத்தப்பட்டுள்ள அதேவேளையில் அது 2017 ஆம் ஆண்டின் 1 ஆவது காலாண்டினுள் தொடர்ந்தும் வலுவாகக் காணப்பட்டது. கைத்தொழில் செயற்பாடுகள் வலுவடைந்தமை, அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களின் முதலீடுகள் அதிகரித்தமை, சீனாவுக்கும் அதற்கு வெளியிலும் அதிகரித்த வர்த்தக பாய்ச்சல் வளர்ச்சியடைந்தமை மற்றும் வர்த்தகப் பொருட்களை ஏற்றுமதி செய்கின்ற வளர்ந்து வரும் பொருளாதாரங்கள் மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்களின் பலவீனமான இறக்குமதிக் கேள்வியின் காரணமாக 2017 ஆம் ஆண்டில் வர்த்தகம் வளர்ச்சியடைவது சுமூக நிலையை அடைவதற்கு காரணமாக அமைகின்றன. உலக வர்த்தக கொள்ளளவு முன்னைய வருடத்தில் நூற்றுக்கு 1.3 சதவீதம் சிறியதொரு வளர்ச்சியை எடுத்துக் காட்டியுள்ள அதேவேளை 2017 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 2.4 சதவீதத்தினால் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 2018 ஆம் ஆண்டில் வர்த்தக வளர்ச்சி நூற்றுக்கு 2.1 சதவீதத்திற்கும் நூற்றுக்கு 4 சதவீதத்திற்கும் இடையில் காணப்படும் என உலக வர்த்தக அமைப்பினால் (WTO) எதிர்வு கூறப்பட்டுள்ளது. உலக வர்த்தக அமைப்பின் அண்மைக்கால கூற்றுக்களுக்கு அமைவாக 2017 ஆம் ஆண்டின் அபிவிருத்தியடைந்த, அபிவிருத்தியடைந்து வருகின்ற மற்றும் வளர்ந்து வருகின்ற பொருளாதாரங்களின் ஏற்றுமதி வளர்ச்சி முறையே நூற்றுக்கு 2.8 சதவீதமாகவும் நூற்றுக்கு 2.2. சத வீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனிடையே அபிவிருத்தியடைந்த, அபிவிருத்தியடைந்து வருகின்ற மற்றும் வளர்ந்து வருகின்ற பொருளாதாரங்களின் இறக்குமதி 2017 ஆம் ஆண்டில் முறையே நூற்றுக்கு 3.0 சதவீதமாகவும் நூற்றுக்கு 2.2 சதவீதமாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளையில் விசேடமாக பிரதான அபிவிருத்தியடைந்த

பொருளாதாரங்களின் நுகர்வுச் செலவுகள் கடுமையாக அதிகரித்தமை மற்றும் உலகளாவிய வர்த்தகப் பொருள் வியாபாரம் வலுவடைந்தமை ஆகியவற்றின் காரணமாக சேவை வர்த்தகம் வருடத்தினுள் நிலையாகக் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**2.8 வர்த்தகப் பொருட்களின் விலைகள்**

2017 ஆம் ஆண்டின் வர்த்தகப் பொருட்களின் விலைகள் வலுவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஒருசில ஒபெக் மற்றும் ஒபெக் அல்லாத உற்பத்தியாளர்கள் உடன்பட்ட விதத்தில் 2016 நவம்பர் மாதத்தில் உற்பத்தி குறைவடைந்ததன் காரணமாக 2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் எண்ணெய் உற்பத்தி குறைவடைந்தது. எவ்வாறாயினும் உற்பத்தித் திறன் வளர்ச்சியின் காரணமாக ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் எண்ணெய் உற்பத்தி எதிர்பார்க்கப்பட்ட அளவிலும் பார்க்க அதிகரித்ததன் மூலம் இந்த எண்ணெய் உற்பத்தி குறைவடைவதற்கு காரணமாக அமைந்தது. எவ்வாறாயினும் 2016 ஆம் ஆண்டில் காணப்பட்ட பீப்பாய் ஒன்றுக்கான ஐக்கிய அமெரிக்க டொலர் 43 இலிருந்து 2017 ஆம் ஆண்டின் பீப்பாய் ஒன்றுக்கு சராசரியாக ஐக்கிய அமெரிக்க டொலர் 55 பெறுமதியைப் பெறும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. இந்த அதிகரிப்பு குறித்து எண்ணெய்க்கான கேள்வி அதிகரித்தல் மற்றும் கையிருப்பு வீழ்ச்சியடைதல் அதேபோன்று ஒபெக் மற்றும் ஒபெக் அல்லாத உற்பத்தியாளர்களினால் உற்பத்தியை வரையறுப்பது 2018 மார்ச்சு வரை நீடிப்பதற்கும் காரணமாக அமைந்துள்ளது. விவசாய கைத்தொழில் பொருட்களின் விலைகள் 2017 ஆம் ஆண்டிலும் 2018 ஆம் ஆண்டிலும் நிலையாக இருக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் "WEO 2017" அறிக்கைக்கு அமைவாக கிழக்கு ஆசிய மற்றும் தென் அமெரிக்க வழங்கல் வரையறுக்கப்பட்டதைத் தொடர்ந்து எண்ணெய் மற்றும் உலோகப் பொருட்களின் விலைகள் நூற்றுக்கு 3 சதவீதத்தினால் அதிகரிக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. மேற்கு ஆபிரிக்காவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற கொக்கோகோலாவின் வழங்கல் அதிகரித்ததைத் தொடர்ந்து 2017 ஆம் ஆண்டில் குடிபான வகைகளின் விலைகள் நூற்றுக்கு 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இயற்கை இறப்பரின் வழங்கல் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக மூலப் பொருட்களின் விலைகள் நூற்றுக்கு 4 சதவீதத்தினால் அதிகரிக்கும். உரத்தின் விலைகள நூற்றுக்கு 1 சத வீதத்தினால் அதிகரிக்கும். சீனாவின் கேள்வி அதிகரித்தல் மற்றும் பெரும்பாலான உலோக வகைகளுக்கான இறுக்கமான சந்தைகள் ஆகியவற்றின் காரணமாக 2017 ஆம் ஆண்டின் உலோகப் பொருட்களின் விலைகள் நூற்றுக்கு 16 சதவீதம் வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**அட்டவணை 2.2 : சர்வதேச பொருள் விலைகள்**

ஐ.அ.டொ.

| விடயம் | அலகு | மெய் | | எதிர்பார்கை | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2015 | 2016 | 2017 கா 1 | 2017 கா 2 | 2017 கா 3 | 2017 கா 4 |
| **சக்தி** | | | | | | | |
| நிலக்கரி, அவுஸ்திரேலியா | $MT | 62.7 | 70.1 | 87.9 | 84.0 | 78.9 | 77.4 |
| மசகு எண்ணெய், சராசரி * | $/bbl | 50.8 | 42.8 | 53.0 | 50.9 | 51.8 | 52.1 |
| இயற்கை வாயு, ஐ.அ | $/MMBTU | 2.6 | 2.5 | 3.0 | 3.2 | 3.3 | 3.4 |
| **சக்தியல்லாதவை** | | | | | | | |
| **விவசாயம்** | | | | | | | |
| **குடிபானங்கள்** | | | | | | | |
| கொக்கோ | $MT | 3,135.2 | 2,892.0 | 2,097.4 | 1,926.1 | 1,920.1 | 1,953.1 |
| கோப்பி, ரோபுஸ்தா | cts/lb | 94.2 | 94.3 | 110.5 | 103.4 | 103.7 | 103.7 |
| தேயிலை | cts/kg | 340.4 | 287.4 | 369.2 | 369.8 | 378.3 | 378.3 |

ஐ.அ.டொ.

| விடயம் | அலகு | மெய் | | எதிர்பார்க்கை | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2015 | 2016 | 2017 கா 1 | 2017 கா 2 | 2017 கா 3 | 2017 கா 4 |
| **உணவுகள்** | | | | | | | |
| **கொழுப்புகள், எண்ணெய்கள்** | | | | | | | |
| பாம் எண்ணெய் | $MT | 565.1 | 639.8 | 698.9 | 647.6 | 602.5 | 573.7 |
| சோயா அவரை உணவு | $MT | 352.7 | 350.2 | 364.3 | 339.0 | 334.0 | 336.8 |
| சோயா அவரைகள் | $MT | 347.4 | 362.7 | 375.5 | 346.4 | 341.0 | 341.4 |
| **தானியங்கள்** | | | | | | | |
| சோளம் | $MT | 169.8 | 159.2 | 160.6 | 158.4 | 163.7 | 170.0 |
| அரிசி | $MT | 380.0 | 388.3 | 369.6 | 397.3 | 423.4 | 436.5 |
| கோதுமை | $MT | 185.6 | 143.2 | 143.6 | 144.3 | 151.6 | 161.4 |
| **ஏனைய உணவுகள்** | | | | | | | |
| சீனி, சுதந்திர சந்தை | cts/lb | 13.2 | 18.5 | 19.6 | 15.7 | 15.1 | 15.4 |
| **மூலப் பொருட்கள்** | | | | | | | |
| பருத்தி | cts/lb | 70.4 | 74.2 | 84.8 | 87.5 | 86.3 | 82.8 |
| இறப்பர் | cts/lb | 70.7 | 74.5 | 115.4 | 100.0 | 92.6 | 87.0 |
| சோன்வூட், ஹார்ட் வூட் | $/M3 | 833.3 | 738.9 | 674.9 | 688.4 | 688.4 | 688.4 |
| **உலோகங்கள் கனியுப்புக்கள்** | | | | | | | |
| அலுமினியம் | $MT | 1,664.7 | 1,604.2 | 1,851.2 | 1,925.9 | 1,951.4 | 1,959.8 |
| செப்பு | $MT | 5,510.5 | 4,867.9 | 5,840.0 | 5,643.8 | 5,659.8 | 5,680.2 |
| நிக்கல் | $MT | 11,862.6 | 9,595.2 | 10,273.1 | 9,277.1 | 9,077.5 | 9,133.3 |

**மூலம்:** விலை எதிர்வுகூறல் (29.05.2017) ச.நா.நி, இணையதளம்: *www.imf.org/external/np/res/commodi/index.aspx*

* ஐ.இ பிரன்ட், டுபாய் மற்றும் மேற்கு மத்திய லெக்சாஸ் என்பனவற்றிற்கான உடனடி விலைகளின் பெற்றோலிய விலையின் சராசரி

# அத்தியாயம் 03

## அரசிறை அபிவிருத்திகள்

### 3.1 மேன்நோக்கு

நடுத்தரக் காலத்தில் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையினை குறைந்த மட்டத்தில் பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் வருமானத்தினை அடிப்படையாகக் கொண்ட அரசிறைத் திரட்சி செயன்முறையானது 2017 இன் முதல் நான்கு மாதங்களிலும் அரசாங்கத்தினால் தொடர்ந்தும் செயற்படுத்தப்பட்டது. 2016 இல் அடையப் பெற்றவாறு வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிலையான மட்டமொன்றுக்குக் கொண்டுவரும் நோக்கிலான அரசின் உறுதியான அர்ப்பணிப்புச் செயற்பாடு காரணமாக 2017 இன் மீளாய்வுக் காலப்பகுதியின் போது மொத்த வருமானம் ரூபா 589.7 பில்லியன் வரை 24.6 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளதோடு 2016 இன் இதே காலப்பகுதியில் இது ரூபா 472.7 பில்லியனாகவும் காணப்பட்டது. அவ்வாறே, மீளாய்வுக் காலப்பகுதியில் வரியல்லாத வருமானம் ரூபா 35 பில்லியன் வரை 10.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதோடு இதனை 2016 இன் இதே காலப்பகுதியோடு ஒப்பிடும்போது ரூபா 31 பில்லியனாகவும் காணப்பட்டது. அரசிறைத் திரட்சி செயற்பாடானது 2017 இன் முதல் நான்கு மாதங்களில் அரசிறைப் பரப்பெல்லையினை ஒப்பீட்டளவில் விரிவு படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளதோடு, அரச முதலீடுகளுக்காக அதிக வளங்களை ஒதுக்குவதற்கும் அரசாங்கத்திற்கு அவகாசமளித்துள்ளது. 2017 இன் முதல் நான்கு மாதங்களில் அரச முதலீடுகள் ரூபா 201 பில்லியனாகக் காணப்பட்டதோடு 2016 இன் இதே காலப்பகுதியில் பதிவாக்கிய ரூபா 152 பில்லியனோடு ஒப்பிடுகையில் இது 32.3 சதவீத வளர்ச்சியாகும். இதன் விளைவாக மீளாய்வுக் காலப்பகுதியில் மொத்த செலவினம் ரூபா 822.8 பில்லியனுக்கு 16.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

வரி நிருவாகத்தினை பலப்படுத்தல், வரி விலக்களிப்புக்களை ஒழுங்குபடுத்தல், வரி முறைமையினை இலகுபடுத்தல் மற்றும் வரி அடிப்படையினை விரிவுபடுத்தல் என்பவற்றின் மூலம் அரச வருமானத்தினை அதிகரிப்பதற்காக பல வரி மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. பெறுமதிசேர் வரி வீதத்தினை 11 சதவீதத்திலிருந்து 15 சதவீதம் வரை அதிகரித்தல், பெ.சே.வ. செலுத்துவதற்காக பதிவு செய்ய வேண்டியவ வரி முதல் நிலையினைக் குறைத்தல் மற்றும் பல வரி விலக்களிப்புக்களை நீக்குவதன் மூலம் பெ.சே.வ. அடிப்படையினை விரிவுபடுத்தல், தேச கட்டுமான வரி முதல் நிலையினைக் குறைத்தல், பொருளாதார சேவைக் கட்டண வரி வீதத்தினை அதிகரித்தல், மோட்டார் வாகனங்களுக்கான உற்பத்தித் தீர்வையின் அலகு வீதங்களை அதிகரித்தல் அத்துடன், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வருமான முகாமைத்துவத் தகவல் முறைமை (RAMIS), இலங்கை சுங்கத் திணைக்களத்தின் ஒற்றைச் சாரளத்தின் மூலம் சேவை வழங்கல் முறைமை (Singld Window System) மற்றும் பொது திறைசேரியின் ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை (TIMIS) என்பவற்றின் மூலம் வரி நிருவாகத்தினைச் பலப்படுத்துதல் என்பன இவ்வரி மறுசீரமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, அரசாங்கத்தின் வரி வருமானத்தினை அதிகரிக்கும் வகையில் வரிச் சட்டத்தினை இலகுபடுத்துவதற்காக புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டம் தற்போது வரைவு செய்யப்பட்டுள்ளது.

உள்நாட்டுச் செயற்பாடுகளில் ஏற்பட்ட அதிகரிப்புடன் இணைந்த வகையில், அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை ரீதியிலான நடவடிக்கைகளின் விளைவாக, 2017 இன் முதல் நான்கு மாதங்களின் போது நேரடியல்லாத வரிகள் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் 2016 இன் இதே காலப்பகுதியோடு ஒப்பிடுகையில் ரூபா 177,153 மில்லியனுக்கு 32.3 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளதோடு, இறக்குமதியினை அடிப்படையாகக் கொண்ட வரி வருமானமும் ரூபா 277,927 மில்லியனுக்கு 22.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. 2017 இன் முதல் நான்கு மாதங்களின் போது உள்நாட்டுச் செயற்பாடுகள் மீதான பெ.சே.வரி மூலம் கிடைக்கப்பெற்ற வருமானத்தினை 2016 இன் இதே காலப்பகுதியோடு ஒப்பிடும்போது ரூபா 96,811 மில்லியனாக 86.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதோடு, இறக்குமதியின் பேரிலான பெ.சே.வரி வருமானம் ரூபா 55,759 மில்லியன் வரை 95.1 சதவீதத்தினாலும் அதிகரித்துள்ளது. பெ.சே. வரி வீதம் 12 சதவீதத்திலிருந்து 15 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டதன் காரணமாக பெ.சே. வரி செலுத்துவதற்கான முதல் நிலையானது ஆண்டொன்றுக்கு ரூபா 12 மில்லியன் வரையிலும் மொத்த மற்றும் சில்லறை வியாபாரத்திற்கான பெ.சே.வரி செலுத்த வேண்டிய புரள்வின் வரி முதல் நிலையானது காலாண்டொன்றுக்கு ரூபா 100 மில்லியனிலிருந்து 12.5 மில்லியன் வரை

குறைக்கப்பட்டதன் காரணமாகவும் பெ.சே. வரி அடிப்படை விரிவடைவதற்கு காரணமாக அமைந்துள்ளது. முதல் நான்கு மாதங்களுக்கான இறக்கமதியின் பேரிலான பெ.சே.வரி 2016 இன் இதே காலப்பகுதிக்கான ரூபா 28,574 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 55,759 மில்லியன் வரை 95.1 சதவீதம் வரையில் வளர்ச்சியடைந்துள்ளதோடு, மீளாய்வுக் காலப்பகுதியின்போது இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பே இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. தேசக் கட்டுமான வரியினைப் பதிவு செய்வதற்கான முதல் நிலையினை ஆண்டொன்றுக்கு ரூபா 15 மில்லியனிலிருந்து ஆண்டொன்றுக்கு ரூபா 12 மில்லியன் வரை குறைப்பதற்கு எடுக்கப்பட்ட கொள்கை ரீதியிலான தீர்மானம் காரணமாக உள்நாட்டுச் செயற்பாடுகள் மீதான தேசக் கட்டுமான வரி வருமானமும் ரூபா 16,644 மில்லியன் வரை 55.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதேவேளை, மீளாய்வுக் காலப்பகுதியில் இறக்குமதிச் செயற்பாடுகள் மீதான தேசக் கட்டுமான வரியானது ரூபா 6,119 மில்லியனுக்கு 1.6 சதவீதத்தினால் அண்ணளவாக அதிகரித்துள்ளது.

மீளாய்வுக் காலப்பகுதியின் போது மதுபானம் மற்றும் சிகரெட் என்பவற்றின் மீதான உற்பத்தி வரி மூலம் திரட்டப்பட்ட வருமானம் முறையே 9.3 சதவீதத்தினாலும் 17.1 சத வீதத்தினாலும் குறைவடைந்துள்ளதோடு, மதுபானம் மற்றும் சிகரெட் உற்பத்தியின் பேரிலான உற்பத்தி வரி வீதம் அதிகரிக்கப்பட்டதன் காரணமாக அவற்றில் ஏற்பட்ட நுகர்வு வீழ்ச்சியடைந்து உற்பத்தியும் வீழ்ச்சியடைந்தமை இதற்கு பிரதான காரணமாக அமைந்துள்ளது. மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தி வரி மூலம் திரட்டப்பட்ட வருமானம் 2017 இன் முதல் நான்கு மாதங்களில் திரட்டப்பட்ட வருமானத்தோடு ஒப்பிடுகையில் 2016 இன் இதே காலப்பகுதியில் ரூபா 59,433 மில்லியனிலிருந்து ரூபா 64,004 மில்லியன் வரை 7.7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. மின்சார வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் மீது அலகு ரீதியிலான உற்பத்தி வரி வீதங்கள் அதிகரிக்கப்பட்டமை இதற்குப் பிரதான காரணமாக அமைந்தது. இதேவேளை, பெற்றோலிய இறக்குமதிகள் 43 சதவீதத்தினாலும் டீசல்/எரிவாயு எண்ணெய் இறக்குமதி 30 சதவீதத்தினாலும் அதிகரித்ததன் காரணமாக, 2017 இன் முதல் மாதங்களின் போது மசகு எண்ணெய் உற்பத்தி மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் 2016 இன் இதே காலப்பகுதியில் பதிவாக்கிய ரூபா 17,221 மில்லியனோடு ஒப்பிடுகையில், ரூபா 27,995 மில்லியன் வரை 62.6 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளது.

**அட்டவணை 3.1 : வரவு செலவுத்திட்ட சுருக்கம்: சனவரி - ஏப்ரல்**

ரூபா. மில்

| விடயம் | 2016 | 2017 தற்காலிக |
|---|---|---|
| **வருமானம் மற்றும் மானியங்கள்** | **472,689** | **589,669** |
| வருமானம் | 472,689 | 589,019 |
| வரி | 441,211 | 554,294 |
| வரியல்லாதவை | 31,478 | 34,725 |
| மானியங்கள் | - | 650 |
| **செலவினம்** | **706,133** | **822,840** |
| நடைமுறை | 559,697 | 626,049 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 196,676 | 243,499 |
| ஏனையவை | 363,021 | 382,550 |
| அரசாங்க முதலீடுகள் | 151,978 | 201,012 |
| ஏனையவை | -5,542 | -4,221 |
| **வருமானப் பற்றாக்குறை (-)/மிகை (+)** | **-87,008** | **-37,030** |
| **மொத்த வருமானப் பற்றாக்குறை(-)/மிகை (+)** | **-233,444** | **-233,171** |
| **நிதியீட்டம்** | **233,444** | **233,171** |
| வெளிநாட்டு நிதியீட்டம் | -17,058 | 14,342 |
| கடன் பெறுகை | 42,400 | 75,000 |
| மீள் கொடுப்பனவு | -59,458 | -60,658 |
| உள்நாட்டு நிதியீட்டம் | 250,502 | 218,829 |
| கடன் பெறுகை | 410,070 | 613,456 |
| மீள் கொடுப்பனவு | -159,568 | -394,627 |

**மூலம்: அரசிறை கொள்கைத் திணைக்களம்**

இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக 2017 இன் முதல் நான்கு மாதங்களில் துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் ரூபா 32,353 மில்லியனாகக் காணப்பட்டதோடு, 2016 இதே காலப் பகுதியில் பதிவாக்கிய ரூபா 27,406 மில்லியனுடன் ஒப்பிடும்போது இது 18.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. மீளாய்வுக் காலப் பகுதியின் போது செஸ் வரி மூலம் கிடைக்கப் பெற்ற வருமாம் ரூபா 20,214 மில்லியன் வரை 8.2 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதோடு, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டின் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் ரூபா 24,091 மில்லியன் வரை 14.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் தெரிவு செய்யப்பட்ட நுகர்வுப் பண்டங்களுக்கான வரி வீதங்கள் திருத்தியமைக்கப்பட்டமை இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. இதேவேளை, 2017 இன் முதல் நான்கு மாதங்களின் போது இறக்குமதித் தீர்வைகள் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் ரூபா 47,392 மில்லியன் வரை 2.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. நேரடி வரிகளின் நியதிகளின் பிரகாரம், வங்கி மற்றும் நிதிச் சேவைகள், மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் மற்றும் தயாரிப்புத் துறைகளில் ஏற்பட்ட விரிவாக்கம் என்பவற்றினைப் பிரதிபலித்து 2017 இன் முதல் நான்கு மாதங்களின் போது நிறுவன மற்றும் நிறுவனமல்லாத வருமான வரி மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் ரூபா 34,643 மில்லியனாக 13.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. அரச மற்றும் தனியாாத் துறை போன்ற இரு துறைகளிலும் சம்பளங்கள் மற்றும் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் விளைவாக மீளாய்வுக் காலப்பகுதியில் உழைக்கும் போது செலுத்தும் வரியிலிருந்தான வருமானம் ரூபா 12,274 மில்லியன் வரை 24.9 சத வீதத்தினால் அதிகரித்துள்ளது. இதேவேளை, பொருளாதார சேவைக் கட்டணத்தினை 0.25 சத வீதத்திலிருந்து 0.5 சதவீதம் வரை அதிகரித்தமை, இலாபமீட்டுகின்ற வியாபாரங்களுக்கு வழங்கப்பட்டிருந்த வரி விலக்களிப்புக்கள் நீக்கப்பட்டமை மற்றும் குறிப்பீடு செய்யப்பட்ட சில பொருட்கள் இறக்குமதியின் போது பொ.சே.கட்டணம் விதிக்கப்பட்டமை காரணமாக மீளாய்வுக் காலப்பகுதியில் பொ.சே. கட்டணத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் ரூபா 19,1999 மில்லியனுக்கு 564.4 சத வீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. எனினும், 2017 இன் மீளாய்வுக் காலப்பகுதியின் போது வட்டியின் பேரிலான வரி வருமானம் ரூபா 18,359 மில்லியனுக்கு 14.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

இதேவேளை, 2017 இன் முதல் நான்கு மாதங்களில் வரியில்லாத வருமானம் 2016 இன் இதே காலப்பகுதியில் பதிவாக்கிய ரூபா 31,478 மில்லியனோடு ஒப்பிடுகையில், ரூபா 34,725 மில்லியன் வரை 10.3 சத வீதத்தினால் அதிகரித்துள்ளது. இவ்வதிகரிப்புக்கு வாடகை, வட்டி, விற்பனை மற்றும் கட்டணங்கள் போன்ற சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு நிதியினை உள்ளடக்கிய அனைத்து வரியில்லாத வருமான மூலங்களும் பங்களிப்புச் செய்துள்ளன. இவற்றிற்கு விதிவிலக்கான நிதி மூலமாக இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்கள் என்பன மீளாய்வுக் காலப்பகுதியில் காணப்பட்டதோடு அவை 44.1 சத வீதத்தினால் வீழ்ச்சியடைந்தும் காணப்பட்டன.

2017 இன் முதல் நான்கு மாதங்களின் போது அரச செலவினம் 2016 இன் இதே காலப்பகுதியில் பதிவாக்கிய ரூபா 706,133 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 822,840 மில்லியனுக்கு 16.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. மொத்தச் செலவினத்தில் 78.1 சதவீதமான மீண்டெழும் செலவினம் ரூபா 629,049 மில்லியன் வரை 11.9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதோடு, மீளாய்வுக் காலப்பகுதியில் அரச முதலீட்டுச் செலவினம் ரூபா 201,012 மில்லியன் வரை 32.3 சதவீதத்தினாலும் அதிகரித்துக் காணப்பட்டது. 2017 இன் ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான காலப்பகுதியில் அரசின் வரவுசெலவு திட்டப் பற்றாக்குறையானது 2016 இன் இதே காலப்பகுதியில் பதிவாக்கிய ரூபா 233,444 மில்லியனோடு ஒப்பிடுகையில் ரூபா 233,171 மில்லியன் வரை 0.1 சதவீதத்தினால் அண்ணளவாகக் குறைவடைந்துள்ளது.

அரச முதலீடுகளுக்கு முன்னுரிமை வழங்கி செலவினத்தினை ஒழுங்குபடுத்துவதன் மூலம் அரச செலவினங்களைக் குறைப்பதற்காக பல்வேறுபட்ட நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துள்ளது. பூச்சிய அடிப்படையிலான வரவுசெலவுத்திட்ட முறைமையினை செயற்படுத்துதல் மற்றும் செலவின முகாமை என்பன வினைத்திறனற்ற செலவினத்தினைக் குறைப்பதற்கு வழி வகுக்கும். அத்துடன், காலாண்டு அடிப்படையிலான வருமானம் மற்றும் செலவின அர்ப்பணிப்புக்கள் அரச நிதியினை வினைத்திறன் மிக்க வகையில் முகாமை செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கும். இதேவேளை, பிரதான அரசுடைமைத் தொழில் முயற்சிகளின் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் என்பவற்றினை அதகரிப்பதற்காக அத்தகைய நிறவனங்களைக் கட்டமைப்பு ரீதியாக சீர்செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

**அட்டவணை 3.2 : மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம் மற்றும் செலவினம்:**

ரூபா. பில்லியன்

| விடயம் | மதிப்பிடப்பட்ட | உண்மையான | வேறுபாடு |
|---|---|---|---|
| மொத்த வருமானம் | **654.1** | **589.0** | **(65.1)** |
| வரி வருமானம் | 580.6 | 554.3 | **(26.3)** |
| வரியல்லாத வருமானம் | 73.5 | 34.7 | **(38.8)** |
| | | | |
| மொத்த செலவினம் | **820.0** | **822.8** | **2.8** |
| நடைமுறைச் செலவினம் | 600.0 | 626.0 | **26.0** |
| மூலதனச் செலவினம் | 220.0 | 196.8 | **(23.2)** |

**மூலம்: தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் மற்றும் அரசிறைக் கொள்கைத் திணைக்களம்**

### 3.2 அரசாங்க வருமானம்

2017 இன் முதல் நான்கு மாதங்களின் போது வரி மற்றும் வரியல்லாத வருமானங்களில் ஏற்பட்ட அதிகரிப்பிலிருந்து பயனடைந்து 2016 இதே காலப்பகுதியில் பதிவாக்கிய ரூபா 472,689 மில்லியனிலிருந்து ரூபா 589,017 மில்லியனுக்கு அரசாங்க மொத்த வருமானமானது பெயரளவு நியதிகளில், அதிகரித்துள்ளது. வருமான வரி, உள்நாட்டு நுகர்வினை அடிப்படையாகக் கொண்ட வரிகள் மற்றும் இறக்குமதியினை அடிப்படையாகக் கொண்ட வரிகள் என்பனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக 2017 இன் முதல் நான்கு மாதங்களின் போது 2016 இன் இதே காலப்பகுதியில் பதிவாக்கிய ரூபா 441,211 மில்லியனிலிருந்து ரூபா 554,294 மில்லியனுக்கு 25.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

உள்நாட்டு நுகர்வினை அடிப்படையாகக் கொண்ட வரி வருமானம் 2016 இன் இதே காலப்பகுதியில் பதிவாக்கிய ரூபா 133,862 ரூபா மில்லியனிலிருந்து ரூபா 177,153 மில்லியன் வரை 32.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதோடு, இக்காலப் பகுதியில் இறக்குமதியினை அடிப்படையாகக் கொண்ட வரி வருமானம் 2016 இன் இதே காலப்பகுதியில் ரூபா 226,892 மில்லியனிலிருந்து ரூபா 277,927 மில்லியன் வரை 22.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இவ்வதிகரிப்பிற்கு பெ.சே.வரி (90.9 சதவீதம்) வருமான வரி (30.29 சதவீதம்) பெற்றோலிய உற்பத்திகள் மீதான உற்பத்தி வரி (62.6 சதவீதம்) துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (18.1 சதவீதம்) மற்றும் தேசக் கட்டுமான வரி (36 சதவீதம்) போன்ற வரிகளிலிருந்து கிடைக்கப்பெற்ற அதிகரித்த வரி வருமானங்கள் பிரதான பங்களிப்புச் செய்துள்ளன. குறிப்பாக, பொருளாதார சேவைக் கட்டண விதம் 0.25 சதவீதத்திலிருந்து 0.5 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டமை, ஆண்டொன்றுக்கு ரூபா 120 மில்லியன் என்ற உயர் முதல் நிலை நீக்கப்பட்டமை மற்றும் இலாபமீட்டுகின்ற வியாபாரங்கள் மீது பொருளாதார சேவைக் கட்டணம் பொறுப்புடமையாக்கப்பட்டமை என்பன காரணமாக பொருளாதார சேவைக் கட்டண வருமானம் 2017 இன் முதல் நான்கு மாதங்களின் போது ரூபா 19,199 மில்லியன் வரை 564.4 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. எனினும், 2017 இன் முதல் நான்கு மாதங்களில் மதுசாரம், புகையிலை மற்றும் சிகரெட் என்பவற்றிலிருந்தான உற்பத்தி வரி, தீர்வை வரி, தொலைத் தொடர்பாடல் அறவீடு மற்றும் பிடி வரி வருமானங்கள் 2016 இன் இதே காலப் பகுதியோடு ஒப்பிடுகையில் குறைவடைந்துள்ளன.

இதேவேளை, விற்பனைகள் மற்றும் அறவீடுகள், சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு மற்றும் வாடகை வருமானம் என்பன அதிகரித்ததன் காரணமாக வரியல்லாத வருமானமும் 2017 இன் முதல் நான்கு மாதங்களின் போது ரூபா 34,725 மில்லியன் வரை 10.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. எனினும், அரசுடைமை தொழில் முயற்சிகளிலிருந்தான இலாப மற்றும் பங்கிலாப வருமானங்கள் என்பன இக்காலப் பகுதியில் குறைவடைந்துள்ளன.

**அட்டவணை 3.3 : மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வரி வருமானம்: சனவரி - ஏப்ரல் 2017**

ரூபா. பில்லியன்

| விடயம் | மதிப்பிடப்பட்ட | உண்மையான |
|---|---|---|
| **உள்நாட்டு இறைவரித் திணைக்களம்** | | |
| வருமானம் மற்றும் இலாபங்கள் மீதான வரி | 102.7 | 84.5 |
| பெறுமதி சேர் வரி - உள்நாட்டு | 75.0 | 96.8 |
| தேசக் கட்டுமான வரி - உள்நாட்டு | 13.0 | 16.6 |
| **உப மொத்தம்** | **190.7** | **197.9** |
| **சுங்கத் திணைக்களம்** | | |
| இறக்குமதித் தீர்வைகள் | 55.0 | 47.4 |
| பெறுமதி சேர் வரி - இறக்குமதிகள் | 50.0 | 55.8 |
| தேசக் கட்டுமான வரி - இறக்குமதிகள் | 7.0 | 6.1 |
| துறைமுக, விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு | 35.0 | 32.4 |
| இறக்குமதி /ஏற்றுமதி செஸ் வரி | 20.0 | 20.2 |
| விசேட நுகர்வுப் பொருள் அறவீடு மற்றும் ஏனையவை | 20.0 | 24.1 |
| மதுவரி விசேட ஏற்பாடுகள் | 121.8 | 117.4 |
| சிகரட் மீதான மதுவரி | 32.0 | 23.8 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 18.0 | 28.0 |
| மோட்டார் வாகனங்கள் மற்றும் ஏனையவை | 71.8 | 65.6 |
| **உப மொத்தம்** | **308.8** | **303.4** |
| **மதுவரித் திணைக்களம்** | | |
| மதுபானம் | 55.0 | 38.3 |
| **உப மொத்தம்** | **55.0** | **38.3** |
| **ஏனையவை** | | |
| தொலைத்தொடர்பு அறவீடு | 15.0 | 11.6 |
| அனுமதிப்பத்திர வரி மற்றும் ஏனையவை | 7.0 | 3.1 |
| **உப மொத்தம** | **22.0** | **14.7** |
| **மொத்த வரி வருமானம்** | **576.5** | **554.3** |

**மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்**

**அட்டவணை 3.4 : அரசாங்க வருமானச் செயலாற்றுகைச் சுருக்கம் (சனவரி - ஏப்ரல்)**

ரூபா.மில்லியன்

| விடயம் | 2016 | 2017 தற்காலிக. | வளர்ச்சி % |
|---|---|---|---|
| **வரி வருமானம்** | **441,211** | **554,294** | **25.6** |
| வருமான வரி | 64,857 | 84,475 | 30.2 |
| உள்நாட்டு நுகர்வின் அடிப்படை வரி | 133,862 | 177,153 | 32.3 |
| பெறுமதி சேர் வரி | 51,342 | 96,811 | 88.6 |
| மதுவரி | 71,804 | 63,698 | -11.3 |
| தேசக் கட்டுமான வரி | 10,716 | 16,644 | 55.3 |
| இறக்குமதி அடிப்படையிலான வரி | 226,892 | 277,927 | 22.5 |
| சுங்கத் தீர்வை | 48,441 | 47,392 | -2.2 |
| பெறுமதி சேர் வரி | 28,574 | 55,759 | 95.1 |

ரூபா.மில்லியன்

| விடயம் | 2016 | 2017 தற்காலிக. | வளர்ச்சி % |
|---|---|---|---|
| தேசக் கட்டுமான வரி | 6,024 | 6,119 | 1.6 |
| து.வி.நி அறவீடு | 27,406 | 32,353 | 18.1 |
| வி.நு.பொ.அறவீடு | 21,119 | 24,091 | 14.1 |
| மதுவரி | 76,654 | 91,999 | 20.0 |
| செஸ் | 18,674 | 20,214 | 8.2 |
| அனுமதிப்பத்திர வரிகள் ஏனையவை | 15,601 | 14,739 | -5.5 |
| **வரியல்லா வருமானம்** | **31,478** | **34,725** | **10.3** |
| **மொத்த வருமானம்** | **472,689** | **589,019** | **24.6** |

**மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்**

வரைபு 3.1 : அரசாங்க வருமானத்தின் செயலாற்றுகை ( சனவரி - ஏப்ரல், 2017)




**வருமான வரி**

வருமான வரியிலிருந்தான மொத்த வருமானம் கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற ரூபா 64,857 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 84,475 மில்லியன் வரை 30.2 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. நிறுவனம் மற்றும் நிறுவனமல்லாத வருமான வரி மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் 2016 இல் இதே காலப்பகுதியில் கிடைக்கப் பெற்ற ரூபா 30,582 மில்லியனோடு ஒப்பிடுகையில் ரூபா 34,643 மில்லியன் வரை 13.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இவ்வளர்ச்சிக்கு வங்கிகள் மற்றும் நிதிச் சேவைகள், மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் மற்றும் தயாரிப்புத் துறைகள் என்பன பங்களிப்புச் செய்துள்ளன. உழைக்கும் போது செலுத்தும் வரி மூலம் திரட்டப்பட்ட வருமானத்தினை 2016 இன் மீளாய்வுக் காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற ரூபா 9,828 மில்லியனோடு ஒப்பிடுகையில் ரூபா 12,274 மில்லியன் வரை 24.9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இவ்வளர்ச்சிக்கு அரச மற்றும் தனியார் துறை போன்ற இரு துறைகளிலும் சம்பளங்கள் மற்றும் வேதனங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு, உயர் தொழில் சேவைகளை வழங்கும் வங்கித்துறை மற்றும் சுற்றுலாத்துறை போன்ற துறைகளில் அதிகரித்த வருமானம் கிடைக்கின்ற தொழில் வாய்ப்புக்கள் அதிகரித்தமை இவ்வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியுள்ளன.

**அட்டவணை 3.5 : வருமான வரி மூலமான வருமானம் செயலாற்றுகை (சனவரி - ஏப்ரல்)**

| | | | ரூபா.மில்லியன் |
|---|---|---|---|
| **வரி அடிப்படை** | **2016** | **2017 தற்காலிக.** | **% மாற்றம்** |
| நிறுவன மற்றும் நிறுவனமல்லா | 30,582 | 34,643 | 13.3 |
| உ.பொ.செ வரி | 9,828 | 12,274 | 24.9 |
| வட்டி வருமான மீதான வரி | 21,557 | 18,359 | -14.8 |
| பொருளாதார சேவைகள் கட்டணம் | 2,890 | 19,199 | 564.3 |
| மொத்தம் | **64,857** | **84,475** | **30.2** |

மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

பொருளாதார சேவைக் கட்டணத்திலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானத்தினை 2016 இன் இதே காலப்பகுதியோடு ஒப்பிடுகையில் 2017 இல் ரூபா 19,199 மில்லியன் வரை 564.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளதோடு, இதற்காக இலாபமீட்டுகின்ற வியாபாரங்களுக்கான பொருளாதாரம் - சேவைக் கட்டடண விலக்களிப்பு நீக்கப்பட்டமை, பொருளாதார சேவைக் கட்டண வரி வீதத்தினை 0.25 சதவீதத்திலிருந்து 0.5 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டமை என்பன காரணமாக அமைந்துள்ளன. எனினும், வட்டி வருமானம் மீதான பிடிவரி மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் ரூபா. 18,359 மில்லியன் வரை 14.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

### பெறுமதிசேரி வரி

2017 இன் முதல் நான்கு மாதங்களில் பெறுமதிசேர் வரி வருமானமானது 2016 இன் இதே காலப்பகுதியில் அடையப் பெற்ற ரூபா. 79,916 மில்லியனோடு ஒப்பிடும் போது ரூபா. 152,570 மில்லியன் வரை 90.9 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியடைந்துள்ளது. பெ.சே.வரி வீதம் 11 சதவீதத்திலிருந்து 15 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டமை, பெ.சே வரியினை பதிவு செய்வதற்கான முதல் நிலையினை குறைப்பதன் மூலம் வரி அடிப்படை விரிவாக்கப்பட்டமை, வரி விலக்களிப்புக்கள் பல நீக்கப்பட்டமை மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS) செயற்படுத்தப்பட்டமை என்பன காரணமாக பெ.சே.வரி பொறுப்புடமை அதிகரித்தமை இதற்கு பிரதான பங்காற்றின.

உள்நாட்டு செயற்பாடுகள் மீதான பெ.சே. வரியிலிருந்து திரட்டப்பட்ட வருமானமானது 2016 இல் பதிவு செய்யப்பட்ட ரூபா. 51,342 மில்லியனோடு ஒப்பிடுகையில் 2017 இன் முதல் நான்கு மாதங்களின் போது ரூபா. 96,811 மில்லியன் வரை 88.6 சதவீததத்தினால் அதிகரித்துள்ளதோடு, இறக்குமதியின் பேரிலான பெ.சே.வரி வருமானமும் இதே காலப்பகுதியில் 2017 இன் சனவரி முதல் ஏப்ரல் வரையான காலப்பகுதியில் ரூபா. 55,759 மில்லியன் வரை 95.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

**அட்டவணை 3.6 : பெறுமதிசேர் வரி வருமானத்தின் செயலாற்றுகை (சனவரி - ஏப்ரல்)**

ரூபா. மில்

| வரி அடிப்படை | 2016 | 2017 தற்காலிக. | வளர்ச்சி (%) |
|---|---|---|---|
| உள்நாட்டு | 51,342 | 96,811 | 88.6 |
| இறக்குமதிகள் | 28,574 | 55,759 | 95.1 |
| மொத்த வருமானம் | **79,916** | **152,570** | 90.9 |
| மீளளிப்புகள் | 123 | 199 | 61.9 |
| தேறிய வருமானம் | **79,793** | **152,371** | 91.0 |
| மொத்த வருமான மீளளிப்பு சதவீதம் % | 0.2 | 0.1 | |

மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

## உற்பத்தி வரி

உற்பத்தி வரி மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் 2016 இன் இதே காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட ரூபா. 148,458 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2017 இன் முதல் நான்கு மாதங்களின் போது ரூபா. 155,697 மில்லியன் வரை 4.9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. மோட்டார் வாகனங்கள் மற்றும் மசகு எண்ணெய் உற்பத்தி மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் அதிகரிப்பே இதற்குப் பிரதான காரணமாக அமைந்துள்ளது. 2017 இன் முதல் நான்கு மாதங்களில் மசகு எண்ணெய் உற்பத்தி மூலம் கிடைக்கப்பெற்ற வருமானத்தினை 2016 இன் இதே காலப்பகுதியில் பதிவாக்கிய ரூபா. 17,221 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா. 27,995 வரை 62.6 சதவீத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. பொருளாதாரத்தில் அத்தகைய பொருட்களுக்கான உள்நாட்டுக் கேள்வி அதிகரித்ததன் காரணமாக பெற்றோல் இறக்குமதி 43 சதவீதத்தினாலும் டீசல் / எரிவாயு எண்ணெய் 30 சதவீதத்தினாலும் அதிகரித்து இவ்வளர்ச்சிக்கு ஒத்துழைத்துள்ளன.

**அட்டவணை 3.7 : உற்பத்தி வரி செயலாற்றுகை (சனவரி - ஏப்ரல்)**

ரூபா.மில்

| வரி அடிப்படை | 2016 | 2017 தற்காலிக. | வளர்ச்சி (%) |
|---|---|---|---|
| மதுபானம் | 42,193 | 38,262 | -9.3 |
| சிகரட் மற்றும் புகையிலை | 28,764 | 23,840 | -17.1 |
| மோட்டார் வாகனங்கள் | 59,433 | 64,004 | 7.7 |
| பெற்றோலியம் | 17,221 | 27,995 | 62.6 |
| ஏனையவை | 847 | 1596 | 88.4 |
| **மொத்தம்** | **148,458** | **155,697** | **4.9** |

மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

2017 இன் முதல் நான்கு மாதங்களின் போது மோட்டார் வாகன இறக்குமதி மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் 2016 இன் இதே காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட ரூபா. 59,433 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா. 64,004 மில்லியனுக்கும் 7.7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. அதிகம் புகையினை வெளியிடுகின்ற வாகனங்களை நாட்டினுல் இறக்குமதி செய்வதினை கட்டுப்படுத்துவதற்கான அரசாங்கத்தி கொள்கைசார் நடவடிக்கையுடன் இணைந்த வகையில் மீளாய்வுக் காலப்பகுதியில் மோட்டார் வாகனங்களுக்கான அலகுப் பெறுமதியின் பேரிலான உற்பத்தி வரி அதிகரித்தமை என்பன இதற்குப் பிரதான காரணமாகும். 2017 இன் மீளாய்வுக் காலப்பகுதியில் வாகன இறக்குமதியின் எண்ணிக்கையானது 2016 இன் மீளாயடவுக் காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட 133,511 உடன் ஒப்பிடுகையில் 155,942 வரையில் 16.8 சாவீதத்தினால் அதிகரித்துள்ளது. மோட்டார் சைக்கிள்களின் இறக்குமதி 40.6 சதவீதத்தினாலும் அதிகரித்தமை இதற்கு பிரதான காரணமாக அமைந்ததோடு, உற்பத்தி வரி வீதம் அதிகரிக்கப்பட்டதன் காரணமாக மோட்டார் வாகன இறக்குமதியும் 13.8 சதவீதத்தினாலும் முச்சக்கர வண்டிகளின் இறக்குமதி 69.2 சதவீத்தினாலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

எவ்வாறாயினும், 2017 சனவரி முதல் ஏப்ரல் வரையான காலப்பகுதியில் மதுபானத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் 2016 இன் இதே காலப்பகுதியில் பதிவாக்கிய ரூபா 42,193 மில்லியனோடு ஒப்பிடுகையில் ரூபா 38,262 மில்லியன் வரை 9.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கு வன் மதுபான உற்பத்தி 7.3 சதவீதத்தினாலும் தானிய வகை மதுபான உற்பத்தி 38.9 சதவீதத்தினால் குறைவடைந்தமையாகும். அவ்வாறே, 2017 இன் முதல் நான்கு மாதங்களின் போது சிகரெட் மற்றும் புகையிலை உற்பத்தி மூலம் கிடைக்கப் பெற்ற வருமானமும் 2016 இன் இதே காலப்பகுதியில் பதிவாக்கிய ரூபா 28,764 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 23,840 மில்லியன் வரை 17.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. சிகரெட் மீதான வரி அதிகரிக்கப்பட்டதன் காரணமாக சிகரெட் உற்பத்தியும் 31 சதவீதத்தினால் வீழ்ச்சியடைமையே இதற்கு பிரதான காரணமாகும்.

வரைபு: 3.2 உற்பத்தி வரியின் செயலாற்றுகை ( சனவரி - ஏப்ரல் 2016 மற்றும் 2017)




**அட்டவணை 3.8 : மோட்டார் வாகன இறக்குமதிகள் மற்றும் புதிய வாகனப் பதிவுகள் (சனவரி - ஏப்ரல்)**

அலகு : எண்ணிக்கை

| விடயம் | இறக்குமதி | | | | புதிய பதிவுகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2016 | 2017 | மாற்றம் | % மாற்றம் | 2016 | 2017 | மாற்றம் | % மாற்றம் |
| மோட்டார் கார்கள் | 15,436 | 13,313 | (2,123) | (13.8) | 15,300 | 12,760 | (2,540) | (16.6) |
| முச்சக்கர வண்டிகள் | 13,345 | 4,112 | (9,233) | (69.2) | 14,555 | 7,546 | (7,009) | (48.2) |
| மோட்டார் சைக்கிள்கள் | 88,198 | 123,999 | 35,801 | 40.6 | 99,006 | 113,225 | 14,219 | 14.4 |
| பயணிகள் வாகனங்கள் | 923 | 955 | 32 | 3.5 | 871 | 999 | 128 | 14.7 |
| பொருட் போக்குவரத்து வாகனங்கள் (அ) | 9,853 | 9,605 | (248) | (2.5) | 9,346 | 9,507 | 161 | 1.7 |
| தரை வாகனங்கள் (ஆ) | 5,756 | 3,958 | (1,798) | (31.2) | 4,103 | 4,398 | 295 | 7.2 |
| மொத்தம் | **133,511** | **155,942** | **22,431** | **16.8** | **143,181** | **148,435** | **5,254** | **3.7** |

மூலம்: சுங்கத் திணைக்களம் மற்றும் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்
(அ) லொறிகள் மற்றும் ஏனைய பொருட் போக்குவரத்து வாகனங்கள்
(ஆ) ட்ரக்டெர்கள், கை ட்ரக்டெர்கள் மற்றும் ஏனைய நில வாகனங்கள்

## இறக்குமதித் தீர்வை மற்றும் விசேட வியாபாரப் பண்ட அறவீடு

2016 இன் முதல் நான்கு மாதங்களின் போது ரூபா 48,440 மில்லியன்களாகப் பதிவு செய்யப்பட்ட இறக்குமதித் தீர்வை மூலம் திரட்டப்பட்ட வருமானம் 2017 இன் இதே காலப்பகுதியோடு ஒப்பிடுகையில் ரூபா 47,392 மில்லியனுக்கு 2.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

2016 இன் முதல் நான்கு மாதங்களின்போது ரூபா 21,119 மில்லியன்களாகப் காணப்பட்ட விசேட வியாபாரப் பண்ட வரி வருமானம் 2017 இன் இதே காலப்பகுதியோடு ஒப்பிடுகையில் ரூபா 24,091 மில்லியன் வரை 14.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. விசேட வியாபாரப் பண்ட

அறவீட்டுப் பட்டியலின் கீழ் வருகின்ற பண்டங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டமை, உருளைக் கிழங்கு பெரிய வெங்காயம், பாசிப்பயறு மற்றும் சீனி போன்ற பண்டங்களின் உள்நாட்டு உற்பத்தியினை ஊக்குவிக்கும் வகையில் விசேட வியாபாரப் பண்ட அறவீடு அதிகரிக்கப்பட்டமை என்பன இச்செயலாற்றுகைக்கு பிரதான காரணமாக அமைந்தன.

### தேச கட்டுமான வரி

2016 இன் முதல் நான்கு மாதங்களின் போது ரூபா 16,740 மில்லியனாகப் பதிவு செய்யப்பட்ட தேசக் கட்டுமான வரி வருமானம் 2017 இன் இதே காலப்பகுதியில் ரூபா 22,763 மில்லியன் வரை 36.0 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. தேசக் கட்டுமான வரியினை அறவீடு செய்வதற்கான முதல் நிலையினை ஆண்டொன்றுக்கு ரூபா 15 மில்லியனிலிருந்து ரூபா 12 மில்லியன் வரை குறைப்பதற்கு எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானம் காரணமாக 2017 இன் முதல் நான்கு மாதங்களில் அதிகரித்த உள்நாட்டுச் செயற்பாடுகள் காரணமாக திரட்டப்பட்ட தேசக் கட்டுமான வரி வருமானம் ரூபா. 16,644 மில்லியன் வரை 55.3 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது.

இதேவேளை, 2016 இன் முதல் காலாண்டில் ரூபா 6,024 மில்லியனாகக் காணப்பட்ட இறக்குமதியின் பேரிலான தேசக் கட்டுமான வரி வருமானம் 2017 இன் முதல் நான்கு மாதங்களின் போது ரூபா 6,119 மில்லியன் வரை 1.6 சதவீதத்தினால் அண்ணளவாக அதிகரித்துள்ளது. இதன் விளைவாக, 2016 இன் முதல் நான்கு மாதங்களில் மாகாண சபைகளுக்கான மொத்த மாற்றல்கள் ரூபா. 12,537 மில்லியனாகக் காணப்பட்டதோடு இதனை மீளாய்வுக் காலப்பகுதியோடு ஒப்பிடுகையில் இது ரூபா 15,546 மில்லியனாகக் காணப்பட்டது.

**அட்டவணை 3.9 : மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்ட வருமானங்கள் (2017 சனவரி - ஏப்ரல்)**

ரூபா.மில்

| மாதம் | தே.க.வ | | மோட்டார் வாகனப் பதிவுக் கட்டணங்கள் | முத்திரைத் தீர்வை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | உள்நாட்டு இறைவரி திணைக்களம் | சுங்கத் திணைக்களம் | | | |
| சனவரி | 2,210 | 783 | 186 | 1,538 | 4,717 |
| பெப்ரவரி | 1,556 | 716 | 138 | 197 | 2,607 |
| மார்ச் | 2,197 | 934 | 179 | 209 | 3,519 |
| ஏப்ரல் | 2,450 | 682 | 138 | 1,433 | 4,703 |
| **மொத்தம்** | **8,413** | **3,115** | **641** | **3,377** | **15,546** |

**மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்**

### ஏனைய வரிகள்

2016 இன் இதே காலப்பகுதியோடு ஒப்பிடுகையில் 2017 இன் முதல் நான்கு மாதங்களின் போது துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு மூலம் கிடைக்கப்பெற்ற வரி வருமானம் ரூபா 32,353 மில்லியன் வரை 18.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதே காலப்பகுதியில், 18,674 மில்லியனாகக் காணப்பட்ட ஏற்றமதி மற்றும் இறக்குமதியின் பேரில் திரட்டப்பட்ட மொத்த செஸ்வரி விதிப்பனவு செய்தல் காரணமாக இவ்வருமான மூலத்திலிருந்து கிடைக்கப்பெற்ற வரி வருமானம் தொடர்ந்து கிடைக்கப் பெற்றதால் வருமான அதிகரிப்பிற்கு உதவியது.

எவ்வாறாயினும், மீளாய்வுக் காலத்தில் தொலைத் தொடர்புகள் அறவீடு ரூபா 11,616 மில்லியனுக்கு 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

**கட்டம் 3.1 பிரதான அரசிறை நடவடிக்கைகள் சனவரி 2017 முதல் மே 2017**[1]

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| | **மதுவரி (கட்டளைச்சட்டத்) தீர்வை** |
| 01.01.2017 | மதுவரி அறிவித்தல் இல. 991 (2016.12. 09 ஆந் திகதய 1996/52 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) எதனோல் மதுசாரத்தினை களஞ்சியப்படுத்தல் அல்லது நகர்த்தலின் போது ஏற்படும் சிந்துதல் அல்லது ஆவியாதல் என்பவற்றால் ஏற்படுகின்ற இழப்பிற்கான கொடுப்பனவு குறைப்பதற்காக |
| 01.01.2017 | மதுவரி அறிவித்தல் இல. 992 (2016.12.15 ஆந் திகதய 1997/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) வருடாந்த மதுவரி உரிமக் கட்டணங்களைத் திருத்தியமைப்பதற்காக |
| 01.01.2017 | மதுவரி அறிவித்தல் இல. 993 (2016.12..20 ஆந் திகதய 1998/6 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) போத்தில் அடைக்கப்பட்ட கள்ளு மீதான உற்பத்தித் தீர்வையானது லீற்றர் ஒன்றுக்கு ரூபா.30 இலிருந்து லீற்றர் ஒன்றுக்கு ரூபா.50 வரை அதிகரிப்பதற்காக |
| 01.01.2017 | மதுவரி அறிவித்தல் இல. 994 (2016.12.20 ஆந் திகதய 1998/07 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) வெளிநாட்டு மதுபான உரிமப் பத்திரமொன்றுடன் சேர்த்து வழங்கப்படுகின்ற சாராய உரிமப் பத்திரங்களுக்காக ரூபா.100,000 வும் போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளினை விற்பனை செய்வதற்காக ரூபா.50,000 உம் உரிமக் கட்டணமாக அமுல்படுத்துவதற்காக |
| 13.03.2017 | மதுவரி அறிவித்தல் இல. 995 (2017.03.10 ஆந் திகதய 2009/45 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) வெளிநாட்டு மதுபான இறக்குமதிக்கான உரிமம் வழங்கும் செயன்முறையினை இழகுபடுத்துவதற்காக |
| | **முத்திரைத் தீர்வை** |
| 21.02.2017 | 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் ( 2017.02.21 ஆந் திகதிய 2007/24 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) காப்புறுதிப் பூட்கை, நிதிக் குத்தகை உடன்படிக்கை மற்றும் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை மீது முத்திரைத் தீர்வையினைச் செலுத்துவதற்கு பொறுப்புடமையாக்கக் கூடிய வாகன வகைகளை குறிப்பீடு செய்வதற்காக |
| | **செஸ் வரி** |
| 22.03.2017 | 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் ( 2017.03.21 ஆந் திகதிய 2011/9 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - எவ்வித வரியடையாளமின்றிய பெயர் நாமமின்றிய புத்தம் புதிய டயர் காப்புக்கள், வெப்ப உருளைக் குழாய், வெப்ப உருளைக் கட்டி அல்லது பிற வடிவங்களுடைய குழாய் போன்ற வடிவங்களில் மேலதிக வேலைகள் செய்யபடாத கம்பி பட்டைகளும் தண்டுகளும், ஏகபரிமாண குறை அடர்த்தி கொண்ட பொலித்தீன் என்பனவற்றின் செஸ் வரியினை நீக்குவதற்காக |
| | **பொருளாதார சேவைக் கட்டணம்** |
| 01.04.2017 | 2017 ஆம்ஆண்டின் 7 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணங்கள்(திருத்தச்) சட்டம் - பொருளாதார சேவைக் கட்டணத்தின் பொறுப்புடைமைக்கான முதநிலையினை காலாண்டொன்றுக்கு ரூபா.மில்.50 இலிருந்து ரூபா. மில்.12.5 வரை குறைப்பதற்காகவும் மற்றும் வாகன இறக்குமதியின் போது பொ.சே.கட்டணத்தினை விதிப்பதற்காகவும் |
| | **அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்** |
| 07.01.2017 | 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டம் ( 2017.01.06 ஆந் திகதிய 2000/86 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் ( அரிசி வகைகளுக்காக புதிய இ.மு தேசிய உப பிரிவுகளை அறிமுகப்படுத்துவதற்காக |

[1] சனவரி – 2017 முதல் மே 2017 வரையான காலப் பகுதியின் போது அமுல்படுத்தப்பட்ட பிரதான அரசிறைச் செயற்பாடுகளை இது உள்ளடக்குகிறது.

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 01.02.2017 | சுங்கக் கட்டளைச் சட்டம் - டீசலுக்கு (லீற்றர் ஒன்றுக்கு ரூபா 15/- என்ற ஏற்புடையதான சுங்க தீர்வையிலிருந்து) லீற்றர் ஒன்றுக்கு ரூபா 3/- பெற்றோலுக்கு (லீற்றர் ஒன்றுக்கு ரூபா 35/- என்ற ஏற்புடையதான சுங்க தீர்வையிலிருந்து) லீற்றர் ஒன்றுக்கு ரூபா 10/- சுங்கத் தீர்வையினை விடுவிப்புச் செய்வதற்காக |
| 17.02.2017 | 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டம் ( 2017.02.16 ஆந் திகதிய 2006/42 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) உள்நாட்டுக் கைத்தொழில்கள் மற்றும் வர்த்தகங்களுக்கு வசதியளிப்பதற்காக அடையாளம் காணப்பட்ட தீர்வைகள் மீது சுங்க இறக்குமதித் தீர்வையினைத் திருத்துவதற்காக |
| 15.03.2017 | சுங்கக் கட்டளைச் சட்டம் (2017.03.15 ஆந் திகதிய 2010/20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) ஆடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள தொழில் முயற்சிகளினால் சலுகை அடிப்படையில் இறக்குமதிசெய்யப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பனவற்றை அகற்றும் போதான சுங்கப் பெறுமதியினைத் தீர்மானிப்பதற்கான முறைமையினை விதித்துரைப்பதற்காக |
| | **விசேட வியாபாரப் பண்ட அறவீடு** |
| 07.01.2017 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீடு (2017.01.06 ஆந் திகதிய 2000/85 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - இறக்குமதி செய்யப்பட்ட பாதியாக அரைககப்பட்ட அல்லது முழுமையாக அரைககப்பட்ட அரசி, அல்லது பூரணமாக அரைக்கப்பட்ட பச்சை அரிசி, நாட்டரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) மற்றும் சம்பா அரிசி (சிவப்பு அல்லது வெள்ளை கி.கி ஒன்றுக்கு ரூபா. 15/- என்ற விலையில் வி.வி.ப. அறவீட்டினை விதிப்பதற்காக |
| 19.01.2017 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீடு (2017.01.18 ஆந் திகதிய 2002/29 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - மாசிச் கருவாடு, உலர்த்திய நெத்தலி உழுந்து, மிளகாய், மஞ்சல் உள்ளடங்கலாக 09 பண்டங்களின் வி.வி.ப.அ செல்லுபடியாகும் காலத்தினை நீடிப்புச் செய்வதற்காகவும் தாவர எண்ணெய்யின் வி.வி.ப.அறவீட்டினை கி.கி. க்கு ரூபா 20/- ஆல் குறைப்பதற்கும் |
| 28.01.2017 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீடு (2017.01.27 ஆந் திகதிய 2003/43 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) -<br><br>இறக்குமதி செய்யப்பட்ட பாதியாக அரைககப்பட்ட அல்லது முழுமையாக அரைககப்பட்ட அரசி, அல்லது பூரணமாக அரைக்கப்பட்ட பச்சை அரிசி, நாட்டரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) மற்றும் சம்பா அரிசி (சிவப்பு அல்லது வெள்ளை கி.கி ஒன்றுக்கு ரூபா. 10/- என்ற விலையில் வி.வி.ப. அறவீட்டினை 30 நாட்களுக்கு தள்ளுபடி செய்வதற்காக) |
| 17.02.2017 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீடு (2017.02.16 ஆந் திகதிய 2006/41 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - உருளைக் கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் என்பனவற்றிற்கான் வி.வி.ப.அ செல்லுபடியாகும் காலத்தினை ஆறு மாதங்களுக்கு நீடிப்புச் செய்வதற்காகவும் சிவப்பு மற்றும் மஞ்சல் பருப்பு வகைகளின் வி.வி.ப.அ அதிகரிப்பதற்கவும் |
| 24.02.2017 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீடு (2017.02.23 ஆந் திகதிய 2007/38 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - தாவர எண்ணெய்யின் வி.வி.ப.அறவீட்டினை கி.கி. க்கு ரூபா 20/- ஆல் ஆறு மாதங்களுக்கு குறைப்பதற்காக |

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 27.02.2017 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீடு (2017.02.26 ஆந் திகதிய 2007/44 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - இறக்குமதி செய்யப்பட்ட பாதியாக அரைககப்பட்ட அல்லது முழுமையாக அரைககப்பட்ட அரசி, அல்லது பூரணமாக அரைக்கப்பட்ட பச்சை அரிசி, நாட்டரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) மற்றும் சம்பா அரிசி (சிவப்பு அல்லது வெள்ளை கி.கி அறவீட்டினை மேலும் 30 நாட்களுக்கு தள்ளுபடி செய்வதனை நீடிப்புச் செய்வதற்காக) |
| 08.03.2017 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீடு (2017.03.07 ஆந் திகதிய 2009/05 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) – மகரெல், கடலை, கொண்டக் கடலை, குரக்கன்,வெள்ளை நிறச் சீனி தவிர்ந்த சீனி போன்ற 6 பண்டங்களின் வி.வி.ப.அறவீட்டினை ஆறு மதங்களுக்கு நீடிப்பதற்காக |
| 28.03.2017 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீடு (2017.03.28 ஆந் திகதிய 2012/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - பச்சை அரிசி, நாட்டரிசி மற்றும் சம்பா அரிசி போன்ற அரிசி வகைகளுக்கு வழங்கப்பட்ட கி.கி. ஒன்றுக்கு ரூபா. 10/- என்ற வி.வி.ப.அ. தள்ளுபடியினை வி.வி.ப.அ சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் கி.கி ஒன்றுக்கு ரூபா.5/- ஆக 2017 மார்ச் 28 முதல் 31 வரை நீடிப்புச் செய்வதற்காக |
| 01.04.2017 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீடு (2017.03.28 ஆந் திகதிய 2012/17 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) – அறுபது நாட்களுக்கு அரிசி மீதான வி.வி.ப.அ இனை கி.கி ஒன்றுக்கு ரூபா.15/- இலிருந்து கி.கி ஒன்றுக்கு ரூபா. 5/- இற்கு குறைப்பதற்காக மாதங்களுக்கு. |
| 02.04.2017 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீடு (2017.03.31 ஆந் திகதிய 2012/52 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - கருவாடு, யோகர்ட், வெண்ணெய், உள்ளி, தோடம்பழம், அப்பில், உப்பு, குரக்கன் மா உள்ளடங்கலாக 12 பண்டங்களின் வி.வி.ப.அறவீட்டினை ஆறு மாதங்களுக்கு நீடிப்பதற்காக |
| 08.05.2017 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீடு (2017.05.08 ஆந் திகதிய 2018/2 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - மீன், பாசிப்பயறு, மங்குஸ்தான், உலர்த்திய தோடம்பழம், கிவிப்பழம் உள்ளடங்கலாக 12 பண்டங்களின் வி.வி.ப.அறவீட்டினை ஆறு மாதங்களுக்கு நீடிப்பதற்காக |
| 21.05.2017 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீடு (2017.05.19 ஆந் திகதிய 2019/21 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) – உமி அகற்றிய அரிசி இறக்குமதியின் போது ரூபா 5/- இனை சலுகையாக வழங்குவதற்கும், சிறிய வெங்காயம், பேரீத்தம்பழம், உலர்திய திராட்சைப்பழம், நற்சீரகம், பெருஞ்சீரகம், உமி அகற்றிய அரிசி என்பனவற்றின் வி.வி.ப.அறவீட்டினை ஆறு மாதங்களுக்கு நீடிப்பதற்காகவும் |
| 31.05.2017 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீடு (2017.01.06 ஆந் திகதிய 2000/85 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - 2017 ஓகத்து 31 ஆந் திகதி வரை தெரிவு செய்யப்பட்ட அரிசி வகைகளின் வி.வி.ப.அறவீட்டினை கி.கி. ஒன்றுக்கு ரூபா 5/- என்ற விலையில் சலுகை காலத்தினை நீடிப்புச் செய்வதற்காக |

### 3.3 அரசாங்க செலவினம்

2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியினுள் ரூபா 822.8 பில்லியனாகக் காணப்பட்ட மொத்த அரசாங்கச் செலவினம் 2016 ஆம் ஆண்டில் அதே பகுதியுடன் ஒப்பிடும்போது நூற்றுக்கு 16 சதவீத அதிகரிப்பாகும். அதில் ரூபா 626 பில்லியன் முற்திட்டமிடப்பட்ட செலவாகக் காணப்பட்ட அதேவேளையில் மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல் ரூபா 196.8 பில்லியனாகக் காணப்பட்டது.

அரசாங்க ஊழியர்களினதும் ஓய்வூதியதாரர் களினதும் சம்பளம் மற்றும் வேதனங்கள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பொன்றை எடுத்துக்காட்டி மீண்டுவரும் செலவினம் நூ ற்றுக்கு 15.9 சதவீதத்தினால் அதிகரித்துள்ள அதேவேளையில் மீளாய்வுக் காலப்பகுதியில் அரசாங்க முதலீடுகள் நூற்றுக்கு 32.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

**அட்டவணை 3.10 : அரசாங்க செலவினத்தின் செயவாற்றுகை சனவரி - ஏப்ரல் 2017**

ரூபா.மில்

| விடயம் | 2016 | 2017 (தற்காலிக) |
|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | **559,697** | **626,049** |
| சம்பளம் | 188,604 | 197,518 |
| ஓய்வூதியம் | 56,008 | 59,186 |
| வட்டிக் கொடுப்பனவு | 196,676 | 243,499 |
| பிற | 118,409 | 125,846 |
| **மூலதன செலவினம்** | **146,436** | **196,791** |
| **மொத்தம்** | **706,133** | **822,840** |

**மூலம் : தேசிய வரவு செலவு திணைக்களம், அரச கணக்குகள் திணைக்களம் மற்றும் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்**

#### Salaries and Pension
#### சம்பளம் மற்றும் ஓய்வூதியச் சம்பளம்

2016 ஆம் ஆண்டின் இந்தக் காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது மாகாண சபைகள் உட்பட அரசாங்க ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலத்தினுள் ரூபா 197,518 மில்லியன்கள் வரை நூற்றுக்கு 5 சத வீதத்தினால் ஓரளவு வளர்ச்சியடைந்துள்ளது.

2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலத்திற்கான ஓய்வூதியச் சம்பளக் கொடுப்பனவுக்கான செலவினம் ரூபா 59,186 மில்லியனாகக் காணப்பட்ட அதேவேளை அது 2016 ஆம் ஆண்டின் அந்தக் காலப்பகுதியிலும் பார்க்க நூற்றுக்கு 6 சதவீத வளர்ச்சியாகும்.

#### Interest Cost வட்டிச் செலவு

2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியினுள் வட்டிக் கொடுப்பனவுச் செலவினம் ரூபா 243,499 மில்லியனாகக் காணப்பட்ட அதேவேளையில் அது 2016 ஆம் ஆண்டின் அந்தக் காலப்பகுதியினுள் செலவிடப்பட்ட ரூபா 195,068 மில்லியனுடன் ஒப்பிடும்போது நூற்றுக்கு 24 சதவீத அதிகரிப்பாகும். இந்த மொத்தச் செலவினத்தில் ரூபா 195,068 மில்லியன் உள்நாட்டுக் கடனுக்காகவும் எஞ்சிய ரூபா 48,431 மில்லியன் வெளிநாட்டுக் கடனுக்காகவுமான வட்டிக் கொடுப்பனவாகக் காணப்பட்டது.

**அட்டவணை : 3.11 அரசாங்க பிணையங்கள் மற்றும் நாணய வீதங்கள் மீதான விளைவு வீதங்களின் போக்கு 2016 - 2017 யூன்**

| காலம் | | திறைசேரி உண்டியல்கள் | | | திறைசேரி முறிகள் | | | | நாணய மாற்று வீதம் (ரூபா./ஐ.அ.டொ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | 2 வருடங்கள் | 3 வருடங்கள் | 4 வருடங்கள் | 5 வருடங்கள் | |
| 2016 | சன | 6.78 | 7.19 | 7.80 | - | - | - | - | 143.94 |
| | பெப் | 7.14 | 8.07 | 8.50 | 10 | - | - | 11.42 | 143.93 |
| | மார் | 8.90 | 9.76 | 10.64 | 11.75 | 11.75 | 12.78 | 13.00 | 143.96 |
| | ஏப் | 8.45 | 9.53 | 10.17 | - | 11.53 | 11.78 | - | 143.90 |
| | மே | 8.71 | 9.67 | 10.48 | 11.83 | 11.51 | 12.11 | 12.48 | 145.65 |
| | ஜீன் | 8.88 | 9.86 | 10.55 | 11.42 | 11.58 | 11.93 | 11.89 | 145.28 |
| | ஜுலை | 8.80 | 9.69 | 10.48 | 11.04 | 11.62 | - | 12.07 | 145.41 |
| | ஓக | 9.03 | 9.94 | 10.73 | - | - | - | 11.76 | 145.60 |
| | செப் | 8.55 | 9.39 | 10.11 | - | - | 10.61 | - | 145.78 |
| | ஒத் | 8.60 | 9.48 | 10.24 | - | - | - | - | 146.87 |
| | நொவ | 8.60 | 9.55 | 10.10 | - | - | - | - | 147.77 |
| | திசெ | 8.72 | 9.63 | 10.17 | - | - | 11.94 | - | 148.88 |
| 2017 | சன | 9.03 | 10.07 | 10.37 | - | - | - | 12.19 | 150.09 |
| | பெப் | 9.32 | 10.19 | 10.58 | 12.10 | - | - | 12.89 | 150.82 |
| | மார் | 9.63 | 10.62 | 10.98 | - | - | - | - | 151.43 |
| | ஏப் | 9.73 | 10.70 | 11.02 | - | - | - | - | 151.76 |
| | மே | 9.61 | 10.35 | 10.71 | 11.07 | - | - | 11.42 | 152.33 |
| | ஜுன்* | 9.60 | 10.29 | 10.47 | - | - | - | - | 153.12 |

**மூலம்: திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி**

* **2017 யூன் 22 இல் உள்ளவாறு**

**நலன்புரிச் செலவினம்**

2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியின் நலன்புரி மற்றும் நிவாரணக் கொடுப்பனவுக்கான செலவினம் முன்னைய வருடத்தின் அந்தக் காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது ரூபா 37,309 மில்லியனிலிருந்து ரூபா 38,976 மில்லியன் வரை நூற்றுக்கு 4 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பிற்கு பின்வரும் பிரதான நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் பங்களிப்புச் செய்துள்ளன.

- சமுர்த்தி நிவாரணம்
- பாடசாலை பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைகள்
- முதியோர் கொடுப்பனவு
- உர நிவாரணம்
- கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போஷாக்கு உணவு நிகழ்ச்சித்திட்டம் (போஷாக்குப் பொதி)
- சிறுநிரக நோயாளர்களுக்கான விசேட கொடுப்பனவு
- வெள்ளம் மற்றும் வரட்சி நிவாரணம்

சமுர்த்தி நிதிக் கொடுப்பனவு, முதியோர் கொடுப்பனவு, பாதுகாப்புப் படை உறுப்பினர்களின் பெற்றோர்களுக்கான கொடுப்பனவு மற்றும் வெள்ளத்தினாலும் வறட்சியினாலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான கொடுப்பனவுகள் போன்ற நலன்புரி உதவி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான செலவினம் ரூபா 17,264 மில்லியன் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த மொத்த நலன்புரிச் செலவினத்தில் ரூபா 9,032 மில்லியன் மரணித்த மற்றும் அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களின் ஊழியர் நட்ட ஈட்டின் பொருட்டு 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியின் உறப்பட்ட அதேவேளையில் 2016 ஆம் ஆண்டில் அந்தக் காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது அது ரூபா 8,622 மில்லியனாகக் காணப்பட்டது.

அரசாங்கத்தினால் 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலத்தில் போஷாக்குப் பொதி, திரிபோஷா நிகழ்ச்சித் திட்டம், திரவப்பால் மற்றும் பாடசாலைப் போஷாக்கு நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ரூபா 2,919 மில்லியன்கள் செலவிடப்பட்டுள்ளது.

இதில் திரிபோஷா மற்றும் போஷாக்குப் பொதி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக உறப்பட்ட செலவினங்கள் முறையே ரூபா 516 மில்லியன் மற்றும் ரூபா 1,758 மில்லியன்களாகக் காணப் பட்டன.

இந்தக் காலப்பகுதியில் ரூபா 2,472 மில்லியன் செலவில் பாடசாலை மாணவர்களுக்கான இலவசப் பாடப்புத்தகங்கள், சீருடைகள், பருவச்சீட்டுக்கள், இலவச அறநெறிப்பாடசாலைப் புத்தகங்கள் மற்றும் மாணவர்களுக்கான உதவுதொகைகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்தினால் நோயாளர்களுக்காக தடையின்றி இலவச மருந்துகளை வழங்குவதற்கு 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலத்தினுள் ரூபா 11,318 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளன.

மீளாய்வு காலப்பகுதியில் அரசாங்கத்தினால் உர நிவாரண நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நெல் உற்பத்தி விவசாயிகள் மற்றும் ஏனைய சிறிய பயிர் செய்கையாளர்கள் ஆகியோருக்கு உரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக நிதி மானியத்தை வழங்கும்பொருட்டு ரூபா 7,762 மில்லியன்கள் செலவு செய்யப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.12 நலன்புரிச் செலவினம் சனவரி - ஏப்ரல் 2017**

ரூபா மில்

| விடயம் | சனவ - ஏப்ர 2016 | சனவ - ஏப்ர 2017 |
|---|---|---|
| **தாய், சேய்கள்** | | |
| திரபோஷா நிகழ்ச்சித் திட்டம், குழந்தை பால்மா உணவு மானியம், போஷனமல்ல | 1,753 | 1,913 |
| இலவச பாடப்புத்தகங்கள், சீருடைகள் | 2,570 | 2,041 |
| பாடசாலை பருவகாலச் சீட்டுக்கள் | 1,263 | 245 |
| பாடசாலை போஷாக்கு உணவுகள் | 863 | 1,143 |
| **விவசாயம்** | | |
| உர மானியம் | 7,360 | 7,762 |
| **நலன்புரிக் கொடுப்பனவுகள்** | | |
| சமுர்த்தி நிவாரணம் | 13,817 | 13,311 |
| அங்கவீனமுற்ற படை வீரர்களுக்கான உதவி | 8,622 | 9,032 |
| முதியோருக்கான கொடுப்பனவு | 3,008 | 3,010 |
| மாற்றுத்திறனாளிகளுக்கான உதவி | 354 | 356 |
| உணவு உதவி, வெள்ளம் மற்றும் வரட்சி நிவாரணம் | 2 | 163 |

**மூலம்: தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்**

## அரசாங்க முதலீட்டுச் செலவினம்

### (1). கல்வி

2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலத்தில் சாதாரண கல்வி, உயர் கல்வி, மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி, விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி உள்ளிட்ட கல்வித்துறைகள் மீதான மொத்தச் செலவினம் ரூபா 38,810 மில்லியன் எனக் கணக்கிடப்பட்டுள்ளன. இது 2016 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலத்திலும் பார்க்க 20 சதவீதம் அதிகரிப்பாகும்.

### சாதாரண கல்வி

2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலத்திற்காக சாதாரண கல்வியின்பொருட்டு உறப்பட வேண்டி ஏற்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 23,043 மில்லியனாகக் காணப்பட்ட அதேவேளையில் அதில் ரூபா 15,927 மில்லியன் மீண்டுவரும் செலவினத்திற்காகவும் ரூபா 7,116 மில்லியன் மூலதனச் செலவினத்திற்காகவும் செலவிடப்பட்டுள்ளது.

மீளாய்வுக் காலப்பகுதிக்கு உரியதாக 2016 ஆம் ஆண்டு அந்தக் காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான செலவினம் ரூபா 3,237 மில்லியன் வரை நூற்றுக்கு 6 சதவீதத்தினால் குறைவடைந்தது. இதற்கு பிரதானமாக 2016 ஆம் ஆண்டுக்கான பாடசாலைப் புத்தகங்களை அச்சிடுவதற்குரிய பெரும்பாலான விலைப் பட்டியல்கள் 2017 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் தீர்க்கும்பொருட்டு 2016 ஆம் ஆண்டிலேயே தீர்த்துக்கொள்ளுதல்.

2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட “அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை” (NSBS) நிகழ்ச்சித்திட்ட மீளாய்வு கால எல்லையின்போது தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டது. 2017 ஏப்ரல் மாத இறுதியளவில் (NSBS) நிகழ்ச்சித்திட்டத்திற்காக உறப்பட்ட மொத்த முதலீடு ரூபா 5,464 மில்லியனாகக் காணப்பட்டது.

**உயர் கல்வி**

2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் உயர் கல்வியின் அபிவிருத்திக்காக அரசாங்கத்தினால் 12,646 மில்லியன்கள் செலவிடப்பட்டுள்ள அதேவேளையில் அதில் ரூபா 9,798 மில்லியன் மற்றும் ரூபா 2,848 மில்லியன் தொகை முறையே மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினத்திற்காக காணப்பட்டன.

2017 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத இறுதியில் பத்து (10) பல்கலைக்கழகங்களில் தொழில்நுட்பப் பீடத்தை தாபிப்பதற்காக புதிய கட்டடத் தொகுதிகளை நிர்மாணிக்கும்பொருட்டு ரூபா 255 மில்லியன் செலவிடப்பட்டுள்ளன. 2017 ஆம ஆண்டின் 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலத்தினுள் 3,379 பல்கலைக்கழக மாணவர்களுக்காக மடிக்கணனிகளை கொள்வனவு செய்யும்பொருட்டு கடன் பெறப்பட்டுள்ள அதேவேளையில் 2016 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்ட கடனுக்கான வட்டிச் செலவினத்தை மேற்கொள்வதற்காக மக்கள் வங்கிக்கும் இலங்கை வங்கிக்கும் ரூபா 40 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. தொழில்நுட்பத்திற்கு இலகுவாக பிரவேசிக்கக்கூடிய விதத்தில் சகல அரசாங்கப் பல்கலைக்கழகங்களுக்காகவும் வைபை (WiFi) வழங்குநராக வ./ப. பான் ஓடியோ (தனியார் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ள அதேவேளையில் 2017 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத இறுதியில் நான்கு (4) அரசாங்கப் பல்கலைக்கழகங்களுக்கு (WiFi) வசதிகளை வழங்குவதற்கு பொறுப்பேற்றுள்ளன.

2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் திறன்விருத்தி மற்றும் தொழிற்பயிற்சித் துறையின் மொத்தச் செலவினம் ரூபா 2,085 மில்லியனாகக் காணப்பட்ட அதேவேளையில் அதில் ரூபா 360 மில்லியன் மூலதனச் செலவினமாகக் காணப்பட்டது. திறன்விருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற பிரதான இரண்டு கருத்திட்டங்களாகிய கொழும்பு தொழிற்பயிற்சி நிலையத்தையும் கம்பஹா தொழில்நுட்பக் கல்லூரியையும் தாபித்தல் மற்றும் திறன்கள் துறையின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் பொருட்டு முதல் நான்கு மாத காலத்திற்காக உறப்பட்ட மொத்த மீண்டுவருஞ் செலவினம் முறையே ரூபா 41.2 மில்லியனாகவும் ரூபா 205 மில்லியனாகவும் காணப்பட்டன.

விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சித் துறைகளுக்காக 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் உறப்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 1,036 மில்லியனாகக் காணப்பட்ட அதேவேளையில் அதில் ரூபா 473 மில்லியன் மீண்டு வரும் செலவினமாகக் காணப்பட்டது. இந்த காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான மூன்று கருத்திட்டங்கள் (i) நனோ தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டம் (ii) தேசிய விஞ்ஞான நிலையத்தைத் தாபித்தல் (iii) நீரிழிவு, டெங்கு மற்றும் சிறுநீரக நோய்கள் மற்றும் புற்றுநோய்கள் சம்பந்தமான ஆராய்ச்சிகளுக்கு உதவுவதாகும்.

2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் இந்தக் கருத்திட்டங்களுக்கான மொத்த மீண்டுவரும் செலவினங்கள் முறையே ரூபா 63.75 மில்லியன், ரூபா 100 மில்லியன் மற்றும் ரூபா 92.79 மில்லியனாகக் காணப்பட்டன.

**அட்டவணை 3.13 கல்வித்துறையின் முக்கிய செயற்பாடுகளுக்கான செலவினம்**

ரூபா.மில்

| விடயம் | சனவ - ஏப்ர 2016 | சனவ - ஏப்ர 2017 |
|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | | |
| **பொதுக் கல்வி** | | |
| **தேசிய** | | |
| பாடசாலை ஆசிரியர்களினதும் ஏனைய உதவி ஊழியர்களினதும் சம்பளங்கள் | 10,115 | 10,843 |
| நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் | 3,463 | 3,237 |
| மதிப்பீட்டுப் பரீட்சைகள் | 687 | 833 |
| **மாகாண** | | |
| **மாகாணக் கல்வி** | 39,800 | 40,214 |
| **உயர் கல்வி** | | |
| பல்கலைக்கழகங்கள், ஏனைய உயர் கல்வி நிறுவனங்களின் சேவை வழங்கல் செலவினங்கள் | 7,440 | 8,004 |
| உதவு தொகைகள், புலமைப்பரிசில்கள்,உதவிப் பணங்கள் | 339 | 199 |

| விடயம் | சனவ - ஏப்ர 2016 | சனவ - ஏப்ர 2017 |
|---|---|---|
| **தொழில் பயிற்சி மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி** | | |
| தொழிற்பயிற்சி மற்றும் ஏனைய உதவி ஊழியர்களது சம்பளங்கள் | 1,327 | 1,302 |
| தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்காக வழங்கப்படுகின்ற பருவகால சீட்டுக்கள் | 3 | 6.5 |
| **விஞ்ஞானம், தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி** | | |
| விஞ்ஞான, தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் ஏனைய உதவி ஊழியர்களது சம்பளங்கள | 407 | 424 |
| | | |
| **பொதுமுதலீட்டுச் செலவினம்** | | |
| **பொதுக் கல்வி** | | |
| **தேசிய** | | |
| ஆரம்ப பாடசாலை அபிவிரத்தி | 22 | 110 |
| இடைநிலைப் பாடசாலை அபிவிரத்தி | 1,304 | 588 |
| விசேட கல்வி அபிவிருத்தி | 14 | 17 |
| ஆசிரியர் அபிவிரத்தி | 132 | 405 |
| பொதுக்கல்வி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் | 53 | 5,821 |
| **மாகாண** | | |
| **மாகாணக் கல்வி** | 1,121 | 1,783 |
| **உயர் கல்வி** | | |
| பல்கலைக்கழகங்கள் , ஏனைய உயர் கல்வி நிறுவனங்களை அபிவிருத்தி செய்தல் | 3,147 | 1,180 |
| 84 மாணவர் விடுதிகளை நிருமாணித்தல் | 755 | 1,272 |
| பல்கலைக்கழகங்களில் தொழில்நுட்பவியல் பீடங்களை ஆரம்பித்தல் | - | 255 |
| மடிக்கனணிக்கான கடன் வட்டி (பல்கலைக்கழக மாணவர்களுக்கு) | - | 40 |
| மீன்பிடி, சமுத்திர அறிவியல் பீடம் , ருஹுணு பல்பலைக்கழகம் | | 56 |
| தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கான அபிவிருத்தித் திட்டம் கட்டம் 1 “ஆ” | 98 | 45 |
| **தொழில் பயிற்சி மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி** | | |
| தொழிற்பயிற்சி நிறுவனங்கள் | 40 | 65 |
| திறன் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 196 | 206 |
| கொழும்பு தொழிற்பயிற்சி நிலையம், கம்பஹா தொழினுட்பக் கல்லூரி என்பனவற்றைத் தாபித்தல் | 128 | 402 |
| **விஞ்ஞானம், தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி** | | |
| விஞ்ஞான தொழிநுட்பவியல் மற்றும் ஆய்வு நிறுவனங்கள் மற்றும் ஏனைய மூலதன முதலீடுகள் | 95 | 473 |

**மூலம்: அரச கணக்குகள் திணைக்களம்**

### (2) சுகாதாரம்

2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு காலப்பகுதியில் மேற்கத்திய மற்றும் உள்நாட்டு மருத்துவத் துறைகளை உள்ளடக்கிய சுகாதாரத்துறைக்கான அரசாங்கத்தின் மொத்தச் செலவினம் மாகாண மற்றும் மத்திய அரசாங்கத்தின் சுகாதாரத்திற்கான செலவினங்களையும் உள்ளடக்கி 2016 ஆம் ஆண்டில் அந்தக் காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது ரூபா 61,606 மில்லியன் வரை நூற்றுக்கு 4.7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. சுகாதாரத்திற்கான மொத்தச் செலவினத்தில் ரூபா 52,993 மில்லியன் மீண்டுவரும் செலவினத்திற்கானதாகக் காணப்பட்ட அதேவேளையில் மூலதன முதலீடு ரூபா 8,663 மில்லியனாகக் காணப்பட்டது.

**அட்டவணை 3.14 சுகாதாரத் துறையின் முக்கிய செயற்பாடுகளுக்கான செலவினம்**

ற

| விடயம் | சனவ - ஏப்ர 2016 | சனவ - ஏப்ர 2017 |
|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | **53,270** | **52,993** |
| சேவை வழங்கல் செலவியனம் | 24,132 | 25,773 |
| அதில் மருத்துவ ஆளனி, உதவி ஊழியர் சம்பளங்கள் | 20,372 | 21,209 |
| மருந்து வழங்கலுக்கான ஏற்பாடு | 13,138 | 11,325 |
| மாகாண சுகாதாரம் | 16,000 | 15,895 |
| **அரசாங்க முதலீட்டு செலவினம்** | **5,572** | **8,663** |
| பொலநறுவை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்தி | 23 | 53 |
| கொழும்பு தேசிய வைத்தியசாலையில் காக்கை வலிப்பு அலகு | 699 | 129 |
| ஹம்பாந்தோட்டை, நுவரெலியா பொது வைத்தியசாலை அபிவிருத்தி | 1 | 3 |
| மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் புற்றுநோய் வரட்டுத் தொடரை நிர்மாணித்தல்(ரஸ்வி கருத்திட்டம்) | 15 | - |
| குருணாகல போதனா வைத்தியசாலையில் மகப்பேற்று மருத்துவமனை | 21 | 95 |
| தோட்டத்துறை வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்தல் | 31 | 23 |
| ராகம வைத்தியசாலையில் அவசர சேவைப் பரிவு மற்றும் வாரட்டுத் தொடரினை நிர்மாணித்தல் | 33 | 87 |
| ஹெல்முட் கோஹல் மகப்பேற்று மருத்துவமனை கராப்பிடி வைத்தியசாலை | 46 | 64 |
| உயர்ந்த கதிர்வீச்சு ஆற்றலுடன் இலங்கையில் புற்றுநோயாளர்களுக்கு உயர்தரமான கதிரயக்க சிகிச்சையினை வழங்கல் | 471 | - |
| ஏனைய மூலதன முதலீடுகள் | 3,238 | 6,452 |
| மாகாண சுகாதார முதலீடு | 994 | 1,757 |

**மூலம்: வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்**

### (3). நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவம்

2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவம் தொடர்பான அபிவிருத்தி நடவடிக்கைகளின் பொருட்டு அரசாங்கத்தினால் ரூபா 15,195 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது. அதில் ரூபா 11,455 மில்லியன் மகாவலி அபிவிருத்தி அமைச்சின் கீழ் புதிய நீர்த்தேக்கத்தை புனர்நிர்மாணம் செய்து நிர்மாணிப்பதன் மூலம் மகாவலி நீர்ப்பாசனத் திட்டத்தை அபிவிருத்தி செய்யும்பொருட்டு செலவிடப்பட்டுள்ளன. மீளாய்வு கால எல்லையினுள் மொறகஹாகந்த, களுகங்கை மற்றும் உமா ஓயா கருத்திட்டம் போன்ற பிரதான நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக உறப்பட்ட செலவினம் ரூபா 9,960 மில்லியனாகும்.

நீர்ப்பாசனத் திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கும் நீர்த்தேக்கங்களை நிர்மாணிப்பதற்கும் நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் அமைச்சினால் எஞ்சிய 3,740 மில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத கால இறுதியில் அபிவிருத்தி நடவநடிக்கைகளுக்காக உறப்பட்ட பாரிய செலவினம் உறப்பட்ட யான்ஓயா கருத்திட்டம் நூற்றுக்கு நூறு சதவீத நிதி முன்னேற்றத்தை எடுத்துக்காட்டியுள்ளது.

### (4.) விவசாயம்

உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான விசேட நிகழ்ச்சித் திட்டங்களை உள்ளடக்கிய பிரதான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக விவசாய அமைச்சின் பொருட்டு ரூபா 7,860 மில்லியன் மொத்த ஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைக்காக 2017 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாத காலத்தினுள் உறப்பட வேண்டி ஏற்பட்ட செலவினம் ரூபா 1,284 மில்லியன் ஆகும். இந்தக் காலப் பகுதியினுள் சேதனப் பசளை உற்பத்தி மற்றும் துரித விதைப் பண்ணை அபிவிருத்தி நிகழ்சித்திட்டங்கள் உட்பட இவ்வாறான செயற்பாடுகள் சிலவற்றில் நிலையான நிதி முன்னேற்றம் ஒன்றை எடுத்துக்காட்டியுள்ளது.

### (5). நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடுகள்

2017 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாத காலப்பகுதியினுள் நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு நடவடிக்கைகளுக்காக அரசாங்கம் ரூபா 9,961 மில்லியன்களை முதலீடு செய்துள்ளது. அதில் ரூபா 9,121 மில்லியன்களை பாரிய அளவிலான நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு சம்பந்தமான பதுளை, ஹாலி-எல மற்றும் எல்ல ஒருங்கிணைந்த நீர்வழங்கல் கருத்திட்டம், கொழும்பு நீர் வழங்கல் சேவையை மேம்படுத்துவதற்கான கருத்திட்டம் 01, கொழும்பு நீர் வழங்கல் சேவையை மேம்படுத்துவதற்கான கருத்திட்டம் 02, லபுகம மற்றும் களட்டுவாவ நீர் சுத்திகரிப்பு கருத்திட்டத்தை மறுசீரமைத்தல், மொனராகலை - புத்தளை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம், யாழ்ப்பாணம் -கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுக் கருத்திட்டம், உலர் வலய நகர நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுக் கருத்திட்டம், கண்டி நகர கழிவு நீர் முகாமைத்துவக் கருத்திட்டம், குருநாகல் நீர்வழங்கல் மற்றும் சாக்கடைக் கருத்திட்டம் மற்றும் கதிர்காம புனித ஸ்தல அபிவிருத்திக் கருத்திட்டம் ஆகியவற்றுக்காக செலவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக முறையே ரூபா 742 மில்லியன், ரூபா 76 மில்லியன் மற்றும் ரூபா 22 மில்லியன் நீர் வழங்கல் துறையின் சமூக வசதிகள் கருத்திட்டம், சிறிய மற்றும் நடுத்தர நீர் வழங்கல் திட்டங்கள் மற்றும் சமூக நீர் வழங்கல் கருத்திட்டங்கள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக செலவிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.15 நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாடுகள் மீதான செலவினம்**

ரூபா மில்.

| கருத்திட்டம் | உள்நாட்டு நிதிகள் | திறைசேரி முறிகள் | வெளிநாட்டு நிதிகள் | மொத்த செலவினம் |
|---|---|---|---|---|
| வெளிநாட்டு நிதியளிப்புடன் பாரிளவிலான நீர் வழங்கல், கழிவகற்றல் கருத்திட்டம் | 10 | 3,730 | 5,381 | 9,121 |
| நீர் துறை சமுதாய வசதியளிப்புக் கருத்திட்டம் | 172 | - | 570 | 742 |
| சிறிய நகராக்க நீர்வழங்கல் திட்டங்கள் | 76 | - | - | 76 |
| சமுதாய நீர் வழங்கல் கருத்திட்டங்களை மேம்படுத்தல் | 22 | - | - | 22 |
| **மொத்த முதலீடு** | **280** | **3,730** | **5,951** | **9,961** |

மூலம் : நகர் திட்டமிடல், நீர் வழங்கல்
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை National Water Supply & Drainage Board

### (6). நெடுஞ்சாலைகள் மற்றும் பாலங்கள்

தேசிய வீதிகள் மற்றும் பாலங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மூலதனச் செலவினமாக அரசாங்கத்தினால் 2017 ஆம் ஆண்டில் முதல் நான்கு மாத காலத்தினுள் ரூபா 36,226 மில்லியன் செலவிடப்பட்டுள்ளன. அதில் ரூபா 9,400 மில்லியன் அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்திக்காக செலவிட வேண்டியேற்பட்டுள்ள அதே வேளையில் ரூபா 5,532 மில்லியன் பெருந்தெருக்கள் அபிவிருத்திக்காக செலவிடப்பட்டுள்ளது. அதேவேளையில் அரசாங்கத்தினால் வீதிகளை விரிவு படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் ரூபா 4,939 மில்லியன்களும், பாலங்கள் மற்றும் மேம்பாலங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,096 மில்லியன்களும் மகநெகும கிராமிய வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக ரூபா 238 மில்லியன்களும் செலவிடப்பட்டுள்ளன.

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு மூலங்களின் நிதி உதவியின் அடிப்படையில் வீதிகளை நிர்மானித்தல், புனரமைத்தல் மற்றும் பராமரித்தல் கருத்திட்டங்கள் பலவற்றில் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டது. அவற்றில் மத்திய அதிவேக நெடுஞ்சாலை, தெற்கு அதிவேக நெடுஞ்சாலையை நீடித்தல், முன்னுரிமை வீதிக்கருத்திட்டம், i-Road கருத்திட்டம், புதிய களனிப் பாலக் கருத்திட்டம் மற்றும் ராஜகிரிய, பொல்காவல மற்றும் கனேமுல்ல ஆகிய இடங்களில் 3 மேம் பாலங்களை நிர்மாணித்தல் ஆகியவற்றுக்கு தேசிய முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு வங்கியின் மூலம் நிதி உதவி வழங்கப்படுகின்ற வீதிக் கருத்திட்டங்களின் வட்டி மற்றும் மூலதனத்தின் மீள் கொடுப்பனவுக்காக அரசாங்கத்திற்கு குறிப்பிடத்தக்க தொகையொன்று செலுத்த வேண்டியுள்ள அதே வேளையில் முதல் 6 மாத காலத்தில் இதற்காக ரூபா 12,000 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக மேற் குறிப்பிட்ட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக காணிகளை சுவீகரிக்கும் பொருட்டு 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு காலப் பகுதியுனுள் ரூபா 3,984 மில்லியன் செலவிடப்பட வேண்டியேற்பட்டது.

**அட்டவணை 3.16 பாதைத்துறை மீதான பிரதான செயற்பாடுகளுக்கான செலவினம்**

| தொ இல. | கருத்திட்டம்/ நிகழ்ச்சித்திட்டம் | 2016 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு செலவினம் | 2017 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு செலவினம் |
|---|---|---|---|
| 1 | **அதிவேகப் பாதை அபிவிருத்தி** | **1,578** | **9,458** |
| | வெளிச்சுற்று பெருந்தெருக்கல் கருத்திட்டம் - கட்டம் III | 899 | 1,161 |
| | மத்திய அதிவேகப் பாதை கருத்திட்டம் | 65 | 742 |
| | தென் அதிவேகப் பாதை விரிவாக்கம் | 592 | 7,489 |
| | ஏனையவை | 23 | 66 |
| 2 | **பெருந்தெருக்கல் அபிவிரத்தி** | **1,842** | **5,532** |
| | பாதை பராமரிப்பு | 497 | 2,195 |
| | முன்னுரிமைப் பாதை கருத்திட்டங்கள் - III | 613 | 1,214 |
| | கொழும்பு மாவட்ட வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் | 589 | 243 |
| | தெற்குப் பாதை ஒருங்கிணைப்புக் கருத்திட்டம் | 15 | 799 |
| | ஒருங்கிணைந்த பாதை முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் | 23 | 807 |
| | ஏனையவை | 106 | 274 |
| 3 | **பாதை விரிவாக்கல் மற்றும் மேம்பாடு** | **2,216** | **4,939** |
| 4 | **பாலங்கல் மற்றும் மேம்பாலங்கள் நிர்மாணம்** | **782** | **1,096** |
| | ஐ.இ உருக்குப் பால கருத்திட்டம் | 162 | 233 |
| | தேசிய பெருந்தெருக்கலில் சேதமடைந்த ,பலம் குன்றிய பாலங்களை மீள்கட்டமைத்தல் | 51 | 110 |
| | 46 பாலங்களின் மீள் கட்டமைப்பு | 304 | 109 |
| | பிரதான பால நிர்மாணக் கருத்திட்டம் | 14 | 62 |
| | பழைய பாலங்களின் பொருட்களைக் கொண்டு கிராமிய பாலங்களை நிர்மாணித்தல் | 41 | 129 |
| | இரண்டாவது புதிய களனிப் பால நிர்மாணக் கருத்திட்டம் | 109 | 302 |
| | ஏனையவை(03 மேம்பாலங்கள் உள்ளடங்கலாக) | 103 | 151 |
| 5 | **இயற்கை அனர்த்தத்தினால் சேதமடைந்த பாதை புனரமைப்பு** | **12** | **13** |
| 6 | **மகநெகும கிராமிய வீதி அபிவிருததிக் கருத்திட்டம்** | **293** | **238** |
| 7 | **வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கான மாற்றல்கள்** | **2,000** | **2,038** |
| 8 | **காணி மற்றும் காணி மேம்பாடு** | **823** | **912** |
| 9 | **அரசாங்க உத்தரவாத உள்நாட்டு வங்கி நிதியளிப்புக் கருத்திட்டம்** | **7,808** | **12,000** |
| 10 | **ஏனையவை** | **21** | **-** |
| | **மொத்தம்** | **17,375** | **36,226** |

**மூலம்: தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்**

### (7.) போக்குவரத்து

மீளாய்வுக் காலப்பகுதியினுள் போக்குவரத்துத் துறையின் முதலீடு ரூபா. 9,813 மில்லியனாகக் காணப்படுகின்ற அதே வேளையில் அது பிரதானமாக பொதுப் போக்குவரத்துச் சேவை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி ஆகியவற்றின் ஊடாக நாட்டினுள் புதிய போக்குவரத்துத் தொகுதியொன்றை ஏற்படுத்துவதற்காக செலவிடப்பட்டுள்ளன. மொத்தச் செலவினத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையின் (இ.போ.ச.) புதிய பேரூந்துக்களை கொள்வனவு செய்வதற்கான குத்தகை தவணைக் கொடுப்பனவு மற்றும் உதிரிப் பாகங்களைக் கொள்வனவு செய்தல் ஆகியவற்றுக்காக ரூபா 856 மில்லியன் எஞ்சிய 8,957 மில்லியன் மாத்தறை–பெலியத்த–கதிர்காமம் புதிய புகையிரதப் பாதை, மடு–தலைமன்னார் புகையிரதப்பாதை, பளை–காங்கேசன்துறை புதிய புகையிரதப் பாதை ஆகியவற்றை நிர்மாணித்தல் மற்றும் அனுராதபுரம்/ தலைமன்னார்/ காங்கேசன்துறை சமிக்ஞை தொகுதியைத் தாபித்தல் ஆகியவற்றுக்காக செலவிடப்பட்டன.

**அட்டவணை 3.17 : புகையிரதத்துறை அபிவிருத்திச் செலவினங்கள்: சனவரி-ஏப்ரல் 2017**

ரூபா மில்

| கருத்திட்டத்தின் பெயர் | உள்நாட்டு நிதியீட்டம் | வெளிநாட்டு நிதியீட்டம் | மொத்த செலவினம் |
|---|---|---|---|
| மாத்தறை, பெலியத்த, கதிர்காம புதிய புகையிரதப் பாதை | 44 | - | 44 |
| மது – தலைமன்னார் புகையிரதப் பாதை | 27 | - | 27 |
| புதிய புகையிரத சமிக்ஞை விளக்குகள், தொலைதொடர்பு தொகுதி பொருத்துதல் அனுராதபுரம் - தலைமன்னார் – காங்கேசன்துறை | 14 | 409 | 423 |
| புதிய தண்டவாளங்கள் மற்றும் சிலிப்பர் கட்டைகளை நிரந்தரமாக புனரமைத்தல் | 818 | - | 818 |
| கொங்கிரீட் சிலிப்பர் கட்டைகள் உற்பத்தித் அலகு | 102 | - | 102 |
| வாகனங்களை புனரமைத்தல் | 854 | - | 854 |
| **மொத்த முதலீடு** | **1,873** | **409** | **2,282** |

**மூலம் : தேசிய வரவுசெலவுத் திட்டத்திணைக்களம்**

### (8). மின்வலு மற்றும் சக்தி

2014 ஆம் ஆண்டிலிருந்து அரசாங்கத்தினால் இலங்கை மின்சார சபையின் கடன்களை மூலதனப் பங்காக மாற்றுவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் மூலம் அதன் நிதி நிலைமை வலுவடைந்தமையும் அதற்கு அமைவாக அதன் சுய உற்பத்தி சம்பாத்தியத்தின் மூலம் செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் பிரதிபலனாக வருமானத்தை உருவாக்கும் மின்வலுவை உற்பத்தி செய்யும் கருத்திட்டங்களுக்காக அரசாங்கத்தின் முதலீடு படிப்படியாகக் குறைவடைந்துள்ளது.

2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் மின்வலு மற்றும் சக்தித் துறையின் கருத்திட்டங்களுக்காக அரசாங்கத்தின் முதலீடு ரூபா 40.2 மில்லியனாகக் காணப்பட்டது. இதில் தூய சக்தி மற்றும் வலையமைப்பு வினைத்திறனை மேம்படுத்தல் கருத்திட்டம், பூட்டானிலும் நேபாளத்திலும் இலங்கையிலும் தூய மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அணுகுகைக்காக மகளிர் பங்குபற்றுதலை அதிகரிக்கும் கருத்திட்டம் மற்றும் புதுப்பிக்கத்தக்க உயிர் வாயு சக்தி உற்பத்தி மற்றும் நவீன உயிர் சக்தி தொழில்நுட்பக் கருத்திட்டம் ஆகியவற்றுக்காக உறப்பட்ட செலவினங்கள் முறையே ரூபா. 23.67 மில்லியன், ரூபா.16.3 மில்லியன் மற்றும் ரூபா 0.5 மில்லியன் உள்ளடங்குகின்றன. அதேவேளையில் 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலத்தினுள் வரையறுக்கப்பட்ட பொலிப்டோ லங்கா (தனியார்) நிறுவனத்தின் மூலம் அப்புறப்படுத்தப்பட்ட பிளாஸ்றிக்குகளைப் பயன்படுத்தி எரிபொருளைத் தயாரிப்பதற்காக ரூபா. 8 மில்லியன் செலவிடப்பட்டுள்ளன.

### (9). நகர அபிவிருத்தி

இலங்கையை உயர் வருமானம் பெறும் அபிவிருத்தியடைந்த நாடொன்றாக மாற்றுவதற்கான அரசாங்கத்தின் புதிய உபாயத் திட்டமொன்றாக மாநகர அபிவிருத்தி எண்ணக்கருவை குறிப்பிட முடியும். அதன் பிரகாரம் மேல் மாகாண பிராந்திய மாநகரத்தை திட்டமிடப்பட்ட மாநகரமொன்றாக மாற்றுவதற்காக அடையாளங் காணப்பட்டு திட்டமிடப் பட்டுள்ள அதேவேளையில் அது வீதி நெருக்கடிப் பிரச்சினை, குப்பைகளை அகற்றும் பிரச்சினை, குடிசைகள், சூழல் பிரச்சினைகள் போன்ற பிரச்சினைகளுக்கான தீர்வுகள் வழங்கப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக காலி, கண்டி, யாழ்ப்பாணம், அனுராதபுரம் மற்றும் திருகோணமலை போன்ற உபாயத்திட்ட நகர அபிவிருத்தியை மேற்கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றன.

2017 ஆம் ஆண்டில் முதல் நான்கு மாத காலப் பகுதியினுள் நகர அபிவிருத்திக்காக ரூபா. 14,914 மில்லியன் செலவிடப்பட்டுள்ள அதேவேளையில் அதில் ரூபா 13,988 மில்லியன் பிரதானமாக பாரியளவிலான நகல அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக முதலீடு செய்யப்பட்டுள்ளன.

**அட்டவணை: 3.18 பாரியளவிலான நகர அபிவிருத்தி கருத்திட்டச் செலவினம்: 2017 சனவரி – ஏப்ரல்**

ரூபா.மில்

| கருத்திட்டத்தின் பெயர் | உள்நாட்டு நிதியீட்டம் | வெளிநாட்டு நிதியீட்டம் | மொத்த செலவினம் |
|---|---|---|---|
| மாநகர கொழும்பு நகர் அபிவிருத்திக் கருத்திட்டம் | 323.66 | 458.58 | 782.24 |
| பாரிய கொழும்பு நகர போக்குவரத்து அபிவிருத்தி கருத்திட்டம் கட்டம் I | 128.74 | - | 128.74 |
| நகர உபாய அபிவிருத்தி – கண்டி , காலி | 186.76 | 629.77 | 816.53 |
| பாரிய கொழும்பு வெள்ளப் பாதுகாப்பு மற்றும் நகர சுற்றாடல் அபிவிருத்திக கருத்திட்டம் | 266.73 | - | 266.73 |
| மெனிங் சந்தையினை பேலியகொடைக்கு இடம் மாற்றுவதற்கான கருத்திட்டம் | 102.62 | - | 102.62 |
| நகர அபிவிருத்தி மற்றும் நகர திண்மக் கழிவு முகாமைக் கருத்திட்டம் | 2,391.50 | - | 2,391.50 |
| நகர்புற மீள் உருவாக்கல் கருத்திட்டம் | 8,500.00 | - | 8,500.00 |
| நகர அபிவிருத்தி அதிகார சபையினால் செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் | 662.68 | - | 662.68 |
| இலங்கை நில மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினால் செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் | 337.09 | - | 337.09 |
| **மொத்த முதலீடு** | **12,899.78** | **1,088.35** | **13,988.13** |

**மூலம், : மாநகர மற்றும் மேல் மாகாண அமைச்சு**

### (10). வீடமைப்பு அபிவிருத்தி

"அனைவருக்கும் புகலிடம்" எனும் கருப்பொருளின் கீழ் அனைவருக்கும் பொருத்தமான வீடுகளை வழங்குதல் மற்றும் தற்போது இருக்கின்ற வீடுகளை மேம்படுத்துதல் ஆகிய நோக்கத்துடன் 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலத்தில் வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை வலுவூட்டி துரிதப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டில் வீடமைப்பு அபிவிருத்திக்காக வீடமைப்பு மற்றும் நிர்மானத்துறை அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள மொத்த ஏற்பாடுகளின் அளவு ரூபா 6,707 மில்லியனாகக் காணப்பட்டது. நன்மை பெறுநர்களின் வருமானம் மற்றும் தேவைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு சலுகை ரீதியான நிதிகளை வழங்குவதன் மூலம் மாதிரிக் கிராமங்கள் மற்றும் பரந்தளவிலான வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் இந்த முதலீட்டை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

முன்மைய வருடத்தில் முதல் நான்கு மாத காலத்தினுள் செலவிடப்பட்ட ரூபா 671 மில்லியனுடன் ஒப்பிடும்போது 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலத்தினுள் வீடமைப்பு மற்றம நிர்மானத்துறை அமைச்சினால் வீடமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 1,343 மில்லியன் செலவிடப் பட்டுள்ளது. இந்த முதலீட்டின் மூலம் புதிய மாதிரிக் கிராமங்களில் 484 வீடுகளுக்காகவும் பரந்தளவிலான வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களில் 8,578 வீடுகளுக்காகவும் வீடமைப்புக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 2,534 நன்மை பெறுநர்களுக்காக வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

### (11). அனர்த்த நிவாரண நடவடிக்கை

2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்காக வெள்ளம் மற்றும் வரட்சிக்கான உதவி மற்றும் ஏனைய அனர்த்தங்கள் சம்பந்தமான நடவடிக்கைகளுக்காக அரசாங்கம் ரூபா 1,396.5 மில்லியன்களை செலவிட்டுள்ளது. அதில் குடிநீர் வழங்குவதற்காக ரூபா 163 மில்லியன்களை செலவிட்டுள்ளது. தேசிய இயற்கை அனர்த்த காப்புறுதித் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொருட்டு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்துக்கு காப்புறுதித் தவணை தொகையைச் செலுத்துவதற்காக ரூபா 500 மில்லியன்களை செலவிட்டுள்ள அதே வேளையில் கேகாலை மாவட்டத்தில் மண் சரிவின் மூலம் விபத்துக்குள்ளான குடும்பங்களுக்கான நட்டஈட்டைச் செலுத்துவதற்கும் வீடுகளை நிர்மாணிப்பதற்கும் ரூபா 733.5 மில்லியன்களைச் செலவிட்டுள்ளது.

**2017.04.30 அன்றுள்ளவாறு அமைச்சு ரீதியான மேலதிக ஒதுக்கங்களின் சுருக்கம்**

ரூபா

| தலைப்பு இல | அமைச்சு/திணைக்களம் | நோக்கம் | மீண்டெழும் | மூலதனம் |
|---|---|---|---|---|
| 1 - 22 | விசேட செலவின அலகுகள் | | - | - |
| 1 | அதிமேதகு ஜனாதிபதி | ”வச விச நெதி ரடக்” தேசிய நிகழ்ச்சித் திட்டம், ”ஸ்ரீ சர பிவிசும” நிகழ்ச்சித் திட்டம்,சமய வழிபாட்டுத் தளங்களை அபிவிருத்தி செய்தல், பிரதேச மட்டத்திலான பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான வரவுசெலவுத் திட்ட முன்மொழிவு, கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கு உதவுவதற்கான நிதியம், 2014 ஆம் ஆண்டுடன் தொடர்புபட்ட நிலுவைக் கட்டணங்களைத் தீர்த்தல் | 375,741,710 | 10,393,360,000 |
| 2 | பிரதமர் அலுவலகம் | பொது மக்களுக்கான விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டம், யப்பான் - இலங்கை கூட்டுப் பங்கேற்பு செயலகத்தை நிறுவுதல், உபகரண கொள்வனவு, வாகனம் மற்றும் அம்புலன்ஸ்கள் கொள்வனவு, இலங்கை மின்சார சபையின் 2016 ஆம் ஆண்டுக்கான நிலுவைக் கட்டணங்களைத் தீர்த்துவைத்தல். | 23,696,000 | 90,373,304 |
| 6 | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | | 300,000 |
| 10 | இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு | வரவுசெலவுத் திட்டம் - 2016 இன் தொடர்ச்சியாக ஆணைக்குழுவை பலப்படுத்தல் | | 20,000,000 |
| 13 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | ஓய்வூதிய பிரதிபலன்களுக்கான ஏற்பாடுகள் | 1,200,000 | |
| 16 | பாராளுமன்றம் | பாராளுமன்ற கட்டிடத் தொடரினைப் புதுப்பித்தல், மாதாந்த கொடுப்பனவுகளைச் செலுத்துதல், வாகனமொன்றின் கொள்வனவு, ஆளுக்குரிய வேதனாதிகள், உட்கட்டமைப்பு அபிவிருத்தி, பாராளுமன்ற முறைமைமையினை பலப்படுத்துவதற்கான கருத்திட்டம் | 258,960,000 | 392,221,430 |

ரூபா

| தலைப்பு இல | அமைச்சு/திணைக்களம் | நோக்கம் | மீண்டெழும் | மூலதனம் |
|---|---|---|---|---|
| 17 | பிரதான பாராளுமன்ற முதல்வரின் அலுவலகம் | வெளிநாட்டுப் பிரயாண செலவினங்கள், அரச ஊழியர்களுக்கான ஆதனக் கடன் வட்டி | 1,548,250 | |
| 18 | பிரதான பாராளுமன்ற கொறடாவின் அலுவலகம் | வெளிநாட்டு பிரயாணச் செலவினங்கள், சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் | 11,476,000 | |
| 19 | பாராளுமன்றத்தின் எதிர்கட்சித் தலைவர் அலுவலகம் | வாகனமொன்றின் கொள்வனவு, மூலதனச் சொத்துக்களைப் புனரமைத்தல் | | 58,973,540 |
| 20 | தேர்தல்கள் திணைக்களம் | மாணவர் பாராளுமன்றம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல், தேர்தல் முறைப்பாடுகளை கண்காணிப்பதற்கான அமைப்பு மற்றும் அனர்த்த மீட்பு மையம் என்பன தொடர்பான கருத்திட்டம் | 4,800,000 | 29,100,000 |
| 21 | கணக்காய்வாளர் நாயகம் | வாகனங்களுக்கான குத்தகை, வெளிநாட்டுப் பிரயாண செலவினங்கள், மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 92,250,000 | 7,800,000 |
| 22 | நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் | வெளிநாட்டுப் பிரயாண செலவினங்கள் | 289,040 | |
| | | | | |
| 101 | புத்தசாசன அமைச்சு | ஐ.நா சபையின் உத்தியோகபூர்வ வெஸாக் தின கொண்டாட்டம், பௌத்த சமய வழிபாட்டுத் தலங்களை அபிவிருத்திசெய்தல் | 250,000,000 | 20,796,800 |
| 201 | பௌத்த அலுவல்கள் திணைக்களம் | அறநெறிப் பாடசாலைப் புத்தகங்களை அச்சடித்தல், நூல் நிலைய புத்தகக் கொடுப்பனவு, அரநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கான மாதாந்த கொடுப்பனவுகள் மற்றும் சீருடை, ஆசிரியர் பயிற்சி, தஹம் சரசவிய நிகழ்ச்சித் திட்டம் | 824,075,000 | 5,000,000 |
| | | | | |
| 102 | நிதி அமைச்சு | வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கு அமைய நிதிச் சொத்து முகாமை முகவர் அமைப்பினைத் தாபித்தல், வெளிநாட்டுப் பிரயாணம், வாகனக் கொள்வனவு, ஆளுக்குரிய வேதனாதிகள் | 33,700,000 | 10,130,000,000 |

ரூபா

| தலைப்பு இல | அமைச்சு/திணைக்களம் | நோக்கம் | மீண்டெழும் | மூலதனம் |
|---|---|---|---|---|
| 238 | அரசிறைக் கொள்கைத் திணைக்களம் | வெளிநாட்டுப் பரியாணச் செலவுகள் | 6,500,000 | |
| 240 | தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம் | ஜுலை வேலை நிறுத்தற் காரர்களுக்கான மொத்த தொகைக் கொடுப்பனவு. | 100,000,000 | |
| 241 | பொது தொழில்முயற்சிகள் திணைக்களம் | நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தொடர்பில் விநியோகிக்கப்பட்ட திறைசேரி முறிகளை கணக்கு வைத்தல் | | 10,000,000,000 |
| 242 | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் | ஆளுக்குரிய வேதனாதிகள், எரிபொருள், போக்குவரத்து மற்றும் தபாற்சேவைகள், மூலதனச் சொத்துக்களை புனரமைத்தலும் மேம்படுத்தலும் | 9,074,000 | 200,000 |
2016 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட சொத்து அடிப்படையாகிய ரூபா 1,669 பில்லியன், 2017 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத இறுதியில் ரூபா 1,806 பில்லியன் வரை நூற்றுக்கு 8.2 சதவீதத்தினால் வளர்ச்சி அடைந்துள்ளது. 2016 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட வைப்பின் அளவாகிய ரூபா 1,256 பில்லியனுடன் ஒப்பிடும்போது 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலத்துடன் ஒப்பிடுகையில் வைப்பின் அளவு ரூபா 1,305 பில்லியன் வரை நூற்றுக்கு 3.9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. வங்கியின் செயற்படாக் கடன்வீதம் 2016 ஆம் ஆண்டு இறுதியில் காணப்பட்ட நூற்றுக்கு

2.88 சதவீதத்தில் இருந்து 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலத்தில் நூற்றுக்கு 3.39 சதவீதம்வரை அதிகரித்துள்ளது. இலங்கை வங்கி கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியில் பதிவு செய்த ரூபா. 10.1 பில்லியன் வரிக்கு முன்னரான இலாபத்துடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் ரூபா 10.2 பில்லியனினை வரிக்கு முன்னரான இலாபமாக பதிவு செய்துள்ளது.

### மக்கள் வங்கி (PB)

மக்கள் வங்கி ரூபா 1 ரில்லியனுக்கும் மேலான சொத்து அடிப்படைகளைக் கொண்டு இலங்கையின் இரண்டாவது பாரிய வணிக வங்கியாக மாறியுள்ளது.

வங்கியின் சொத்து அடிப்படை 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியினுள் நூற்றுக்குப் 12 சதவீத வளர்ச்சியொன்றைப் பதிவு செய்து ரூபா 1,458 பில்லியன் வரை அதிகரித்துள்ளது. 2016ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட சொத்து அடிப்படை ரூபா 1,302 பில்லியன் ஆகும். முன்னைய வருடத்தின் இறுதியில் காணப்பட்டவைப்பின் அளவாகிய ரூபா 1,078 பில்லியனுடன் ஒப்பிடும்போது 2017 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத இறுதியில் வைப்பின் அளவு 1,343 பில்லியன் வரை நூற்றக்கு 6 சதவீதத்தினால் வளர்ச்சி அடைந்துள்ளது. 2017 ஆம் ஆண்டின் சனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம வரையான காலப்பகுதியில் தேறிய கடன் மற்றும் முற்பணங்கள் ரூபா 995 பில்லியன் வரை நூற்றுக்கு 11.8 சதவீதத்தினால் வளர்ச்சி ஒன்றைப் பதிவு செய்துள்ளது. 2016 ஆம் ஆண்டில் சம்பந்தப்பட்ட காலப்பகுதியில் சம்பாதித்துள்ள வரிக்க முன்னரான இலாபமாகிய ரூபா 5.6 பில்லியனுடன் ஒப்பிடும்போது மக்கள் வங்கி 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியினுள் ரூபா 4.6 பில்லியன் வரிக்கு முன்னரான இலாபமொன்றை பதிவு செய்துள்ளது.

### தேசிய சேமிப்பு வங்கி (NSB)

தேசிய சேமிப்பு வங்கி அரசுடைமை அனுமதிப்பத்திரம் பெற்ற விசேட வங்கியாகும். 2016 ஆம் ஆண்டுவரை தொடர்ச்சியாகப் 14 வருடங்கள் தேசிய சேமிப்பு வங்கி பிச் ரேட்டின் லங்கா நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தரப்படுத்தலுக்கு அமைவாக AAA (lka) என்னுமிடத்தில் இருக்கின்றது.

2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் வங்கியின் சொத்து அடிப்படை நூற்றுக்கு 2.3 சதவீதத்தனால் ரூபா 933 பில்லியன் வரை வளர்ச்சியடைந்துள்ள அதேவேளையில் 2016ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட சொத்து அடிப்படை ரூபா 912 பில்லியன் ஆகும். வங்கியின் வைப்பு 2017 ஏப்ரல் மாத இறுதியில் நூற்றுக்கு 2.1 சதவீத வளர்ச்சியொன்றைப் பதிவு செய்து ரூபா 671 பில்லியன் பெறுமதியில் காணப்பட்ட அதேவேளையில் 2016 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட பெறுமதி 657 பில்லியனாகும். கடன் மற்றும் முற்பணங்கள் 2017ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரையான காலப்பகுதியில் ரூபா 313 பில்லியன் வரை நூற்றுக்கு 7.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. 2016 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் சம்பாதித்துள்ள வரிக்கு முன்னரான இலாபமாகிய ரூபா 4.4 பில்லியனுடன் ஒப்பிடும் போது தேசிய சேமிப்பு வங்கி 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் ரூபா.3.5பில்லியன் வரிக்கு முன்னரான இலாபமொன்றைப் பதிவு செய்துள்ளது.

### இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (SLIC)

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப் பகுதியினுள் ரூபா 5,139 மில்லியன் வரிக்கு முன்னரான இலாபத்தையும் ரூபா 13.5 பில்லியன் மொத்த வருமானத்தையும் சம்பாதித்துள்ளது. அது 2016 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாத காலப்பகுதியினுள் சம்பாதித்துள்ள மொத்த வருமானமாகிய ரூபா 10.8 பில்லியனுடன் ஒப்பிடும்போது நூற்றுக்கு 24 சதவீத அதிகரிப்பாகும்.

### இலங்கை மின்சார சபை (CEB)

2016 ஆம் ஆண்டின் இறுதி அரையாண்டிலிருந்து நாட்டில் நிலவிய வறட்சியான காலநிலை காரணமாக இலங்கை மின்சார சபை கடும் சவால்களுக்கு உட்பட்டது. அதனால் 2016 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் பதிவு செய்துள்ள ரூபா.5,781 மில்லியன் செயற்பாட்டு நட்டத்துடன் ஒப்பிடும்போது 2016 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் ரூபா. 16,590 மில்லியன் நட்டமொன்றைப் பதிவு செய்துள்ளது. வரியின்றி அலகு ஒன்றுகான செலவு 2017 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் கிலோ வோட் மணித்தியாலத்திற்கு ரூபா 20.28 ரூபாவாகக் காணப்பட்ட அதேவேளையில் 2016 ஆம் ஆண்டு ரூபா 17.54 ஆகப் பதிவாகியிருந்தது. வறட்சிக் கால நிலையின் காரணமாக நீர்மின் உற்பத்தி குறைவடைந்ததன் காரணமாக 2016 இல் நீர் மின்சாரம் :அனல் (எரிபொருள்) : அனல் (நிலக்க கரி) ஆகியவற்றின் விகிதம் 36:31:33 ஆகிய உற்பத்தி 2017 ஆம் ஆண்டின் முதல் மூன்ற மாத காலத்தினுள் 15:39:46 ஆகக் காணப்பட்ட அதேவேளையில் மொத்த உற்பத்தி நீர் மின்சாரம் ஜிகா வோட் 527,அனல் (எரிபொருள்) ஜிகாவோட்ட 1351 மற்றும் அனல் (கரி) ஜிகா வோட்ட 1603 ஆகவும் பதிவாகியிருந்தது.

மேலும் 2016.04.30 அன்று பதிவு செய்துள்ள ரூபா ரூபா.39,055 மில்லியனுடன் ஒப்பிடும்போது 2017 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் இலங்கை மின்சார சபையின் வங்கியிடமுள்ள நிலுவைப் பொறுப்புக்கள் ரூபா 31,744 மில்லியனாகக் காணப்பட்டது.

அனல் மின்னுற்பத்தியின் மூலம் தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்குவதற்காக முதல் ஆறு மாத காலப் பகுதியினுள் செலவாகிய மேலதிகச் செலவுகளை ஈடு செய்வதற்காக,திறைசேரியினால் இலங்கை மின்சார சபைக்கு மேலதிக ஏற்பாடாக ரூபா. 6,000 மில்லியன் தொகையை வழங்கியுள்ளது.

2016இல் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டில் இலங்கை மின்சார சபை அதன் நிரல் அமைச்சின் ஊடாக அரசாங்கத்துடன்

கூட்டுப் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று 2017 மார்ச்சு மாதத்தில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. கூட்டுப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான செயலாற்றுகை இலக்காக நுகர்வோர்களுக்கு வழங்குகின்ற மின்சாரத்தின் தரத்தை மேம்படுத்துதல், குறைந்த செலவைக் கொண்ட மின் வழங்குனராகத் திகழ்தல், மின்சார உற்பத்தியின் கொள்ளளவை அதிகரித்தல் மற்றும் இலங்கை மின்சார சபையின் நிதி ஸ்திரத் தன்மையை சான்றுபடுத்துதல் என்பவற்றைக் குறிப்பிட முடியும்.

### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC)

2017 ஆம் ஆண்டின் முதல் சில மாதங்களில் சர்வதேச சந்தையில் எண்ணெய் விலைகள் அதிகரித்ததன் காரணமாக இந்த வருடத்தின் முதல் நான்கு மாத காலத்தில் பெற்றோலிய மற்றும் அது சார்ந்த உற்பத்தியின் இறக்குமதி விலைகள் முன்னைய வருடத்தில் அதே காலப் பகுதியில் காணப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 470 மில்லியனிலிருந்து ஐக்கிய அமெரிக்க டொலர் 730 வரை நூற்றுக்கு 55 சதவீதத்தனால் அதிகரித்துள்ளது. பிரெண்ட் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் சராசரி விலை முன்னைய வருடத்தின் முதல் நான்கு மாத காலத்தினுள் ஐ.அ.டொலர் 39.61 ஆகக் காணப்பட்ட அதேவேளையில் 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலத்தினுள் அது ஐ.அ.டொலர் 53.96 ஆகக் காணப்பட்டது.

மீளாய்வுக் காலப் பகுதியினுள் அதிகரித்த இறக்குமதிச் செலவு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிச் செயலாற்றுகையில் எதிர்மறையான தாக்கம் ஒன்றைச் செலுத்தியுள்ளது. 2016 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப் பகுதியினுள் ரூபா 37.6 பில்லியனாகக் காணப்பட்ட இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு இலாபம் 2017 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் ரூபா 3.8 பில்லியன் நட்டம் வரை வீழ்ச்சியடைந்துள்ளது. இறக்குமதிப் பொருட்களுக்காக அதிகரித்த கேள்வியுடன் ஐ.அ.டொலருடன் ஒப்பிடும்போது ரூபாயின் பெறுமதி தேய்மானமடைந்ததை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகை பாதகமான தாக்கமொன்றை ஏற்படுத்தியுள்ள அதே வேளையில் அந்தக்காலப் பகுதியினுள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செலாவணிப் பரிமாற்ற நட்டம் ரூா் 5.7 பில்லியனாகும். 2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து ஏற்பட்ட இறக்குமதிச் செலவின் அதிகரிப்பு மற்றும் அமொக்க டொலருக்கு இணையாக ரூபாவின் பெறுமதி தேய்மானமடைந்ததன் காரணமாக வங்கிக்குச் செலுத்த வேண்டியிருந்த கடன் அளவு ரூபா 309 பில்லியனிலிருந்து ரூபா 73 பில்லியன்களினால் அதிகரித்துள்ளது. வங்கிக்குச் செலுத்தவுள்ள கடனின் அளவு அதிகரிக்கும் போக்கு வருடத்தின் எஞ்சிய சில மாதங்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிச் செலவில் குறிப்பிடத்தக்க தாக்கமொன்றை ஏற்படுத்தும்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் செலுத்த வேண்டிய கடனின் பொருட்டு இரண்டு பிரதான அரசாங்க வங்கிகளுக்கு அரசாங்கத்தினால் ஐக்கிய அமெரிக்க டொலர் 1600 மில்லியன் பெறுமதியான திறைசேரி பிணையங்களை வழங்கியுள்ளது.

### இலங்கை துறைமுக அதிகார சபை (SLPA)

2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதகாலப் பகுதியின் இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருமானம் ரூபா 14.1 பில்லியனாகக் காணப்பட்ட அதே வேளையில் அது 2016 ஆம் ஆண்டின் அதேகாலப் பகுதியில் காணப்பட்ட வருமானத்திற்குச் சமமானதாகும். வருடத்தின் முதல் நான்கு மாதகாலப் பகுதியில் அந்நியச் செலாவணிப் பரிமாற்ற நட்டத்தை சீராக்குவதற்கு முன்னா் அதிகார சபையின் வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 4.3 பில்லியனாகக் காணப்பட்ட அதே வேளை அது 2016 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 4.6 பில்லியனாகும். அதன் காரணமாக அந்நியச் செலாவணி பரிமாற்ற நட்டத்தை சீராக்கியதன் பின்னா் 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் நிறுவனத்திற்கு ரூபா 0.5 பில்லியன் நட்டமொன்றைப் பதிவு செய்துள்ளது.

2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் அதிகார சபையின் மொத்தக் கடனின் அளவு ரூபா 237.6 பில்லியன் வரை நூற்றுக்கு 1.7 சதவீதத்தினால் ஓரளவுஅதிகரித்துள்ளது. அதிகார சபையின் செயற்பாட்டுச் செலவுகளில் அண்ணளவாக நூ ற்றுக்கு 28 சதவீதம் வருடாந்த வட்டிச் செலவுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

வருடத்தின் முதல் காலாண்டினுள் துறைமுக அதிகார சபையினால் துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சுடனும் நிதி அமைச்சுடனும் இணைந்து அடுத்து வரும் மூன்று மாத காலப் பகுதியினுள் இந் நிறுவனத்தினால் அடைந்துகொள்ள வேண்டிய இலக்காக அடையாளம் காணப்பட்டுள்ள தகுதிறன்களை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்ட அடிப்படை செயலாற்றுகைக் குறிகாட்டிகளைக் கொண்டதாக புரிந்துணர்வு உடன்படிக்கைக்கூற்றானது கைச்சாத்திடப் பட்டுள்ளது.

### தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

தற்போது காணப்படுகின்ற நூற்றுக்கு 52 சதவீத மட்டத்திலிருந்து 2020 ஆம் ஆண்டளவில் குழாய் நீர் வழங்கலின் அளவினை நூற்றுக்கு 60 சதவீதம் வரை அதிகரிப்பது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பிரதான நோக்கமாகும். அதனால் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் நிவாரணத்தை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் 337 நீர் வழங்கல் திட்டங்கள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அதே வேளையில் எதிர்வரும் காலங்களில் 42 புதிய கருத்திட்டங்களை மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

நீர் கசிதல்,மானிகளை வாசிக்கும் பிரச்சினைகள், சட்ட விரோத நுகர்வு போன்ற செயற்பாடுகள் காரணமாக பிரதானமாக ஏற்படக்கூடிய வருமானம் கிடைக்காத நீர் வழங்கல் சபையின் நிதி மற்றும் செயற்பாட்டுச் செயலாற்றுகையில் குறிப்பிடத்தக்களவு தாக்கம் ஒன்றை ஏற்படுத்துகின்றது. தற்போது வருமானம் கிடைக்காத நீர் விநியோகம் நூற்றுக்கு 27.8 சதவீதம் என்ற உயர் மட்டத்தில் காணப்படுகின்ற அதேவேளையில் 2019 ஆம் ஆண்டளவில் அந்தளவு நூற்றுக்கு 26 சதவீதம் வரை சிறிதளவு குறைவடையும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியினுள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மொத்த வருமானம் 2016 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது நூற்றக்கு 7 சத வீதத்தினால் அதாவது ரூபா 7,405 மில்லியன்கள் வரையில் அதிகரித்தபோதிலும் செயற்பாட்டுச் செலவு அதிகரித்ததன் காரணமாக சபையின் இலாபம் ரூபா 140 மில்லியன் வரை நூற்றுக்கு 50 சதவீதத்தினால் குறைவடைந்து உள்ளது. எவ்வாறாயினும் கைச்சாத்திடப்பட்டுள்ள கூட்டுப் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைவாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை 2017 ஆம் ஆண்டுக்காக ரூபா 4,830 மில்லியன் இலாபமொன்றைச் சம்பாதிப்பதற்கு எதிர்பார்க்கின்றது.

### விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) நிறுவனம்

உரிய காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படாத பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் விமான ஓடு தளம் ரூபா 7.2 பில்லியன் செலவில் புனரமைப்பதற்காக 2017 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் விமான ஓடு தளம் வர்த்தகச் செயற்பாட்டுக்காக முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை தொடர்ச்சியாக மூன்று மாத காலத்திற்கு மூடியிருந்த அதேவேளையில் அகன்ற உடற்பாகத்தைக் கொண்ட விமானத்தை இயக்கும் ஆற்றலை ஏற்படுத்தி 2017.04.06 ஆந் திகதியன்று இந்தக் கருத்திட்டம் வெற்றிகரமாக முடிவுறுத்தப்பட்டது. அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் கையாளப்பட்ட பயணிகள் 3.2 மில்லியனுடன் ஒப்பிடும்போது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் பயணிகளைக் கையாளுவது நூற்றுக்கு 3 சதவீதத்தினால் அதாவது 3.1 மில்லியன் வரை குறைவடைந்துள்ளது.

**மத்தள விமான நிலையத்தின் செயற்பாட்டு புள்ளி விபரம்**

| காலம் | மொத்த பயணிகளின் கையாளுகை | சர்வதேச விமானங்களின் கையாளுகை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்கள்(வரைவு) | 1,395 | 320 |
| 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்கள் (தற்காலிக) | 48,810 | 623 |

எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் நூற்றுக்கு 1.6 சதவீதத்தினால் ரூபா 6,596 மில்லியன் வரை விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) நிறுவனத்தினால் அதிகரித்துக் கொள்ள முடிந்துள்ளது.

உபாயத்திட்ட ரீதியாக முக்கியமான 5 நிறுவனங்களிடையே ஒரு நிறுவனமாக விமான நிலையம் மற்றும் விமான சேவை (இலங்கை) நிறுவனம் அரசாங்கத்தின் கொள்கை வரைசட்டகத்தினுள் முற்தரப்பு உடன்படிக்கை ஒன்றில் அதாவது கூட்டு புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது. இந்த கூட்டு உடன்படிக்கைக்கு அமைவாக 2017 ஆம் ஆண்டுக்காக உடன்பாடு காணப்பட்டுள்ள எதிர்பார்க்கப்படும் இலாபம் மற்றும் பயணிகள் கையாளுகையின் அளவு என்பன முறையே ரூபா 6,699 மில்லியனாகவும் பயணிகள் 10.5 மில்லியனாகவும் காணப்பட்டது.

### ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனி

ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனி வர்த்தக ரீதியான செயற்பாட்டைக் கொண்ட நிறுவனமாக மீள் கட்டமைக்கும் நோக்கில் மூலதனப் பங்களிப்பையும் முகாமைத்துவ நிருவாகத்தையும் தனியார் துறைக்கு வழங்கி மீள் கட்டமைப்புச் செய்யும் செயல்முறையில் அரசாங்கம் தற்போது ஈடுபட்டு வருகின்றது. எவ்வாறாயினும் தகுதியான வியாபாரப் பங்குதாரர் ஒருவரை தெரிவு செய்வதில் ஏற்பட்ட தாமதத்தின் அடிப்படையில் பொருளாதார முகாமைத்துவத்துக்கான அமைச்சரவைக் குழுவினால் ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனியை மீளமைப்பதற்கான சகல மாற்று நடவடிக்கைகளையும் மதிப்பீடு செய்வதற்காக உயர் மட்டத்திலான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

முன்னைய வருடத்தின் முதல் 4 மாத காலத்தில் பதிவாகிய ரூபா 6,125 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனியின் நட்டம் ரூபா 9,522மில்லியன் வரை நூற்றுக்கு 55 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், 2017.04.30 ஆம் திகதியில் உள்ளவாறு திரண்ட நட்டம் மற்றும் எதிர் மறையான தேறிய சொத்துக்களின் அளவு என்பன முறையே ரூபா 170 பில்லியன் மற்றும் ரூபா 116 பில்லியன்களைப் பதிவுசெய்துள்ளது.

ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனி மற்றும் மிஹின் லங்கா விமானக் கம்பனி என்பன தொடர்ந்தும் காணப்படுகின்ற நிதி திரவத்தன்மையின் பிரச்சனைக்குரிய நிலைமையைக் கவனத்திற் கொண்டு அந்தக் கம்பனிகளுக்கு கடன் பாதுகாப்பை வழங்குவதற்காக பொதுத் திறைசேரியினால் திறைசேரி பிணையங்களையும் நிவாரணக் கடிதங்களையும் வழங்கியுள்ளது. இதன் மூலம் ஏற்பட்டுள்ள திரண்ட அர்ப்பணிப்புக்களின் மொத்தம் 2017 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத இறுதியில் ரூபா 29,917 மில்லியனாகவும் ஐ.அ.டொலர் 210 மில்லியனாகவும் காணப்படுகின்றது.

அமைச்சரவையின் பொருளாதார முகாமைத்துவக் குழுவின் தீர்மானத்திற்கு அமைவாக 2016 ஒக்டோபர் 30 ஆந் திகதியிலிருந்து மிஹின் லங்கா விமானக் கம்பனியின் சகல விமான பயண வலையமப்பும் விமானத் தொகுதியும் ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனியுடன் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளது. அதே போன்று மிஹின் லங்கா விமானக் கம்பனியின் ஊழியர்களுக்கு சுய விருப்ப நட்ட ஈட்டுத் திட்டமொன்றை அறிமுகப் படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. அதன் பிரகாரம் அதன் 168 ஊழியர்கள் சுய விருப்பத்தின் பேரில் ஓய்வு பெற்றுள்ள அதே வேளையில் தேவையின் அடிப்படையில் 124 ஊழியர்கள் ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனியினால் உள்ளீர்க்கப்பட்டுள்ளனர்.

**அட்டவணை 4.1: நிதியல்லாத அரசுடைமை தொழில்முயற்சிகளின் வங்கிகளுக்கான நிலுவைக் கடன்கள்**

ரூபா.மில்.

| | நிறுவனம் | வங்கிகளுக்கான கடன் 2015 | வங்கிகளுக்கான கடன் 2016 (வரைவு) | 2017.04.30 அன்றுள்ளவாறு (தற்காலிகமான) |
|---|---|---|---|---|
| 1 | இலங்கை மின்சார சபை | 41,824 | 33,468 | 31,744 |
| 2 | இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம் | 354,094 | 308,516 | 382,552 |
| 3 | இலங்கை துறைமுக அதிகாரசபை | 233,148 | 233,189 | 237,656 |
| 4 | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை | 9,413 | 35,728 | 42,267 |
| 5 | விமான நிலையங்கள் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் லிமிடெட் | 37,729 | 37,679 | 38,524 |
| 6 | ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடெட் | 76,065 | 67,599 | 91,587 |
| 7 | மிஹின் லங்கா (தனியார்) கம்பனி | 165 | 3,372 | 4,817 |
| 8 | இலங்கை போக்குவரத்துச் சபை | 3,395 | - | - |
| 9 | இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தபானம் | 431 | 560 | 1,205 |
| 10 | மத்திய பொறியியல் மதியுரைச் சேவைப் பணியகம் | - | - | - |
| 11 | அரச அபிவிருத்தி, நிர்மாணக் கூட்டுத்தபானம். | 650 | 650 | 700 |
| 12 | மில்கோ (பிரைவெட்) லிமிடெட் | 668 | 688 | 460 |
| 13 | தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை | 861 | 207 | 250 |
| 14 | இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தபானம் | 83 | 154 | 4.1 |
| 15 | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை | 41 | - | 137 |
| 16 | குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி | - | - | - |
| 17 | சிலோன் பிளான்டேஷன்ஸ் லிமிடட் | - | - | - |
| 18 | கலுபோவிட்டியானை தேயிலைத் தொழிற்சாலைக் கம்பனி | - | - | 44.6 |
| 19 | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தபானம் | - | - | - |
| 20 | இலங்கை கனிம மணல் கூட்டுத்தாபனம் | - | 100 | - |
| 21 | இலங்கை பொஸ்பேட் கம்பனி | - | 15 | 25 |
| 22 | கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிடட் | - | - | - |
| 23 | அபிவிருத்தி லொத்தர் சபை | - | - | - |
| 24 | தேசிய லொத்தர் சபை | - | - | - |
| 25 | அரச மருந்தாக்கல் மற்றும் உற்பத்திக் கூட்டுத்தாபனம் | - | - | 434.6 |
| 26 | இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருள் கூட்டுத்தபானம் | 49 | 52 | 50 |
| 27 | அரசு மருந்தாக்கற் கூட்டுத்தபானம் | 56 | 39 | 49.6 |
| 28 | ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை | - | - | - |
| 29 | சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு | - | - | - |
| 30 | இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தபானம் | 195 | 310 | 362 |
| 31 | இலங்கை ஒலிபரப்பரப்புக் கூட்டுத்தபானம் | - | - | - |
| 32 | இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை | 673 | 592 | 544 |
| 33 | அரச மரக் கூட்டுத்தபானம் | - | - | - |

ரூபா. மில்.

| | நிறுவனம் | வங்கிகளுக்கான கடன் 2015 | வங்கிகளுக்கான கடன் 2016 (வரைவு) | 2017.04.30 அன்றுள்ளவாறு (தற்காலிகமான) |
|---|---|---|---|---|
| 34 | அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபன பொது வர்த்தகக் கம்பனி | - | - | 1360 |
| 35 | லங்கா சதொச நிறுவனம் | - | - | 12,133 |
| 36 | அரசாங்க அச்சகக் கூட்டுத்தபானம் | - | - | 550.7 |
| 37 | இலங்கைப் கடற்தொழில் கூட்டுத்தபானம் | - | - | 63 |
| 38 | இலங்கை கடற்தொழில் துறைமுகக் கூட்டுத்தபானம் | 36 | 0.2 | - |
| 39 | லங்கா உரக் கம்பனி | 31,310 | 27,481 | 28,295 |
| 40 | கொழும்பு கொமேர்ஷல் பேர்டிலைஸர் கம்பனி லிமிடெட் | 12,483 | 7,747 | 13,317 |
| 41 | ஹொட்டேல் டெவலொப்பர்ஸ் லங்கா பீஎல்சீ | - | - | - |
| 42 | லங்கா சீனிக் கம்பனி | 23 | 14 | த.இ |
| | மொத்தம் | **803,392** | **758,160** | **889,132** |

**மூலம்: பொது தொழில்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்**
**(அ) ஒவ்வொரு நிதியாண்டும் மார்ச் 31 இல் முடிவடைந்தவாறு**

### அட்டவணை 4.2 அரசுடமைத்தொழில் முயற்சிகளின் இலாபமீட்டல் தன்மை

ரூபா மில்.

| | நிறுவனம் | இலாபம்/(நட்டம்) 2015 | இலாபம்/(நட்டம்) 2016 (வரைவு) | 2017.04.30 அன்றுள்ளவாறு (தற்காலிகமான) |
|---|---|---|---|---|
| 1 | இலங்கை வங்கி | 25,109 | 31,635 | 10,200 |
| 2 | மக்கள் வங்கி | 19,497 | 19,399 | 6,954 |
| 3 | தேசிய சேமிப்பு வங்கி | 13,034 | 13,251 | 3,526 |
| 4 | அரச ஈட்டு, முதலீட்டு வங்கி | 731 | 460 | 217 |
| 5 | வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | 972 | 636 | 164 |
| 6 | வ/ப லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி | 204 | 255 | 94 |
| 7 | பிரதேச அபிவிருத்தி வங்கி | 2,112 | 2,089 | 345 |
| 8 | வ/ப இலங்கை சேமிப்பு வங்கி | 348 | 464 | 218 |
| 9 | ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை | 18,152 | 15,846 | 7,534 |
| 10 | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தபானம் | 3,017 | 9,903 | 5139 |
| 11 | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 4,449 | 6,000 | 1,561 |
| 12 | இலங்கை ஏற்றமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 224 | 193 | 104 |
| 13 | கமநல மற்றும் கமநல காப்புறுதிச் சபை | (256) | (3,261) | (842) |
| 14 | இலங்கை மின்சார சபை | 28,845 | (14,499) | (16,590) |
| 15 | இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம் | (19,468) | 69,620 | (3,846) |
| 16 | இலங்கை துறைமுக அதிகாரசபை | (9,575) | 2,212 | (571.64) |
| 17 | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை | 252 | 835 | 140 |
| 18 | விமான நிலையங்கள் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் லிமிடெட் | 2,378 | 6,888 | 1,893 |
| 19 | ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடெட் | (12,622) | (28,140) | (9,522) |
| 20 | மிஹின் லங்கா (தனியார்) கம்பனி | (1,196) | (1,579) | த.இ |
| 21 | இலங்கை போக்குவரத்துச் சபை | (3,438) | 3,617 | 3.5 |
| 22 | இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தபானம் | (586) | (703) | (245) |
| 23 | மத்திய பொறியியல் மதியுரைச் சேவைப் பணியகம் | 510 | 833 | 198 |
| 24 | அரச அபிவிருத்தி, நிர்மாணக் கூட்டுத்தபானம். | 80 | 28 | 170 |

ரூபா.மில்

| | நிறுவனம் | இலாபம்/(நட்டம்) | | 2017.04.30 அன்றுள்ளவாறு |
|---|---|---|---|---|
| | | 2015 | 2016 (வரைவு) | (தற்காலிகமான) |
| 25 | மில்கோ (பிரைவெட்) லிமிடெட் | (243) | 274 | 137 |
| 26 | தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை | 39 | (18) | (102) |
| 27 | இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தபானம் | (189) | (134) | (12) |
| 28 | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை | (401) | (404) | (38) |
| 29 | குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி | 155 | 132 | 65 |
| 30 | சிலோ பிளான்டேஷன்ஸ் லிமிடட் | 79 | 69 | 74 |
| 31 | கலுபோவிட்டியானை தேயிலைத் தொழிற்சாலைக் கம்பனி | 7 | 33 | 30 |
| 32 | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தபானம் | 17 | 32 | 1.4 |
| 33 | இலங்கை கனிய மணல் கூட்டுத்தாபனம் | 509 | 206 | 43 |
| 34 | இலங்கை பொஸ்பேட் கம்பனி | 57 | (34) | (36) |
| 35 | கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிடட் | 13 | 14 | 1.7 |
| 36 | அபிவிருத்தி லொத்தர் சபை | 1,669 | 2,833 | 621 |
| 37 | தேசிய லொத்தர் சபை | 700 | 414 | 34 |
| 38 | அரச மருந்தாக்கல் மற்றும் உற்பத்திக கூட்டுத்தாபனம் | 414 | 262 | 151.7 |
| 39 | இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருள் கூட்டுத்தபானம் | 49 | 72 | த.இ |
| 40 | அரசு மருந்தாக்கற் கூட்டுத்தபானம் | 1,230 | 1,677 | 370 |
| 41 | ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை | (250) | 418 | (36.5) |
| 42 | சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு | 327 | (162) | (120) |
| 43 | இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தபானம் | (375) | (160) | 8.8 |
| 44 | இலங்கை ஒலிபரப்பரப்புக் கூட்டுத்தபானம் | 62 | 84 | 20.3 |
| 45 | இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை | (40) | 4 | 8.6 |
| 46 | அரசாங்க மரக் கூட்டுத்தபானம் | 795 | 531 | 80.5 |
| 47 | அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபன பொது வர்த்தகக் கம்பனி | 19 | 26 | 15 |
| 48 | லங்கா சதொச நிறுவனம் | (3,647) | (4,805) | 742 |
| 49 | அரசாங்க அச்சகக் கூட்டுத்தபானம் | 3 | 10 | (145) |
| 50 | இலங்கைப் கடற்தொழில் கூட்டுத்தபானம் | (190) | (91) | 8 |
| 51 | இலங்கை கடற்தொழில் துறைமுகக் கூட்டுத்தபானம் | (60) | (113) | (22.28) |
| 52 | லங்கா உரக் கம்பனி | 411 | 713 | 45 |
| 53 | கொழும்பு கொமேர்ஷல் பேர்டிலைஸர் கம்பனி லிமிடெட் | 436 | 147 | 12 |
| 54 | ஹொட்டேல் டெவலொப்பர்ஸ் லங்கா பீஎல்சீ | 433 | 605 | 1.88 |
| 55 | லங்கா சீனிக் கம்பனி | (981) | 1,103 | (653) |
| | **மொத்தம்** | **73,821** | **139,720** | **8,149.96** |

மூலம்: பொது தொழில்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

### அட்டவணை 4.3 அரசுடைமை தொழில்முயற்சிகளின் அறவீடு/பங்கிலாப வருமானம்

ரூபா.மில்

| விடயம் | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017.04.30 அன்றுள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|
| அறவீடு | **28,629** | **31,514** | **30,400** | **42,137** | **26,118** | **92,338** | **3,950** |
| தேசிய சேமிப்பு வங்கி | 4,500 | 8,200 | 5,000 | 4,000 | 2,800 | 12,026 | - |
| இலங்கை வங்கி | 4,000 | 5,000 | 5,000 | 6,500 | 5,000 | 18,000 | 1000 |
| மக்கள் வங்கி | 4,500 | 4,500 | 4,500 | 6,000 | 3,000 | 8,000 | 1000 |
| தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு | 9,050 | 7,200 | 10,100 | 10,000 | 10,000 | 28,000 | - |

ரூபா. மில்

| விடயம் | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017.04.30 அன்றுள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|
| இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம | - | - | - | 10,000 | - | 10,000 | - |
| அரச ஈட்டு, முதலீட்டு வங்கி | - | 25 | 40 | 10 | 10 | 10 | - |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | - | 500 | 500 | - | 87 | 88 | - |
| அரச மரக் கூட்டுத்தபானம் | 75 | 50 | 50 | 25 | 50 | 175 | 100 |
| அரச மருந்தாக்கல் மற்றும் உற்பத்திக கூட்டுத்தாபனம் | 59 | 20 | 20 | 25 | 30 | 65 | |
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 3,495 | 4,200 | 3,200 | 4,000 | 3,000 | 2,500 | 750 |
| புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் | 740 | 750 | 700 | 650 | 850 | 900 | - |
| தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை | - | - | 100 | - | 75 | 175 | - |
| இலங்கை மின்சார சபை | 2,000 | - | - | - | - | 8,000 | - |
| இலங்கை முதலீட்டு சபை | 210 | 200 | - | 100 | 141 | 115 | - |
| தேசிய லொத்தர் சபை | - | 502 | 500 | - | 50 | 550 | - |
| இலங்கை சுற்றுளா மேம்பாட்டுப் பணியகம் | - | - | - | 500 | 500 | 1,500 | 500 |
| பிணையங்கள் மற்றும் பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழு | - | - | 94 | - | - | - | - |
| அலங்கை காப்புறுதி சபை | - | - | 300 | - | - | - | - |
| சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை | - | 350 | 200 | 250 | 400 | 768 | 600 |
| அரசு மருந்தாக்கற் கூட்டுத்தபானம் | - | - | 50 | 75 | 100 | 216 | - |
| இலங்கை வெளிநாட்டு வேலைவாய்புப் பணியகம் | - | - | - | - | - | 1000 | |
| தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் | - | - | - | - | - | 200 | |
| மத்திய பொறியியல் மதியுரைச் சேவைப் பணியகம் | - | - | - | - | 25 | 25 | |
| இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | - | - | 25 | - | - | 25 | |
| ஏனையவை | - | 17 | 21 | 2 | - | - | - |
| **பங்கிலாபங்கள்** | **5,722** | **4,548** | **4,770** | **4,664** | **3,678** | **15,821** | **421** |
| இலங்கை வங்கி | 20 | 346 | 346 | 346 | 346 | 346 | 173 |
| மக்கள் வங்கி | - | 158 | 316 | 316 | 316 | 316 | 158 |
| ஸ்ரீ லங்கா டெலிகொம் | 536 | 759 | 760 | 759 | 795 | 795 | - |
| டி லா ரு லங்கா லிமிடெட் | 68 | 42 | 44 | 49 | 61 | 62 | - |
| இலங்கை கனிய மணல் லிமிடெட் | 500 | 1,700 | - | 43 | 14 | - | - |
| லங்கா இன்டஸ்டிரியல் எஸ்டேட் லிமிடெட் | 31 | 47 | 55 | 55 | 55 | 47 | - |
| விமான நிலையம மற்றும் விமான சேவைகள் லிமிடெட் | 2,406 | - | 500 | 500 | 497 | 1,500 | - |
| இலங்கை மின்சாரக் கம்பனி லிமிடெட் | - | 75 | 75 | 25 | 87 | 152 | - |
| பெருந்தோட்டக் கம்பனிகள் | 219 | 179 | 139 | 80 | 62 | 10 | 54 |
| இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 1,750 | 1,001 | 2,199 | 2,001 | 1,003 | 11,857 | - |
| லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி | 6 | 18 | 36 | 36 | 36 | 36 | - |

ரூபா. மில்

| விடயம் | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017.04.30 அன்றுள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|
| தேசிய சேமிப்பு வங்கி | 60 | 60 | 60 | 60 | 60 | 60 | 30 |
| தேசிய சேமிப்பு வங்கி | 2 | 4 | 10 | 6 | 5 | 2 | 1 |
| இலங்கை பொஸ்பேட் கம்பனி | 20 | 40 | 25 | 35 | 30 | - | 5 |
| சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு | 49 | 88 | 50 | 125 | 84 | - | - |
| ரத்னா ஆரக்ஷக லங்கா லிமிடெட் | - | 10 | 17 | 68 | 93 | - | - |
| சிலோன் பேர்டிலைஸர் லிமிடெட் | 12 | 4 | 9 | 38 | 54 | 116 | - |
| கலம்பு கொமேர்ஷியல் பேர்டிலைஸர் லிமிடெட் | - | 8 | 10 | 12 | 10 | 25 | - |
| லங்கா லெய்லண்ட் லிமிடெட் | 35 | 5 | 97 | 11 | 54 | 34 | - |
| ஏனையவைகள் | 8 | 4 | 22 | 99 | 16 | 463 | - |
| **மொத்தம்** | **34,351** | **36,062** | **35,170** | **46,801** | **29,796** | **108,159** | **4,371** |

**மூலம்: பொது தொழில்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்**

# அத்தியாயம் 5

## 5.1 வெளிநாட்டு நிதியளிப்பு அர்ப்பணிப்புக்கள்

2017 – 2020 வரையான நடுத்தரக் காலஅரசிறை வேலைச் சட்டகத்தில் குறிப்பிடப்பட்ட பேரண்டப் பொருளாதார இலக்குகளுடன் இணைந்தவகையில்,பொதுமுதலீட்டுநிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக 2017 சனவரி 01 ஆந் திகதி முதல் ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் அரசாங்கம் வெளிநாட்டு அபிவிருத்திப் பங்காளர்கள் /கடன் வழங்கும் முகவர் நிறுவனங்களுடன் ஐ.அ.டொ. 244.1 மில்லியன் பெறுமதியான பத்து (10) நிதியளிப்பு அரப்பணிப்பு உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மொத்த அர்ப்பணிப்புக்களில், ஐ.அ.டொ. 174.3 மில்லியன் கடனாகவும் ஐ.அ.டொ. 69.8 மில்லியன் மானியமாகவும் கிடைக்கப்பெற்றுள்ளன. அர்ப்பணிப்புக் கடன்கள் தொடர்பான நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பான பட்டியலொன்று அட்டவணை 5.1 இல் காட்டப்பட்டுள்ளது.

அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்ட மொத்த அர்ப்பணிப்புக்களில், உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி அமைப்பானது, 2017 சனவரி முதல் ஏப்ரல் வரையான காலப்பகுதியில், ஐ.அ.டொ. 119.4 மில்லியன் பெறுமதியான அர்ப்பணிப்பினை மேற்கொண்டுள்ளதோடு, அதனைத் தொடர்ந்து ஐரோப்பிய முதலீட்டு வங்கி (ஐ.அ.டொ.53.4 மில்லியன்) ஐரோப்பிய சமூகம் (ஐ.அ.டொ. 4.8 மில்லியன்) கொரியா (ஐ.அ.டொ. 13.0 மில்லியன்) மற்றும் யப்பான் (ஐ.அ.டொ. 11.2 மில்லியன்) என்பனவும் அர்ப்பணிப்புக்களை வழங்கியுள்ளன.

இக்காலப் பகுதியில் மேற்குறித்த அர்ப்பணிப்புக்களை துறை ரீதியாக நோக்கும் போது அதகளவிலான அர்ப்பணிப்புக்கள் விவசாயத்துறைக்கும் (ஐ.அ.டொ. 153.8 மில்) அதனைத் தொடர்ந்து நீர் வழங்கல் மற்றும் துற்பரவேற்பாடுகளுக்காகவும் (ஐ.அ.டொ. 11.2 மில்லியனும் அர்ப்பணிக்கபட்டுள்ளன.

வரைபு : 5.1 2017 சனவரி 01 முதல் ஏப்ரல் 30 வரையில் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கான துறைரீதியான அர்ப்பணிப்பு (ஐ.அ.டொ.மில்லியன்)




**மூலம்:வெளிநாட்டுவளங்கள் திணைக்களம்**

அட்டவணை 5.1 2017 சனவரி 01 முதல் ஏப்ரல் 03 வரையில் நியதிகளுடனானவெளிநாட்டுநிதியளிப்பஅர்பணிப்புக்கள்

| அபிவிருத்திப் பங்காளர் / கடன் வழங்கும் முகவர் | சாதன வகை | உடன் படிக்கை திகதி | கருத்திட்டம் / நிகழ்ச்சித் திட்டம்/ சாதனத்தின் பெயர் | நாணயம் | அர்பணித்தப்பட்ட தொகை (மில்லியன்) | | | நிதிநியதிகள் | | | | சலுகை காலம் (ஆண்டு) | முதிர்ச்சி/ உடன் படிக்கை திகதியிலிருந்தான எஞ்சிய காலம் (ஆண்டுகள்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | சாதன நாணயத்தில் | ரூபா | ஐ.அ.டொ | வட்டி | | | ஏனைய கட்டணங்கள் | | |
| | | | | | | | | வகை | வருடாந்த வீதம் (%) | வரையறை (100 அடிப்படை புள்ளிகள்) | | | |
| இருதரப்பு | | | | | | | | | | | | | |
| யப்பான் | மானியம் | 2017/02/27 | பொருளாதார, சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (பொதுபாதுகாப்பு, பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கெதிரானஎதிர் செயற்பாடுகளை பலப்படுத்தல்) | யென் | 250.0 | 337.3 | 2.2 | ஏற்புடையதாகாது | | | | | 3.8 |
| | மானியம் | 2017/04/12 | பொருளாதார, சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (துறைமுக,கடல்சார் செயற்பாடுகள்) | யென் | 1,000.0 | 1,353.8 | 8.9 | ஏற்புடையதாகாது | | | | | 3 |
| கொரியா | மானியம் | 2017/02/22 | தேசியகல்வியல் கல்லூரியினைத் தாபிப்பதற்கான கருத்திட்டம் | ஐ.அ.டொ | 13.0 | 1,966.2 | 13.0 | ஏற்புடையதாகாது | | | | | 5 |
| பல்தரப்பு | | | | | | | | | | | | | |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | கடன் | 2017/02/17 | வட மாகாண நிலையான மீன்பிடி அபிவிருத்தி கருத்திட்டத்திற்கான முன்கூட்டி வரையப்பட்ட கருத்திட்டம் | ஐ.அ.டொ | 1.3 | 196.0 | 1.3 | நிலையான | 2 | ஏற்புடையதாகாது | - | 1 | 6 |
| ஐரோப்பிய சமூகம் | மானியம் | 2017/04/06 | இலங்கையில் நல்லிணக்கச் செயற்பாடுகளை வலுப்படுத்தல் | யூரோ | 12.0 | 1,944.4 | 12.8 | ஏற்புடையதாகாது | | | | | 0 |
| | மானியம் | 2017/04/06 | இலங்கையில் விவசாயத் துறையினை நவீனமயப்படுத்த உதவுதல் | யூரோ | 30.0 | 4,860.9 | 32.0 | ஏற்புடையதாகாது | | | | | 0 |

அட்டவணை 5.1 2017 சனவரி 01 முதல் ஏப்ரல் 03 வரையில் நியதிகளுடனான வெளிநாட்டு நிதியளிப்பு அர்ப்பணிப்புக்கள்

| அபிவிருத்திப் பங்காளர் / கடன் வழங்கும் முகவர் | சாதன வகை | உடன்படிக்கை திகதி | கருத்திட்டம் / நிகழ்ச்சித் திட்டம்/ சாதனத்தின் பெயர் | நாணயம் | அர்ப்பணித்தப்பட்ட தொகை (மில்லியன்) | | | நிதிநியதிகள் | | | | சலுகை காலம் (ஆண்டு) | முதிர்ச்சி/ உடன்படிக்கை திகதியிலிருந்தான எஞ்சிய காலம் (ஆண்டுகள்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | சாதன நாணயத்தில் | ரூபா | ஐ.அ.டொ | வட்டி | | | ஏனைய கட்டணங்கள் | | |
| | | | | | | | | வகை | வருடாந்த வீதம் (%) | வரையறை (100 அடிப்படை புள்ளிகள்) | | | |
| ஐரோப்பிய முதலீட்டு வங்கி | கடன் | 2017/01/20 | பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டுத் திட்டம் கருத்திட்டம் 3 | யூரோ | 50.0 | 8,014.6 | 53.4 | மாறக்கூடிய | ஐ.அ.டொக்கான 06 மாத LIBOR | 0 | - | 1 | 11 |
| உணவு, விவசாய அமைப்பு | மானியம் | 2017/02/15 | நிலையான நாற்றுஉற்பத்திக்காக குறிப்பீடு செய்யப்பட்ட உர முகாமை முறைமையினை அபிவிருத்தி செய்தல் | ஐ.அ.டொ | 0.3 | 40.8 | 0.3 | ஏற்புடையதாகாது | | | | | 0 |
| | மானியம் | 2017/03/20 | வரட்சியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் விவசாய வாழ்வாதாரத்தை மீளநிலை நிறுத்துவதற்கான கருத்திட்டம் | ஐ.அ.டொ | 0.5 | 75.7 | 0.5 | ஏற்புடையதாகாது | | | | | 0 |
| சர்வதேச அபிவிருத்தி அமைப்பு | கடன் | 2017/01/17 | விவசாயத் துறையினை நவீனமயமாக்கல் திட்டம் | SDR | 89.2 | 17,963.2 | 119.7 | நிலையான | 1.25 | ஏற்புடையதாகாது | சேவைக் கட்டணத்தின் 0.75% | 5 | 24 |
| | | | | | மொத்தம் | **36,752.9** | **244.1** | | | | | | |

மூலம்:வெளிநாட்டுவளங்கள் திணைக்களம்

குறிப்பு: 1. LIBOR = லண்டன் வங்கியிடைவட்டிவீதம்

2. அரசுடைமைத் தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுகடன் அர்ப்பணிப்புக்கள் உள்ளடக்கப்படவில்லை.

3. கடன் உடன்படிக்கைகைச்சாத்திட்டதிகதியில் வேறுபட்டநாணயங்களுக்குக் காணப்பட்ட செலாவணி வீதங்களே அறிக்கைக்கான பரிவர்த்தனை வீதங்களாக பயன்படுத்தப்பட்டுள்ளன.

### 5.2 வெளிநாட்டு நிதியளிப்புப் பகிர்வுகள்

2017 சனவரிமுதல் ஏப்ரல் 30 வரையானகாலப பகுதியின் போது அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட அர்ப்பணிப்புக்களிலிருந்தான மொத்தப் பகிர்வுகள் ஐ.அ.டொ. 440.6 மில்லியனாகும். (ரூபா. 66,514.0 மில்லியனாகும்.) அவற்றில்,ஐ.அ.டொ. 8.7 மில்லியன் மானியமாகவும் ஐ.அ.டொ. 431.9 மில்லியன் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளன. மொத்தப் பகிர்வுகளின் அதியுயர் நிதிப் பகிர்வு அதாவது 40 சதவீதம் சீனாவினால் வழங்கப்பட்டுள்ளதுடன் அதனைத் தொடர்ந்து உலக வங்கி (17 சதவீதம்) ஆசிய அபிவிருத்தி வங்கி (16 சதவீதம்) என நிதிப் பகிர்வுகளை மேற்கொண்டுள்ளன. இதனை வரைபு 5.2 காட்டுகிறது.

அட்டவணை 5.2 2017 சனவரி 01 முதல் ஏப்ரல் 30 வரையான காலப்பகுதியில் அபிவிருத்திப் பங்காளர்களினாலும் வழங்கப்பட்ட நிதிப்பகிர்வுகள்

| அபிவிருத்திப் பங்காளர்/கடன் வழங்கும் முகவர் | பகிரப்பட்டதொகை (மில்லியன்)* | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | கடன் | | மானியம் | | மானியம் | |
| | ரூபா | ஐ.அ.டொ | ரூபா | ஐ.அ.டொ | ரூபா | ஐ.அ.டொ |
| இருதரப்பு | **42,813.3** | **283.8** | **283.2** | **1.8** | **43,096.5** | **285.6** |
| சீனா | 25,650.1 | 170.1 | - | - | 25,650.1 | 170.1 |
| யப்பான் | 3,990.5 | 26.4 | 216.4 | 1.4 | 4,206.9 | 27.8 |
| பிரான்ஸ் | 1,630.1 | 10.8 | - | - | 1,630.1 | 10.8 |
| Duch Bank AG (ஐக்கிய இராச்சியம்) | 1,602.1 | 10.6 | - | - | 1,602.1 | 10.6 |
| இந்தியா | 1,576.0 | 10.5 | - | - | 1,576.0 | 10.5 |
| ஸ்பெயின் | 1,563.4 | 10.4 | - | - | 1,563.4 | 10.4 |
| சவூதிஅரேபியா | 1,329.2 | 8.8 | - | - | 1,329.2 | 8.8 |
| HSBC Bank PLC (Denmark EKF) | 1,043.2 | 6.9 | - | - | 1,043.2 | 6.9 |
| ஹங்கேரி | 810.8 | 5.4 | - | - | 810.8 | 5.4 |
| HSBC Bank PLC (ஐக்கிய இராச்சியம்) | 569.5 | 3.8 | - | - | 569.5 | 3.8 |
| ஏற்றுமதிமற்றும் இறக்குமதிவங்கிஐக்கியஅமெரிக்கா | 526.5 | 3.5 | - | - | 526.5 | 3.5 |
| ஜெர்மனி | 397.2 | 2.7 | 66.8 | 0.4 | 464.0 | 3.1 |
| குவைட் | 447.4 | 3.0 | - | - | 447.4 | 3.0 |
| Export Finance & Insurance Corporation (அவுஸ்திரேலியா) | 432.0 | 2.9 | - | - | 432.0 | 2.9 |
| Banko Bilbo Vizcaya Argentaria S.A நிறுவனம் (ஸ்பெய்ன்) | 397.0 | 2.6 | - | - | 397.0 | 2.6 |
| KBC Bank of Belgium | 319.9 | 2.1 | - | - | 319.9 | 2.1 |
| UniCredit Bank Austria AG பெல்ஜியம் | 207.0 | 1.4 | - | - | 207.0 | 1.4 |
| Co-op Centrale Raiffeisen-Boerenleen Bank (நெதர்லாந்து) | 140.1 | 0.9 | - | - | 140.1 | 0.9 |
| கொரியா | 139.1 | 0.9 | - | - | 139.1 | 0.9 |
| RaiffeisenZentral Bank (ஒஸ்டரியா) | 42.0 | 0.3 | - | - | 42.0 | 0.3 |
| பல்தரப்பு | **22,383.4** | **148.1** | **1,034.2** | **6.9** | **23,417.6** | **155.0** |
| ஆசியஅபிவிருத்திவங்கி | 10,899.1 | 72.1 | - | - | 10,899.1 | 72.1 |
| சர்வதேசஅபிவிருத்திஅமைப்பு | 8,379.1 | 55.5 | 902.5 | 6.0 | 9,281.6 | 61.5 |
| பனரமைப்பு,,அபிவிருத்திக்கானசர்வதேசவங்கி | 1,727.2 | 11.4 | 55.8 | 0.4 | 1,783.0 | 11.8 |
| சர்வதேசஅபிவிருத்திக்கானஒபெக் நிதியம் | 727.1 | 4.8 | - | - | 727.1 | 4.8 |
| விவசாயஅபிவிருத்திக்கானசர்வதேசநிதியம் | 650.8 | 4.3 | 75.9 | 0.5 | 726.7 | 4.8 |
| மொத்தம் | **65,196.6** | **431.9** | **1,317.4** | **8.7** | **66,514.0** | **440.6** |

**மூலம்:வெளிநாட்டுவளங்கள் திணைக்களம்**

**குறிப்பு: பல்வேறுபட்டநாணயங்களில் மேற்கொள்ளப்பட்ட நிதிப் பகிர்வுகளை ஐ.அ.டொ. மற்றும் ரூபா என்பனவற்றிற்கு மாற்றுவதற்காக 2017, ஏப்ரல் மாதம் 30 ஆந் திகதி நிலவிய நாணயமாற்று வீதங்கள் பயன்படுத்தப்பட்டன**

* **தற்காலிகமானது**

**வரைபு 5.2 2017 சனவரி 01 முதல் ஏப்ரல் 30 வரையானகாலப்பகுதியின் போது ஒவ்வொருஅபிவிருத்திப் பங்காளர்களினாலும் வழங்கப்பட்ட நிதிப்பகிர்வுகள்**




**மூலம்:வெளிநாட்டுவளங்கள் திணைக்களம்**

**ஏனையவை டென்மார்க், ஹங்கேரி, சர்வதேச அபிவிருத்திற்கான ஒபெக் நிதியம், விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம், ஐக்கிய நாடுகள், ஜேர்மனி. குவைத் அவுஸ்திரேலியா, பெல்ஜியம், ஏஸ்ம்ரியா, நெதர்லாந்துமற்றும் கொரியா**

மீளாய்வு காலப்பகுதியின் போது மேற் கொள்ளப்பட்ட மொத்த நிதிப் பகிர்வின் 50 சதவீத மானவை வீதிகள் மற்றும் பாலங்களுக்காக பகிரப்பட்டுள்ளதோடு, சக்தி மற்றும் வலு என்ப வற்றிற்காக 9 சதவீதமும் சுகாதாரம் மற்றும் சமூக நலனோம்பு என்பவற்றிற்காக 7 சதவீதமும் பகிரப்பட்டுள்ளன.

வரைபு 5.3: 2017 சனவரி 01 முதல் எப்ரல் 30 வரையானகாலப்பகுதியில் துறைரீதியாகமேற்கொள்ளப்பட்டபகிர்வுகள் (ஐ.அ.டொ. மில்லியன்)




**மூலம்:வெளிநாட்டுவளங்கள் திணைக்களம்**

**ஏனையவை கல்வி, பயிற்றுவிப்பு, கால்நடை அபிவிருத்தி, பாதுகாப்பு, அனர்த்த முகாமை, தொழில், தொழிற்பயிற்சி, சுற்றாடல், பெருந்தோட்டம், விவசாயம், முகாமைத்துவம் மற்றும் நிறுவன அபிவிருத்தி**

**5.3 அர்ப்பணிக்கப்பட்டு பகிரப்படாத மீதி மற்றும் வெளிநாட்டுநிதிப் பயன்பாடு.**

2017 ஏப்ரல் 30 அன்றுள்ளவாறு,அடுத்து வரும் 3 – 5 வருடங்களில் ஏற்கனவே அர்ப்பணிக்கப்பட்டு பயன்படுத்தப்படவுள்ள கடன்களிலிருந்தான வெளிநாட்டுநிதியில் பகிரப்படாத மொத்த மீதியானது ஐ.அ.டொ. 8,022.2 மில்லியனாகக் காணப்பட்டது. (ரூபா. 1,217,251.9 மில்லியன்) பகிரப்படாத மொத்த மீதியில், பொருளாதார உட்கட்டமைப்பு துறைக்கு மெத்தமாக பகிரப்படாத மீதியாக ஐ.அ.டொ. 5,430.7 மில்லியன் அதாவது ஏறக்குறைய 68 சதவீதமும், வீதிகள், பாலங்கள் என்பவற்றிற்காக ஐ.அ.டொ. 2,751.5 மில்லியனும், நீரவழங்கல் மற்றும் துப்பரவேற்பாடுகள் துறைக்காக ஐ.அ.டொ. 1,488.5 மில்லியனும், சக்தி மற்றும் வலுதுறைக்காக ஐ.அ.டொ. 751.5 மில்லியனும் பகிரப்படாத மீதியாக காணப்படுகின்றது.

வரைபு 5.3: 2017 எப்ரல் 30 ஆந் திகதியன்றுள்ளவாறு, அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டு பகிரப்படாத மீதி




**மூலம் : வெளிநாட்டுவளங்கள் திணைக்களம்**

**குறிப்பு : அரசுடைமை தொழில் முயற்சிகளுக்காக அர்ப்பணிக்கப்பட்டு பகிரப்படாத மீதி உள்ளடக்கப்படவில்லை ஏனையவை நெதர்லாந்து, மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திற்காக சர்வதேச வங்கி, அரேபிய பொருளாதார அபிவிருத்திக்கான சவுதி நிதியம், கொரியா, குவைத், ஐரோப்பிய முதலீட்டு வங்கி, ஸ்பெயின், விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம், ஐக்கிய இராச்சியம், டென்மார்க், ஜெர்மனி, ஐக்கியநாடுகள், பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, சுவிடன் மற்றும் பெல்ஜியம்**

**அட்டவணை: 5.3 துறைரீதியாகபகிரப்பட்டும் பயன்படுத்தப்படாதமீதி**

**2017 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு**

| பொருளாதாரதுறை | பகிரப்பட்டுபயன்படுத்தப்படாதமீதி (மில்) | |
|---|---|---|
| | ரூபா. | ஐ.அ.டொ. |
| **விவசாயம்** | **135,270.5** | **891.5** |
| விவசாயம் | 19,442.1 | 128.1 |
| மீன்பிடி | 197.3 | 1.3 |
| கால்நடைஅபிவிருத்தி | 14,832.0 | 97.7 |
| நிலம் பெருந்தோட்டம் மற்றும் நீர்பாசனம் | 100,799.1 | 664.4 |
| **பொருளாதார உட்கட்டமைப்பு** | **824,397.5** | **5,430.7** |
| போக்குவரத்து | 47,485.9 | 313.0 |
| துறைமுகங்கள்,கப்பற்போக்குவரத்து | 19,528.0 | 126.2 |
| சக்தி,வலு | 114,023.4 | 751.5 |
| நீர் வழங்கல்,துப்பரவேற்பாடு | 225,865.5 | 1,488.5 |
| வீதிகள்,பாலங்கள் | 417,494.7 | 2,751.5 |
| **சமூக உட்கட்டமைப்பு** | **113,171.8** | **746.0** |
| கல்வி,தொழிற்பயிற்சி | 39,256.5 | 258.8 |
| சுகாதாரம்,சமூகநலனோம்பு | 20,933.7 | 138.0 |
| வீடமைப்பு,நகரஅபிவிருத்தி | 50,720.5 | 334.3 |
| புனர்நிர்மாணம் | 2,261.1 | 14.9 |
| **நிதி, வங்கியிடல்** | **53,680.5** | **353.8** |
| **நிறுவனமற்றும் கைத்தொழில் அபிவிருத்தி** | **2,907.0** | **19.2** |
| **சுற்றாடல்** | **14,084.1** | **92.8** |
| **ஏனைய** | **73,740.5** | **488.2** |
| **மொத்தம்** | **1,217,251.9** | **8,022.2** |

**மூலம்:வெளிநாட்டுவளங்கள் திணைக்களம்**

**குறிப்பு : அரசுடைமைதொழில்முயற்சிகளுக்குபகிரப்பட்டுபயன்படுத்தப்படாதமீதிஉள்ளடக்கப்படவில்லை**

**ஏனையவை: ஊடகம் வர்த்தகம்,அனர்த்தமுகாமைமற்றும் பாதுகாப்பு**

## 5.4 வெளிநாட்டுபடுகடன் நிலுவையும் வெளிநாட்டுபடு கடன் சேவை கொடுப்பனவுகளும்

2017 எப்ரல் இறுதியிலுள்ளவாறு, அரசாங்கத்தின் மொத்த படுகடன் நிலுவை ஐ.அ.டொ. 25.6 பில்லியனாகவும் (அல்லது ரூபா. 3,886.5 பில்லியனாக) அரசாங்கத்தின் மொத்தபடுகடன் சேவைக் கொடுப்பனவுகள் ஐ.அ.டொ. 713.4 மில்லியனாகவும் காணப்பட்டது. அதில், ஐ.அ.டொ. 332.9 மில்லியன் மூலதனக் கொடுப்பனவிற்காகவும் ஐ.அ.டொ. 313.3 மில்லியன் வட்டிக் கொடுப்பன விற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வரைபு 5.4: 2017 சனவரி - ஏப்ரல் வரையில் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள், 2017 இன் எஞ்சிய காலப்பகுதிக்கான எதிர்வகூறல் (ஐ.அ.டொ.மில்)




**மூலம்:வெளிநாட்டுவளங்கள் திணைக்களம்**

2017 ஆம் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட மொத்தப் படுகடன் சேவைக் கொடுப்பனவு ஐ.அ.டொ. 2,183.0 மில்லியனாகும். அதில், 2017 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் படுகடனின் 30 சதவீதம் ஏற்கனவே கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டுக்கான படுகடன் சேவைக் கொடுப்பனவுகளின் மாதாந்த பொழிப்பு வரைபு 5.4 இல் காட்டப்பட்டுள்ளது.